# இனிய கதை

பூவை எஸ். ஆறுமுகம்

அழகுப் பதிப்பகம்

காரைக்குடி

விலை ரூ. 3–00

அச்சிட்டோர்: சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி.

# உங்களுடன் ஒருகணம்..

குறிப்பிட்ட ஒரு கதையின் பெயரை தொகுதிக்கு மகுடமாகச் சூட்டி மகிழ் இலக்கிய உலகில் ஒரு சம்பிரதாயமாகவே வருகிறது. இந்நிலையிலே, நா ஞ, இத் தெ "இனிய கதைகள்" என்ற பொதுப்படைய தலைப்பைச் சூட்டி வெளியிட்டிருக்கிறேன். சிந்தனை தூண்டிவிடக்கூடிய கதைகள் சில இதில் இடம் உள்ளன. இக்கதைகளின் ஊடே அதற்குரிய இயல்பு இனிமைப் பண்பும் இழையோடிக் கிடக்கிறது.

ஆகவே, "இனிய கதைகள்" என்ற தலைப பொருந்திவிடுகிறதல்லவா ?

சரி!

இப்போது, ஓரிரு ஏடுகளில் ஓர் அதிசயத்தைக் கண்டேன். சிறு கதைகளைப்பற்றிய ஞானமற்றவர்களுக்கெல்லாம் நூல்களை விமர்சனத்துக்கு அனுப்புகிறார்கள். அதாவது, அத்தகைய விமர்சன பூசாரிகள் அங்குலக் கணக்கில் பணம் வாங்க சிபாரிசுமூலம் விமர்சனத்துக்குப் புத்தகங்களை வாங்கிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையிலே, யாரோ ஒரு பாணர் என்னுடைய ஒரு கதைத் தொகுப்பை விமர்சனம் செய்யும்போது, அச்சகத்தில் ஏற்பட்ட பிழைகள் என்ற உண்மைகூட புரியாமல், என் பேரில் பழியைச் சுமத்தினர். அச்சுப் பிழைகள் இருந்த வரிகளையெல்லாம் எழுதிக்காட்டினர். அவ் விமர்சனத்தில் அவர்செய்த பிழைகளுக்கு யார் பதில் சொல்வார்களோ? ஆக, வரிகள் கூடினால்தானே பணம் அதிகம் கிடைக்கும்! .. இப்படிப்பட்ட ஞான சூன்யங்களிடம் விமர்சனப் பணியை ஒப்படைக்காமல் இருக்கவேண்டியது பத்திரிக்கைகளின் கடமையாகும்!

குறிப்பிட்ட 'கற்றுக்குட்டி' களுக்காகவே,
செல்லவேண்டி வந்தது. இத் தொகுப்புக்
தன்மை பற்றியும் எச்சரிக்கையுடன்
வேண்டியவனும் ஆனேன்.

கதைகள் "ஆனந்த விகடன்", "கல்கி",
" "அமுதசுரபி", "உமா", "சுதேசமித்திரன்",
முதலிய பத்திரிக்கைகளில் வெளியானவை.
ற இணைத்துக் கொள்ள அனுமதி வழங்கி
பாராட்டிய பத்திரிக்கை ஆசிரியர்களுக்கு என்
உரியது.

என் எழுத்துக்களிலே ஆர்வம்காட்டி, என் பாடல்களைத் தொடர்ந்து வெளியிட்டுவரும் "அழகுப் பதிப்பகம்" உரிமையாளர் திரு. கா. முத்து அவர்கட்கு நான் நிரம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

"உமா" ஏட்டில் நான் பணியாற்றியபோது, என் எழுத்துக்களுக்குப் பரிபூரண சுதந்திரம் நல்கி, என் எழுத்துக்களின் தனித் தன்மையை நிலைநாட்டச் செய்வதில் அக்கறைகாட்டிய அதிபர் திருமிகு ஜி. உமாபதி அவர்கட்கு இந் நூலினைப் பணிவன்புடன் காணிக்கையாக்குகிறேன்.

பூவைமாநகர்
1—1—66

பூவை எஸ். ஆறுமுகம்.

# பதிப்புரை

தமிழ் வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான திரு. பூவை எஸ். ஆறுமுகம். அவருடைய சிறு கதைகளையும், நாவல்களையும் விரும்பிப் படித்து மகிழ்ந்து வருகிறவர்கள் ஆயிரக்கணக்கான மக்கள். அவர் எழுதிய 12 சிறுகதைகளைக் கொண்ட தொகுப்பே இந்நூல்.

இந்நூலில் உள்ள கதைகள் இனிய கருத்துக்களைக் காண்டதாயும் சிந்தனையைத் தூண்டிவிடக் கூடிய தெரியும் இருக்கிறது.

இந்நூலில் உள்ள கதைகள் தமிழகத்தின் தலை சிறந்த (பத்திரிக்கைகள்) ஆனந்த விகடன், கல்கி, கலைமகள், அமுதசுரபி, உமா, சுதேசமித்திரன், குமுதம் ஆகியஇதழ்களில் பல்வேறுகாலங்களில்வெளியானவை. இவற்றை இணைத்துக் கொடுத்த ஆசிரியர் அவர்களுக்கும் நன்றி.

1—1—66 }
காரைக்குடி }

கா. முத்து.
அழகுப் பதிப்பகம்

# உள்ளே ...

| | | |
|---|---|---|
| இட்டார்க்கு இட்ட பலன் | .... | 9 |
| சஸ் பென்ஸ் | .... | 22 |
| கிழிசல் | .... | 3 |
| தேவர்களும் மாணிக்கமும் ! | .... | 46 |
| தேடிவந்த தெய்வம் | .... | 58 |
| கூப்பிட்ட குரல் | .... | 73 |
| சுனை முழக்கம் | .... | 79 |
| வலைச் சிலந்தி | .... | 94 |
| தங்கத் தாலி | .... | 117 |
| மொய்ப் பணம் | .... | 130 |
| குழந்தை உள்ளம் | .... | 143 |
| நடிகை | .... | 151 |

# இட்டார்க்கு இட்ட பலன்

கஞ்சிப் பொழுது, மண்பட்ட பாதங்களைப் புண்ணக்கும் வெயில்; இடையீடு விட்டு வீசியது அனற் காற்று.

கிழவி செல்லாயிக்கு ஏப்பம் பறிந்தது. அது பசி ஏப்பம்; அதில் ஓரளவு தண்ணீர் ஏப்பமும் கலந்திருந்தது பவளக்கொடியைப் பார்த்து மறுபடி அவள் கை ஏந்தினள்.

"பாட்டி, இன்னம் தாகம் அடங்கலையா!" என்று கேட்டாள் பவளக்கொடி.

"குடிக்கிறதுக்கு இல்லேம்மா; மூஞ்சியிலே தெளிச்சுக்கிட்டா ஒண்ணுக்குப் பாதியா சொகமா யிருக்குமில்லே அதுக்காவத்தான்!"

"கட்டைத் தூக்கிவிடட்டுமா, பாட்டி?"

"ஆமாம்மா!"

"ஏம்மா, சீமோடு வீட்டுச் சின்னையா அம்பலகாரர் பொண்ணுதானே நீ?"

இல்லே "நாட்டோடு வீட்டு நல்லதம்பித் தேவ மகள்!"

"தடங்கெட்டுப் போச்சு, தாயி. நீ பதினறும் பெத்துச் சொகமாக வாழணும்மா!"

"எனக்கு இன்னம் கல்யாணமே ஆகலேயே, கிழவியம்மா?"

"ஆனப்பறம் ஏஞ் சொல்லுப் பலிக்கும். ஆமா; ஓம்பேரு என்ன, தாயி?..."

"பவளக்கொடி"

"அப்படின்ன, அர்ச்சுன மவாராசா கெடைச்சதும் எனக்குக் கண்ணாலச் சாப்பாடு போடோணும்!"

"நிச்சயம் போடுவேன், பாட்டி!"

"நானும் நிச்சயமாப் பொளேச்சுக் கெடப்பேன்!"

பிரிந்த ஒற்றையடிப் பாதைகள் அவர்களைப் பிரித்துவிட்டு வேடிக்கை பார்த்தன.

அரிசிக் குறுணையை மடியிலிருந்து அவிழ்த்து முறத்தில் கொட்டினாள் செல்லாயி; வியர்வையைத் துடைத்த பின், சேலைத் தலைப்பை எடுத்து இடுப்பில் சுற்றிக்கொண்டாள்; மூச்சைக் கட்டிப்பிடித்து இழுத்த வண்ணம் முழங்காலிட்டு அமர்ந்தாள்; முறத்தைக் கையிலெடுத்துத் தட்டிப்புடைத்தாள்; கல்லும் நெல்லும் இந்தியப் பூகோளப் படத்தின் பாகிஸ்தானம் ஆயின.

எரிந்தது தீ; கொதித்தது நீர்; வெந்தது அரிசி; தப்பித் தவறிக் கிடந்தது தேங்காய்ச் சில் ஒன்று; சுற்றிச் சூழ்ந்திருந்த 'பூரணம்' மாயமானது; உப்பு புளி, மிளகாய் ஒப்பந்தப் பத்திரத்தில் கைநாட்டுச் செய்தன. துகையல் தயாரானது. வடி தண்ணீர் கல்சட்டியில்; மிஞ்சிய கஞ்சி பானையில்; எஞ்சியது மண்ணுக்கு.

மேலவளவுத் தொங்கலிலிருந்து தவழ்ந்து வந்த சினிமாப் பாட்டுக்களின் ஒலி! செல்லாயியின் நெஞ்சைத் தொட்டது. பசி வயிற்றைக் கிள்ளியெடுத்தது. வாரிச் சுருட்டிக்கொண்டு மெல்ல எழுந்தாள்; மெள்ள நடந்தாள்; மனம் அல்லாடியது; உடல் தள்ளாடியது. குருவி மணலைப் பிரிமணையாக்கி வைக்கப்பட்டிருந்த தண்ணீர்த் தவலை, அவளுக்குத்தான் பணிந்தது. திரும்பி நடந்தாள்; குடிசை வந்தது; குனிந்துதான் நுழைந்தாள்; இருந்தும் தலையை இடித்துத் தொலைத்தது. எண்சாண் உடம்பிற்கு எட்டடிக் குச்சுக்குமேல் தேவை ஏது? அங்காளம்மன் திருநாளில் பெரியட்டான் புரத்து மண்டகப்படி யன்றைக்கு குருக்கள் ஐயர் தந்த விபூதிப் பிரசாதம் காட்சியளித்தது. முதலில் எடுத்து அதை வாய்க்கும், அடுத்து அள்ளியதை நெற்றி மேட்டுக்கும்பகிர்ந்துகொண்டாள் அவள். கிழக்குப்பாரிசத்தில் பதித்திருந்த கண்ணாடித் துண்டொன்று, அவளை அழைத்தது. வதனம் பதித்தாள் கிழவி. சுருக்கம் விழுந்து தொங்கிய முகமும், குழிபறித்துக் கிடந்த கண்களும், நரைதிரண்ட கேசமும், ஒட்டிய வயிறும், உலர்ந்த உடலும், அப்போது அவளது பார்வையில் தட்டுப்படவில்லை. கடந்துவந்த நெருஞ்சி முள் காடு தெரிந்தது. தாண்டிவந்த அறுபத்தேழு மைல் கற்கள் காணக் கிடந்தன. தாம்பூலம் மாற்றி, பரிசம்போட்டு, தாலிபூட்டிய அவள் துணைவன் உடல், பொருள், ஆவி

மூன்றையும் கொடுப்பதாகக் 'கையடித்து'க் கொடுத்து விட்டுக் கடைசியில் ஓர் இரவிலே அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் உடல், பொருள், ஆவியில் ஒன்றையும் அவளுக்கென்று மிச்சம் வைக்காமல், மண்ணில் பதிந்து விண்ணுக்குச் சென்று விட்டான்! கொண்டவனும் கொண்டவளும் குப்பை கொட்டிய லட்சணத்துக்கு அடையாளமாகக் கிடைத்த பரிசான பதினாறு வயசு இளவட்டம் அக்கரைச் சீமைக்குச் சென்று இக்கரைக்கு வராமலேயே நாதியற்றுச் செத்து மடிந்து விட்டது.

'நானு ஏதுக்காவ உசிரோடு இருக்கோனும்''?— அலுத்துச் சலித்துப் போன தருணம் பார்த்து, இக் கேள்வி சம்மட்டியாக உருவாகி, அவளது தளர்ந்த நெஞ்சத்தினை மேலும் தளர்ச்சியடையச் செய்யத் தவறுவது கிடையாது. ஒருநாள். இரண்டுநாள் அனுபவம் மட்டும் அல்லவே இது?

வடித்த கஞ்சியின் சூடு ஆறிவிட்டது; வடிந்த கண்ணீரின் வெம்மை தணிந்தது. கிழவிக்குச் சிறுகுடலைப் பெருங்குடல் கவ்வியது. காய்ச்சின கஞ்சி, வெங்காயம், உப்புக்கறகள், துகையல் எல்லாம் அவளை வருந்தி அழைத்தன. குவளையில் கஞ்சியை ஊற்றினாள்; மடக் மடக் என்ற சத்தம் மூன்று விநாடிகளுக்கு ஒருமுறை கேட்டது. அரைக்கால் நாழி கூடத் தாண்டியிராது. கிண் கிண் என்று அவளுக்குத் தலை கனத்து வந்தது. பிறகு சுற்றவும் ஆரம்பித்தது. மறுவிநாடி அவள் வாந்தி பண்ணிவிட்டாள்.

அந்தி சந்திப் பொழுதிலே படுக்கக் கூடாதென்பார்கள் நாலுந் தெரிந்தவர்கள். இதற்குச் செல்லாயி விதி விலக்கு!

"எல்லார்க்கும் உண்டு இலையும் பழுப்பும்!"— பழமொழி இது. செல்லாயி பழுத்த இலை, பசுமை நரம் போடிய பழைய நாட்களை அவள் எண்ணிப் பெருமூச் செறியும் நிலையில் அவள் இல்லை. சுய நினைவு கிடையாது; கணப்புக் குழியின் தலைமாட்டில் படுத்துக்கிடப்பது போன்ற பிரமை ஒருசமயம்; மறுகணம் சாரலில் அகப் பட்டுக் கொண்ட மாதிரி ஒரு நடுக்கம். நெற்றியும் நெஞ் சும் கூத்துமேடை ஆயின. அவள் கைபிடித்த மண வாளனும் ஈன்றெடுத்த தனயனும் தோன்றுமல் இருந் தனர். உள்ளத்திடை சூழ்ந்த இருள் குடலையும் கப்பியது. பொக்கை வாய் ஓரங்களில் கண்ணீர் அணைந்தது. அவளையும் மறந்த நிலையில் அவளுள்ளே ஏதேதோ கனவுகளும் காட்சிகளும் சோபனம் கொட்டின,

உடலைத் தீண்டிய உணர்வு ஏற்பட்டதும், அவள் விழிமலர்ந்தாள்; அகல் விளக்கு எரிந்து கொண்டிருப் பதைக் கண்டாள்.

"நான்தான் முருகன், செல்லாயி அக்கா"! என்ற குரல் கேட்டது. வயது சென்றவன் ஒருவன் உட்கார்ந் திருந்தான். அவள் நிலை உணர்ந்து 'சுக்குத் தண்ணி' வைத்துக் கொணர்ந்திருந்தான் அவன்; பக்கத்துத் தோட்டம்தான் அவனுக்கு அரண்மனை, 'நல்ல மனம்' தான் அவனுடைய சொத்து. போதாதா?

'ஒரு மெடறுகுடிச்சுப்பிடு, அக்கா!"

"யாதொண்ணும் எனக்கு வேணாம்!.. நானு இனி யாருக்காக உசிரோடே வாழனும்?... இம்பிட்நிக்காலமா நானு ஏதுக்கு பூமிக்குப் பாரமா இருந்தேன்னு எனக்கு மட்டும் படலே!..."

முருகனின் கைப் பிடியிலிருந்த லோட்டா நடுங்கிக் கொண்டிருந்தது.

"அப்படி யெல்லாம் சொல்லாதே. தர்மராசா நம்ப ளுக்கு ஒறவா என்ன, நம்பமனசுப்படி நடக்கறதுக்கு?... ம்!...இதைக் குடிச்சிடு அப்பாலே சுடு கஞ்சி கொண்டா ரேன்."

அன்பு எதையும் கேட்பதில்லை என்பார்கள். ஆனல் அவளோ தண்ணீரைக் கொடுத்துக் கொண்டிருந்தாள். சற்று முன்னம் உணர்வு தப்பிய கோலத்தில் நடந்த போராட்டத்தையும் குழப்பத்தையும் எண்ணிப் பார்க்க முயற்சி செய்தது அவள்வரை விரயமே!

பிடிவாதத்துக்கு மருந்து கொடுக்கப்பட்டது.

"முன்னே போலே இப்ப ஓடித்திரிஞ்சு வேலை செய்ய ஏலல்லேயே, தம்பி!... அன்னன்னையப் பொழு தைக் கடத்தோணுமே, என்ன செய்யிறது?"

சுள்ளி கொண்டு வருவாள்; புல்கட்டு சுமப்பாள்; இலைதழை சேகரம் செய்வாள்; அரிசி புடைப்பாள்; பாத்திரம் பண்டம் கழுவுவாள்; எடுபிடி அலுவல் அவ ளுக்கு அத்துபடி. செல்லாயியின் வாழ்க்கை அனுபவங் கள் இவை. சாண்வயிற்றுக்குப் 'பதில்' சொன்ன உழைப்பின் சுருக்கம் இது.

"அக்கா, உன்னோட சொந்தக்காரரு கந்தசாமி கிட்டே நீ குடுத்து வச்சிருக்கிற பணத்தை வாங்கு; முதலிலே வைத்தியர்கிட்டே கைகாட்டி மருந்துசாப்பிடு; அப்புறம் வயத்துக்கும் வஞ்சனை செய்யாமச் சாப்பிடு!"

"ஆபத்து சமயத்துக்கு ஒத்தாசையா இருக்கணு மின்னு இருபத்தேளு ரூவா என்னோட பணம் அங்கே இருக்கு; அம்புட்டுத்தான்! எல்லாத்தையும் ஒரேமுட் டாச் செலவு செஞ்சிட்டா, அப்பாலே என்ன செய்யுறது முருகா?"

"மரம் வச்ச மகராசன் தண்ணி ஊத்தமாட்டாரு?... உடம்பை அலட்டிக்காம இதை முதலிலே குடி, அக்கா!"
"ம்!"—உந்திக்கமலத்திலிருந்து புறப்பட்டது!

தாமரைக் குளம் குறுஞ்சிரிப்பை உதிர்க்கத் தொடங்கியது.

'குடுகிடு கிழவி' 'குறுகுறு' வென நடை பயின்ருள் காளிஆத்தாள் வழிமறித்தாள்; தேடிவந்த தெய்வத்தை நாடிச்சென்று கை தொழுதாள்; செல்லாயியின் பார்வையைக் கண்ணீர் மறைத்தது. ஆமா, அந்தத்தம்பி சொன்னது நூத்திலே ஒரு சேதிதான்; அமயஞ் சமயத்துக் கிண்ணுதானே வாயைக் கட்டி வவுத்தைக் கட்டி காசு சேத்துக் குடுத்து வச்சிருக்கேன்; இதை விடவா வேறே கெட்டவேளே வேணும்?.........

இருபத்தேழு ரூபாய் அவள் முன் சலவைத்தாள் உருவில் காற்றில் அழகு காட்டிப் பறந்தது; மறைந்தது. சாலே ஐயர் கடைப் பட்சணங்கள் தோன்றின; ஆட்டு இறைச்சி, நண்டு, வெளவால், மீன் முதலியனவும் நாக்கில் நீர் ஊறச் செய்தன; மாற்றுப் புடவை சொக்குப் பொடி தூவத் தவறவில்லே. துளேத்தெடுத்த இரு மலேக்கூட ஒரு பொருட்டெனக் கருதாதவளாய் வழி மிதித்து விழி பதித்து நடந்தாள் அவள். சோளக் கதிர்கள் உடலில் உரசின, வயல் வரப்புகள் 'பித்த வெடிப்புப் பாதங்களே நோகச் செய்தன.

"வா, பெரியம்மாயி!"

"யாரது?"

"நாந்தான் கந்தசாமி!"

"ஒன்னேத்தா தேடி வந்தேன் தம்பீ!"

',பையப் பாத்து இங்கிட்டாலே கோலி வா...!''

"ம்...மேலுக்கு முடியல்லேப்பா...!''

"ஐய, சேதி சொல்லப்புடாதா, பெரியம்மாயி?''

"நாதி ஏது தம்பி?''

"ம்!''

"தம்பீ, உங்கிட்டே ஏம் பணம் எம்பிட்டு இருக்கு, நெனப்பு வருதா?''

"இருபத்தேழு ரூபா!''

"அம்பிட்டும் எனக்கு இப்பமே வேணும்!''

"ஆ!''

"என்ன தம்பி, அப்படி மலேச்சிட்டே;''

''ஒண்ணுமில்லே!''

"பொறவு?''

"ஆத்தா வூட்டுக்குப்போன எம் பொம்பளே அடுத்த கிழமைதான்வருவா; சரி, மதியத்துக்கு வீட்டுப்பக்கம்வா; கைச் செலவுக்கு ஒரு ரூவா தாரேன்!''

"என்ன தம்பி புதுக்கதையாப் படிக்கிறே?''

"ஏன், பூராவும் தேவைங்கிறீயாக்கும், பெரியம்மாயி!''

"ஆமா, ஆமா!''

''அதுதான் ஏலாது!',

''ஏனிங்கிறேன்?''

"நீ திடுதிப்னு வாயைப் பொளந்து புட்டா, அப்பாலே யாராம் ஒன்னேச் சுடுகாட்டுக்குத் தூக்கிக்கிட்

டுப் போயி அடக்கம் செய்யிறதாம்? ... ஒன் சொந்தக் காரன் நான்தானே செஞ்சாகணும்?......அதுக்கெல்லாம் செலவுக்கு வேணுமா?.........இல்லே தெரியாமத்தான் கேக்கறேன்!''

''ஐயையோ!...ஆத்தாடி!''

நல்ல வேளை பூமிவெடித்து அவளை விழுங்கிவிட வில்லை!

மிளகாய்ப் பாத்திப் பணியில் கவனம் பதித்திருந்த கந்தசாமி, குனிந்ததலை நிமிராமல் இருந்தான்.

''உசிரும் ஒடம்புமாத் திரியிறப்பத்தானே என் பணம் எனக்கு ஒதவோனும்?...நானு செத்துப்பூட்டா, அந்தக்கட்டையை அதோ அந்த எரியிற காளவாயிலே தூக்கி விசிறிப்போடு, தம்பி!......வாய்க்கு ஒணக்கையா வயசு காலத்திலே ஏதாச்சும் சாப்பிட்டுச் சாகிறேன், தம்பி! ஒனக்குக் கோடிப்புண்ணியம் கெடைக்கும். என்னோட காசு பணத்தை ஒந்தலையைச் சுத்தி ஏம் பக்கமா வீசிப்போடு!''...அழுதாள்!

கூன் விழுந்த முதுகு மேலும் குறுகி வளைந்தது. பட்டிக்காட்டு மண்ணும், பாடுபட்டு உழைத்த உழைப்பும் அவளைக் கண்டு எள்ளி நகையாடினவோ? பின், ஏன் கந்தசாமி அப்படிச் சிரிக்கிருன்?......எரியும் காளவாய் ஏன் அவ்வாறு நகைக்க வேண்டும்?

''சரிப்பா தம்பி, சரி!......நீ எம் பணத்தை அப்படியே பத்தரமாப் பூட்டி வச்சுக்க; சல்லிக்காசுகூட எனக்கு வேணும். நான் வாரேன்!......ம்ம்!......காளி ஆத்தா!......''

'மெய்யாலும் நானு இனிமே உசிரோடயிருக்கவே படாது!......'

கடந்த ஐந்து நாழிகைப் பொழுதாக செல்லாயி கிழவிக்கு இந்த ஓர் எண்ணம்தான் மேலோங்கி நின்றது. எட்டாத் தொலைவும், பயம் மண்டின காடும், விடுதலை தரவல்ல குன்றுகளின் கூட்டமுமே அவளுடைய சிந்தையில் சுழன்றன. வழிநாள் அவளுக்குப் பயம் காட்டிற்று; இது பரியந்தம் ஒண்ட இடம் தந்த அந்த மண் மாதாவுக்குக் கடைசி வணக்கம் சொல்லிவிட்டுப் புறப்பட்டாள் அவள். 'நாளைக்கு நீ கட்டையைப் போட்டுப்பிட்டா, அறுதைச் சாவுன்னு சொல்லி ஒன்னோட சொந்தக்காரனுன என்னைப் பாத்து ஊரு ஏசுமே?......' என்ற கந்தசாமியின் சொற்கள், அவள் காதுகளில் எதிரொலித்தன. என்னைப் படச்ச ஆத்தாவுக்குக் கூட இனிமெ என்னாலே ஒரு தொல்லையும் இருக்காது!'

செல்லாயி நடந்தாள்: முருகன் எதிர்ப்பட்டான். நடந்த கதைக்கு வியாக்யானம் கேட்டான்; சொன்னாள்.

"அக்கா இதிலே ஏதோ சூது இருக்கு; அவனுக்கு இப்ப கை ரொம்ப எறக்கமாம்; ஊருக்காட்டிலே பேசறுங்க; காய்கறி லாவாரத்திலேயும் ஏகப்பட்ட நஷ்டமாம்; உன்பணத்தைச் செலவழிச்சிருப்பான்! அதுக்குத்தான் இம்பிட்டுத் தில்லுமல்லு!......கந்தசாமி இப்பத்தான் ஒத்தக்கடை ரோட்டிலே ரேக்ளா வண்டியிலே போறுனும்...! பொட்டிக்கடை ராவுத்தர் சொன்னரு! வருத்தப்படாதே, அக்கா. மணியக்கார ஐயா கிட்டே அந்திக்குக் கண்டு பேசி, இதுக்கு ஒரு வழி செய்யறேன். அதுவரை நம்ப வீட்டிலேயே வந்து படுத்துக்க!" என்று உரைத்தான் முருகன்.

"ராவுலே கந்தசாமிப் பயல் வயல்காட்டுக்கு காவலுக்குப் போனதும், அவன் வீட்டை ஒடைச்சு எம் பணத்தை எடுத்துக்கிட்டு ஓடியாந்திட்டா என்ஞ?" என்று ஓடிய அந்த ஆலோசனை எங்கே? பொட்டுப் பொழுதுக்கு முந்திப்பிறந்த அந்த வைர நெஞ்சம் எங்கே?

"ம்!"

செல்லாயி சிரித்துக்கொண்டாள்.

"என்ஞக்கா, சிரிக்கிறே?"

"என்னை நெனச்சுச் சிரிக்கிறேன், முருகா;"

"ஏன்னமோ, எனக்கு எதும் புரிய மாட்டேங்குது!"

அவனுடன் அவள் நடந்து சென்று கொண்டிருந்தாள்.

"இந்தா பாட்டி, உன் பணம்!" பவளக்கொடி நின்ருள்.

"ஏது கண்ணு?

சிலையாஞள் கிழவி.

"நீங்க கந்தசாமி அண்ணுச்சியிடம் கொடுத்துவச்ச பணந்தான் இது. இந்தா எண்ணிக்க; சரியா இருபத்தேழு ரூபா இருக்கு. காலம்பற குடிக்காட்டிலே நீங்க ரெண்டு பேரும் தர்க்கம் பண்ணிக்கிட்டதை நான் சோளக்கொல்லை மறைவிலேருந்து ஒட்டுக்கேட்டேன். நீ வீட்டுக்குப் போனதும் அந்த அண்ணுச்சியோட வம்பு பண்ணி, பணத்தைக் கறந்துகிட்டு வந்திட்டேன்.

"நீ மகராசியாக எஞுதிக் கெடக்கணும், தாயே!"

நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றும் அவளுக்குக் கனவு போன்றே தென்பட்டது. ரூபாய்த் தாள்கள் சில, கிழவியின் மெலிந்த வலது கைக்குள் அடங்கின.

“ இனி ஒரு பத்து இருபது நாளைக்கு வேணுங்கிறதை நல்லாச் சாப்பிடு, பாட்டி!” என்றாள் பவளக்கொடி.

“ஆமா, ஆமா, நான் அக்காளைக் கவனிச்சுக்கிறேன், தங்கச்சி!” என ஆறுதல் தெரிவித்தான் முருகன்.

“இரு பவளக்கொடி, கடையிலேருந்துசுடுத்தண்ணி வாங்கியாரச் சொல்றேன்! நீ தாம்மா இப்ப எனக்குக் கைக்கு மெய்யான சாமி!”—வழிந்தது ஏழை மனம்.

அப்போது, “பாட்டி, உங்க கந்தசாமி ரேக்களா வண்டியிலே யிருந்து உருண்டு விழுந்து கெடந்ததைக் கண்டு மணியக்காரஐயா வண்டியிலேதூக்கிப்போட்டாந் திருக்காக; வழியிலேயே உயிர் போயிட்டுதாம். அவரு பெண்சாதிக்கு சொல்லி அனுப்ப வேணுமாம்; பிணத்தை அடக்கம் செய்யணும்; தம்பிடி காசு அங்கே இல்லையாம்!.........என்று துயரச் செய்தியை வெளியிட்டான் ஒருவன்.

“நெசம்மாவா?......ஐயோ......கந்தசாமி......”

ஒப்பாரி வைத்தாள் கிழவி. அடுத்த இமைப் பொழுதில் செல்லாயி ஓட்டமும் நடையுமாகச் சென்று கொண்டிருந்தாள்‘

“நானும் ஒருத்தி உசிரோட இருக்கிறப்போ, எங்க கந்தசாமித் தம்பி எப்பிடி நாதியத்தவனுவான் . ...?

இருபத்தேழுரூபாய் கூட்டுச்சேர்ந்துசிரிக்கலாயின.

பிறைக் கீற்றுக்கு அடியில் அமர்ந்திருந்தாள் பவளக்கொடி.

# 21

'காளி ஆத்தாள் விளையாட்டு வேடிக்கையாத்தான் அமைஞ்சிடுது!...ம்...என் தந்திரம் கடைசியிலே மண்ணுயிடுச்சு...ஆனு, பாவம், மண்ணுகிப்போன கந்தசாமி அண்ணுச்சிக்கு பாட்டிகிட்டேயிருந்து நல்ல பேர் வாங்கிக்கொடுத்திட்டேன்!........கிழவிக்குத்தான் எம்மாம் தங்கமான மனசு'...ம்...இட்டவங்களுக்கு இட்ட பலன்!...என் சொந்தப்பணம் இருபத்தேழு ரூபாய் நஷ்டமானு என்ன? ... என்பேச்சைத் தட்டாம, எங்க வீட்டிலேயே பாட்டி தங்கியிருக்கிறது. எனக்கு என்னமோ மனசுக்கு ரொம்ப நிம்மதியாத்தான் இருக்குது! ம்.. என் கல்யாணச் சாப்பாடு சாப்பிட்டாத் தான் அதுக்கு நிம்மதி வருமாம்! எல்லாம்! காளிஅம்மன் கருணைதான்...'

# சஸ்பென்ஸ்!

ஷண்முக விலாசம் ஜவுளிக்கடை ஒன்றுதான் மிச்சம் முதல் பீட்டில்!

அதுவும் முடிந்தது.

உள்ளங்கையில் லாகவமாக அடங்கிக் கிடந்த அந்தக் கடிதக் கட்டை விரித்துப் பரப்பித் துழாவிய கண்கள் குறிப்பிட்ட ஓர் இடத்தில் நின்று நிலைத்து நகன்ற பிறகே மீண்டும் முன் போலவே கடிதங்களுக்குள் புகுந்து மீண்டன. வேர்வை மண்டியது; துண்டு உதவியது.

கதிர்க் கோமானுக்கு இப்படியும் ஒரு சினமா?

அறந்தாங்கி—வல்லவாரி பஸ்விழியை மறைத்து விட்டு வழியையும் மறைத்தது.

ஆனால் அவன் சுதாரித்துக் கொண்டான்.

அவன் புறப்படப் போனான். அதற்குள் என்னவோ ஒரு சந்தேகம். கிழக்குவசமாக மடங்கித்திரும்பிய

வன் திரும்ப மேற்குப் புறம் மண்டையைத் திருப்பிவிட லானன் 'ஆல் ரைட்' இனி ஒண்ணும் பாக்கி இல்லே இந்தப் பக்கத்துக்கு!...ம்.

அவன் நடை தொடர்ந்தான், நடை தொடர்ந்தது. வழி தொடர்ந்தான்; வழியும் தொடர்ந்தது.

அவன் அழகேசன்

அவன் பிறந்தது குபேர புரியா? இல்லே அழகா புரியா?

ஊஹூம்!

மலைக்கோட்டை உச்சிப் பிள்ளையார் கோயிலைச் சதமென்று நம்பியிருந்த குடும்பத்துக்குக் கிட்டிய தெய்வப் பிச்சை அவன். பிச்சை என்ற பெயரை மாற்றிக்கொண்டான். பெயரில் மட்டும் அழகு இருக்க வில்லை; உருவிலும் அழகு இருந்தது!

இப்போது அவனுக்கு வீரமா காளியம்மன்தான் துணை!

அரைக்கணம் நின்றன்; நெடுமூச்சுப் பிரிந்தது. நெஞ்சைத் தொட்டான். நெஞ்சம் தொட்டவள் நினைவில் நிழலாடி உயிரில் உறவாடினள். 'மங்களம்' இதழ்களின் ஈரம் உள்ளத்தினின்றும் ஊறியதோ? ஊறிய இள நகையினூடாக உயிர் தழைக்கக் கண்டான். அவ்வினிய நல்லுணர்வு அவனுக்கு வாழ்வாகியது. நடந்தான்; நடந்துகொண்டிருந்தான்.

அதோ கொல்லம் ஓடு போட்டிருக்கின்றதே ஒரு வீடு அதுதான் கள்ளர் தெருவுக்குத் தோரணவாயில் போலே!

அழகேசனுக்கு நெஞ்சு அடித்துக்கொண்டிருந்தது. திரும்பிய வேளையில் 'டீ' அடித்துக்கொண்டிருந்தவன் தென்பட்டான். தென்பட்ட அந்த ஓர் உறைக் கடிதத்தை மறுமுறையும் பார்த்துவிட்டு அந்தப்பார்வை உண்டாக்கிக் காட்டிய சுடுவெள்ளத்தின் உணர்வையும் நெகிழ்த்திவிட்டு தோளில் தொங்கிய காக்கிப் பையில் மீதிக் கடிதங்களை அழுத்திய வண்ணம் இதயத்தை அழுத்திய சுமையை இறக்க விழைந்து சாயாக்கடை பெஞ்சு ஒன்றில் குந்தியபோது வாசல் வழி கடந்த சினிமா வண்டியில் ஒட்டப்பட்டிருந்த அந்தத் திரை அழகியின் உருவத்தில் அவனுடைய மங்களம் 'மிக்ஸ்' ஆன விந்தையின் விரிப்பு அவனுள் சொர்க்கம் காட்ட அவ்விதமான அதிசயத் தெம்புடன் 'எல்லாம் எனை யாளும் ஈசன் செயல்' என்ற நடைமுறைப் போக்குடன் சாயாவை மிடறு இறக்கிச் சுவைத்துப் பருகத் தொடங்கினான்!

இந்த வாக்கியம் மட்டும் தானா பெரிது?

ஆம்; அவனுடைய பெருமூச்சுந்தான்!

சாயா கிளாஸையும் சில்லறையையும் நீட்டிவிட்டு கல்லாவில் கிடந்த செய்தித்தாளை எட்டி எடுத்தான். அதற்குள் எங்கிருந்தோ பூமணத்தின் நெடி காற்றில் மிதந்து வரவே நுகர்ந்தான்.

ஒரு ஜோடி!

இளம் வயசு.

நல்ல பொருத்தம்.

அழகேசனுக்கு வெட்கம் வந்துவிட்டது வெட்கம்!

இந்த வெட்கத்திற்கும் ஒரு கதை உண்டு.

சம்பளம் வந்தால் சாப்பாடு என்ற நிலையில் வாழ்ந்து காலம் தள்ளிய-காலத்தைத் தள்ளிய குடும்பம் அவனுடையது. பெற்றவர்களின் கனவை நிறைவேற்ற அவனே இலக்குப் புள்ளியும் ஆனான். ஆகவே அப்பாவுடன் மகனும் மகனுடன் அப்பாவும் ஒத்துப்போய்' வாழ்வின் சுமைக்குப் பங்கு ஏற்கவேண்டிய கட்டம் உருவானது. படித்தபின் அஞ்சல் சேவகன் அலுவலுக்குரிய பரீட்சை எழுதினான் அவன். அஞ்சேல் என்றது அஞ்சலகம். வேலை கிடைத்தது. தந்தையின் சேமிப்புடன் தனயனின் சேமிப்பும் இணைந்தது.

தலைமகனுக்குப் பெண் பார்க்கும் வேலை அம்மாவுக்கு வாய்த்தது. அவளுக்கும் ஒரு வேலை வேண்டுமல்லவா?

மங்களத்தின் ஜாதகம் ராஜ ராஜ சோழனின் பட்டணத்திலிருந்து பிரகதீஸ்வரர் ஆசியுடன் திருப்பதி எக்ஸ்பிரஸில் ஏறி வந்தது; அழகேசனும் மறு தினம் அதே வண்டியில் குடும்ப சகிதம் இறங்கி வரவேண்டியவன் ஆனான்.

இப்போது அதிர்ஷ்டம் இரங்கி வந்தது.

இயல்புகொண்ட அழகியான மங்களம் மங்கலத்தின் சின்னமாக-நாணத்தின் பதுமையாக இயற்கையான பண்புகொண்ட எளிய நாகரிகத்தின் புஷ்பமாக பொலிவு காட்டியபோது அப்பொலிவைப் பூரணமாக ரசிப்பதற்குள் அழகேசனுக்கு வெட்கம் வரவேண்டுமா பாவம்!

பாவமாவது?

அவன் புண்ணியம் செய்தவன் ஆயிற்றே! அதனால் தான் அழகேசனுக்கு இந்தப் புண்ணியவதி கிடைத்தாள்.

செய்தித்தாள் கூப்பிட்டது.

ஓட்டினான் மனத்தை; ஓட்டினான் பார்வையை.

புருஷனிடம் ஆசையாக சிமிக்கி வாங்கித் தரும்படி பலநாள் கேட்டாளாம் மனைவி கணவனால் வாங்கித்தர முடியவில்லையாம். இதனால் தாலி பெற்றவள் தாலி கட்டியவனை ஏசிப்பேச கடைசியில் வெட்டுப்பழிவரை வளர்ந்துவிட்டதாம்—எங்கோ ஓரிடத்திலே!

அழகேசனின் விரல் நடுக்கம் பத்திரிகையை நழுவ விட்டது.

இன்னொரு தலைப்பு.

'முதல் பிரசவத்தில் அழகு மனைவி மரணம்'

நெஞ்சை அடைத்தது.

பத்திரிகையைத் தூக்கி வீசிவிட்டு எழுந்து நடக்க முயன்றான் அவன். "மங்களம்..." என்று தன்னுள்-தன் உதட்டுக் கரைக்குள் மனையாட்டியின் திருப்பெயரை உச்சாடனம் செய்யத் தலைப்பட்டான் அவன்.

அதோ ஓர் அதிசயம்!

பாதிரிப் பழத்தின் இனிப்பும் ரோஜாப்பூவின் சிரிப்பும் இரண்டறக் கலந்துவிட்டனவே!

ஆஹா மங்களத்துக்கென்று ஒரு சிரிப்பா?

ஆஹா சிரிப்புக்கென்று ஒரு மங்களமா?

அந்தக் கனி துலங்கும் கருவச்சிரிப்புக்கு இப்படியும் ஒரு கனமா?

ஆமாம்!

பூங்காவின் முகப்பைக் கண்ட உடனேயே அதன் அழகை அமைப்பை-பூரிப்பை அனுபவிக்க எத்தனங் செய்யும் ரசிகனை ஒப்ப அழகேசன் ஆனான்.

சற்றுமுன் வாசித்த செய்தித் துணுக்குகள் மீண்டும் அலைபாய்ந்தன.

அவன் போக்கே தனி.

முதன் முதலிலேயே அவளிடம் அவன் சொன்னான் மங்களம் வாழ்க்கை என்கிறது ரொம்பச் சோதனை கொண்டது. நீயும் நானும் புதுசு. ஆனதாலே நாம ரெண்டுபேரும்தான் எதுக்கும் எப்பவும் மனசு ஒத்துப் போகவேணும் விரலுக்குத் தக்கனைதான் வீக்கம்: அது மாதிரிதான் நாமும் நம்ம வாழ்க்கையை அமைச்சுக்க வேணும். ஆனா மனசிலே எந்த ஒரு கிலேசத்தையும் ஆசையையும் தங்க வைக்கப்பிடாது. நம்மளுக்குள்ளே எந்த ஒரு சலனம் உண்டாச்சின்னாலும் அப்பவே தீர்த்துக்கிடுவோம்! இப்படிப்பட்ட விதத்திலே எல்லாம் நாம ஜாக்கிரதை காட்டாட்டிப் போனால்தான் வாழ்க்கை நம்மைச் சோதிக்க ஆரம்பிச்சிடும்; வாழ்க்கையும் நமக்குச் சோதனை ஆயிடும். அப்புறம் இதே வாழ்க்கை புதிராகவும் ஆகாமத் தப்பாது!...மனசுதான் எல்லாத்துக்கும் மூலம்! சும்மாவா சொல்லியிருக்காங்க மூத்தவுங்க 'மனம் கொண்டது மாளிகைன்னு'

அவள் லோட்டாவில் பானைத் தண்ணீர் கொணர்ந்தாள் நன்னாரிவேர் இதமான வாடையும் எலுமிச்சையின் ஆரோக்கிய நெடியும் அற்புதம்.

'ஒருவாய் குடிச்சிட்டு .. என்று ஆரம்பித்தவள் முடிக்கவில்லை.

ஒருவாய் தண்ணி குடிச்சிட்டு ரெண்டுவாய் பேச்சுப் பேசச் சொல்லுறீயாக்கும்? நீட்டிய நீரை ஊற்றிக் கொண்டு நேர்கொண்ட பார்வையால் அவள் பார்வையை அளந்து பேசினான் மென்னகையுடன் பேசினான்.

அவளோ சேலை முன்றானையைக் கொய்து செக்கச் சிவந்த அதரங்களுக்குள் திணித்தாள் அப்படியிருந்தும் முல்லை நகை வழியவே செய்தது. விலகியிருந்த மாரகச் சேலையைச் சீர்செய்தாள். சீர் தந்த இயற்கையின் லாவண்யம் அவளை வாழ்த்தியிருக்க வேண்டும்.

அழகேசனின் உத்தியோகம் அவனது அந்தரங்க சுத்தியான காதல் மங்களத்தின் பொறுப்புணர்ந்த தாம்பத்யக் கடமை அவளது அந்தரங்க சுத்தியான காதல் ஆகிய நாற்கோட்டுருவத்தில் காலம் ஓடியது; காலத்தை ஓட்டினார்கள்.

ஒருநாள்.

அழகேசன் வாந்தி எடுத்தான். மங்களம் உயிர் துடித்தாள்.

அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் அவன் அழுதே விட்டான். ஆனால் அவளை அவள் தேற்றத் தொடங்கியவுடனே அவன் அவளது குழந்தையானான்.

அடுத்தகணம் அவள் திடுதிப்பென்று வாந்திஎடுத்தாள் ஒருமனப்பட்ட இளந்தம்பதி என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும்.

பேஷ்!

இப்போது அவள் அவனுடைய குழந்தையானான், ஒரு ரகசியம் சொல்லட்டுமா?

அவர்கள் இருவருக்கும் குழந்தை ஒன்று வெகு விரைவில் கிடைக்கப் போகின்றது!

புளிய மரத்தடியில் சுகமான கற்பனையில் லயித்து ஒற்றைக் காலத்தவம் இயற்றியவாறு நின்றுகொண் ருந்த அவனுக்குச் சுயஞாபகம் வந்தது.

வாங்க ..?

'ம்...?

காற்றில் சிலும்பல் தட்டிப்பறந்த முடிஇழைஒன்றை ஒதுக்கியபடி அவன் சற்றே தயங்கிக்கொண்டு வாசற் படியிலேயே நின்று கையிலிருந்த அட்டை மடிப்பினைப் பிரித்து எதையோ பார்த்துக்கொண்டிருந்தான்.

'அத்தான்!'

'ம்!...'

'உள்ளே வாங்க!'

ம்! ..'

'கும்பா கழுவி வைக்கட்டா?'

ம்! ..ஊஹும்! இப்பவேண்டாம்! ட்யூட்டி கொஞ் சம் மிச்சம் இருக்குது!'

அதிசயப் பாவையான அவள் கொஞ்சம் நெருங்கி வந்தாள்; கதம்ப மணமும் நெருங்கி வந்தது. சாப்பிட் டுப்புட்டுப் போனா என்னவாம்? ரொம்ப நேரங்களிலே நீங்க ரொம்ப வேடிக்கை யானவங்களாத்தான் தோணு றீங்க? ஆமா உடம்பு சரிப்படலையா? மூஞ்சி என்னவோ மாதிரி இருக்கு! அவன் நெற்றிப் பொட்டில் சோற்றுக் கைவிரல் பதித்துப் பார்த்தாள்.

அவன் ஏறிட்டுவிழித்து அவளது தோள்களைத் தொட்டுவிட்டு அவளைப்பற்றியவனாக கூடத்திற்குச் சென்று பழைய பாவனையில் அரைக்கணச் சிந்தனைக்கு ஆளாகிவிட்டு பிறகு ஏதோ நினைப்பில் கோட்டுப் பையில் கையைத் துழாவியபோது ஒரு நாணயம் தட்டுப்பட்டது. அவளுக்குப் பலகாரத்துக்கும் பூவுக்கும் சரி சொல்லியபின் மீதமிருப்பது இருந்தால் அவனுக்

குச் சாயாவுக்கு உதவும் நினைவுகளின் தடத்தைவிட்டு விலகியபோது கொண்டவள் நின்ற தடத்தைவிட்டு விலகாமல் நிற்கக் கண்டான்.

'நேரம் ஜாஸ்தி ஆயிடுச்சுங்க!'

'எங்கே உன் கடிகாரத்திலேயா?'

'இல்லே உங்க கடிகாரத்திலே!'

இருவரும் சிரித்தார்கள் ஜோடியாக

காரணம் இதுதான் இருவருமே கடிகாரம் கட்டியிருக்கவில்லை!

ஊராட்சி மன்றத்திலிருந்து சங்கு ஊளையிட்டது. காட்டுப் பகுதி என்றால் அப்படித்தான்.

"மங்களா!"

"என்னங்க?"

அவள் அவனைப் பார்த்தாள்.

அவன் அவளைப் பார்த்தான்.

பரிவர்த்தனை செய்யப்பெற்ற பார்வையினால் விநாடிகள் ஊஞ்சலாடின.

இருந்திருந்தாற்போல ஏதோ சத்தம் பலமாகக் கேட்டது.

'என்ன சத்தம் மங்களா?'

'பக்கத்து வீட்டிலே தாங்க!'

சாமான்கள் புரண்டு சிதறிய சத்தம். அதைத் தொடர்ந்து அவலஓலம் அழுகை உருவெடுத்து ஒலித்தது.

பாவம்! அடுத்து வீட்டுக்காரர் தன் சம்சாரத்தை அடிக்கிறார்? மங்களத்தின் குரல் தழதழத்தது" ஏதோ

நகை நட்டு கேட்டிருக்குது அந்தப் பொண்ணு!... கடன்கப்பி வாங்கி அந்தப் பொண்ணுக்கு நிறையச் செஞ்சும் அதுக்குத் திருப்தி உண்டாகல்லே! ஓ! உள்ளதைக் கொண்டு மானமாத் திருப்திப்படலேன்னு அது என்ன பொண்ணுங்க? ஏங்க நான் சொல்றது தப்பா?

'யார் சொன்னது தப்புன்னு' என்று ஆமோதித்த அழகேசன் இப்போது பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்து வைத்துக் கொண்டு கணப்போது மலைப்புத் தட்டி நின்றான்.

'சோறு போடட்டுங்களா?'

'ட்யூட்டி இன்னும் முடியலை... !' என்று பதிலிறுத்தவாறு அக்கடிதத்தை எடுத்து மங்களத்திடம் நீட்டினான்.

'எனக்கா தபால்?' என்று வியந்தவண்ணம் கடிதத்தை நோட்டம்விட்டு பிறகு முகவரியில் கண்ணோட்டம் அமைத்தாள் அவள். முகம் சலனம் அடைய வேர்வை மணிகள் ஒலித்தன. பிரித்தாள். பெருமூச்சும் பிரிந்தது. தூணைச் சார்ந்து பதனமாக ஒட்டி நின்று கொண்டாள்.

அழகேசன் அவளையே வைத்த விழி அகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் மனம் அடித்துக் கொண்டது. திரும்பினான்.

மங்களம் எங்கே?

விரைந்தான்.

பூஜைக் கூடத்தில் 'விம்மல் ஒலி' சூடதீபாராதனை காட்டியது.

தாயே என்னை மன்னிச்சிடு .. எங்களை எப்பவும் கௌரவமாய் காப்பாத்தி வச்சிரு... அது போதும்!...'

அவள் எழுந்தாள் உடல்பாரம் அழுத்தியது. தடுமாறினாள். எழுந்து விட்டாள்.

அத்தான் என்னாலே உங்க தங்கமான மனசு இத்தனை நாளும் எத்தனை வேதனைப்பட்டிருக்குமோ? கடவுளே! சும்மா விளையாட்டுக்குச் சொன்னதை இப் பிடிப் பெரிசாக்கி உங்க தங்க மனசை அலட்டிக்கிடு வீங்கன்னு எனக்குத் தெரியவே தெரியாதுங்களே! ஆசைகளைப் பெரிசாக்கி வாழ்க்கையைச் சுருக்கிடுற பின்புத்தி எனக்கு எப்பவுமே ஒட்டாதுங்க! உங்க அன் பும் தயவும் தானே உயிர் உலகம் தெய்வம் எல்லாம்! என்னை மன்னிக்க மாட்டீங்களா?

அவனுடைய கரங்களைப் பற்றிக்கொண்டு தேம் பினாள்.

'மங்களா! நானா உன்னை மன்னிக்க? ... தாயே மஹேஸ்வரி!...என்ன சோதனை இது?...'

ஒரு கைப்பிடி சோறு கூடுதலாகவே உண்டனர்- இருவரும்!

அழுகையும் ஆனந்தமும் 'சஸ் பென்ஸ்' காட்டிய அத்தக் கடிதத்தை நீங்கள் பார்க்கலாமா?...

சரி சரி

ஆனால் உங்களுக்குள் ரகசியமாக இருக்கட்டும்!

ரகசியம்!

'பிரியமுள்ள மங்களா!

சவால் விடுத்தது. பின் கொண்ட சபதத்தில் உள்ளம் ஆறுதல் பெற்ருன் கண்மணி.

கையில் ஏந்திய தீபத்துடன் வெளியே வந்த பூவாயி, தன் கணவனை ஒருவிசை ஏற இறங்கப் பார்த்தாள். பிரமை பிடித்து மலைத்திருந்த கண்மணியின் முகத்தைக் கண்ட பூவாயிக்கு ஏனோ பயமாகப் போய் விட்டது. கூண்டினுள் நுழையும் பைங்கிளியைப் போன்று தட்டுத் தடுமாறினாள் அவள். கடந்த சில நாட்களாகவே அவள் அடிக்கடி ஊர்ப்பேச்சுக்களைப் பற்றிப் புலன் விசாரித்த வண்ணமாகவே இருந்தாள். காலந்தவறி இரவு வேலைகளில் தன் புருஷன் மனை மிதிப்பதற்குள் பூவாயிக்கு ஜீவன் அவள் வசம் தங்கமாட்டாது.

"என்னங்க என்னமோ போல் ஒருமாதிரி உட்கார்ந்திருக்கீங்களே ? ஏதாச்சும் தகவல்..."

"தகவல். என்ன பூவாயி? சும்மா போறவனை வலிய வம்புக்கு இழுக்க ஆசைப்படுகிருனும். வடிவேலு. வெள்ளம் தலைக்கு மேலே போனதுக்கப்புறம் சாண் போனால் என்ன முழம்போனு என்னுங்கற கதைதான். அடுத்த கிழமை ஐயனுறு திருநாளைக்கு வடிவேலுதான் குதிரை எடுக்கப் போருனும். எப்படியிருக்குது சேதி? வழக்கமா நடக்கும் முறைப்பிறகாரம் பார்த்தா நம்ப தானே இந்த வருசத்துக்குக் குதிரை எடுப்புக் கொண்டாட வேண்டியவுங்க".

"அப்ப டீன்னு வடிவேலுதான் திருவிழா துவக்குறதுன்னு முடிவாயிருச்சாமா? ஊராங்க ஏதும் சொல்லலையா?

"ஊராருங்களா? நீ பொம்பளே தானே, ஊராவது ஒண்ணுவது! பணக்காரன் பாரு அந்தப்பயமவன். இடிச்சபுளி மாதிரி எல்லோரும் வாயடைச்சுப் போயிட் டாங்க போல. ஆனு பாரு, பூவாயி, இந்தத்தரம் நான் முதல்லே 'குதிரை எடுப்பு' ஆரம்பிச்சுத் திருநாள் நடத்தல்லே அப்புறம்...'' என்று கூறி முடிப்பதற்குள் இடைமறித்த பூவாயி, "உஷ்; பேசாதிங்க! சேதி உருப்படியா வந்து சேரட்டும். அப்பாலே பேசிக்கலாம். ஐயனர் தெய்வத்துக்குக் கண் இருந்தாப் பார்த்துக் கட்டும். அடம்செய்யறவுங்க எப்படியும் கஷ்டம் அனுபவிக்காமலா போயிடுவாங்க" என்று சாந்தப் படுத்தினள்.

'ஐயனர் கோவில் திருவிழா' பூவாயின் மனத்தில் இன்பவேதனே யொன்றைச் சதா தூண்டிவிடும் ஓர் எச்சரிக்கை போல அமைந்து வந்ததை அவள் எங்ஙனம் உணராமல் இருக்க முடியும்? அத்தகைய ஓர் அனுபவம் அவள் பேதை உள்ளத்தில் இரண்டறக் கலப்பதற்கு ஏதுவாயிருந்தும் அதே கோவில் வட்டாரங்கள் தாமென்ருல் கேட்கவா வேண்டும். ஒரு நாள் அந்திமயங்கும் வேளே மேய்ந்து கொண்டிருந்த ஆடுகளே ஒதுக்கிவிட்டுக் கொஞ்சம் களேப்புத்தீர மணல் மேட்டில் சாய்ந்து படுத்திருந்தாள் பூவாயி. ஆனல் நெடுநேரம் தன்னேயே கொட்டக் கொட்ட விழித்து நோக்கிக் கொண்டிருந்த ஒரு வயதுப் பையனே அவள் அந்தக் கணம் பார்க்கவேயில்லே. பூவாயி வயது வந்த பெண் கல்யாணப் பருவம். வாலேக்குமரிக்கு என்னென்ன கனவுகளோ? எப்படிப்பட்ட எண்ணச் சூழ்நிலேயோ வாழ்க்கை வருங்காலம் பற்றி அவள் நெஞ்சம் எந்தப் பாணியில் மோடி பண்ணியதோ?

சுய நினைவு உருப்பெற்று விசித்தெழுந்த சமயத்தில் தான் அந்த வாலிபனைக் கண்டாள். உடனே பரபரப்பு; உவகைப் பெருமிதம். அப்புறம் குறு நகையை வதனத் திரையில் குறுக்குப் பாய்ச்சல் ஓடவிட்டாள்.

"பூவாயி, பொழுது சாயப்போவுதே. வீட்டுக்கு வரலையா ?"

அவள் ஆச்சரிய மடைந்தாள். "இந்த ஆளுக்கு எம் பேருகூடத் தெரியுதே! என்று வியந்தது அவள் மனம்!

"இதோ புறப்படப் போறேனே! ஆமா நீங்க......" என்று பூவாயி சுவாதீனத்துடன் கேட்டு நிறுத்தினாள். மாணிக்கத்தை இன்னுமொருமுறை நிமிர்ந்து பார்க்க வேண்டும் போலிருந்தது; பார்த்தாள் அடுத்தவிணுடி நிமிர்ந்த பார்வை கீழே தஞ்சமடைந்தது.

"நானு, இதோ–" எனக் கூறி "ட்ரியோ" வென்று ஓர் அதட்டுப் போட்டான் மாணிக்கம். சிதறிக் கிடந்த ஆடுகள் அப்படியே சரம் சரமாக ஒதுங்கி நின்றன, அணிவகுத்து நிற்கும் பட்டாளம் போன்று.

பூவாயி அதிசயித்தாள். அவள் கடை இதழில் புன் முறுவல் புறப்பட்டது. மாணிக்கம் சொக்கிப்போனான்.

அப்புறம் இருவருமே சேர்ந்து ஆடுகளை ஓட்டி வருவார்கள். தழைகண்ட இடங்களில் மேயவிட்டு மரத்து நிழலில் மாணிக்கமும் பூவாயியும் உட்கார்ந்து என்ன வெல்லாமோ பேசித் தீர்ப்பார்கள். இந்த நட்பு மூன்றும் பேருக்கு — ஏன் பூவாயியின் தகப்பனுருக்கே தெரியாது.

மாணிக்கம் ஒரு நாடோடி. ஊர் ஆடுகளை மேய்த்து ஒரு வழியாக வயிறு வளர்த்துவந்தான். அவன் ஆண முகன். விசாரிக்கப்போக அவனும் தன் இனம் என்ற புள்ளி விபரம் அறிந்துகொண்டதும் பூவாயிக்குச் சந்தோஷம் தாளவில்லை. "மாணிக்கம்" என்று வாய் நிறையப் பெயர் கூறி அழைத்துச் சிட்டுக் குருவிபோல பேசிப் பழகிவரலானுள் அவள்.

ஆனால் அன்று அப்படிப்பட்ட ஒரு தடங்கல் ஏற் படும் என்று பூவாயியோ அல்லது மாணிக்கமோ ஒரு போதும் நினைத்திருக்க மாட்டார்கள். பூவாயி அப் பொழுதுதான் வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். மாணிக் கமும் வந்திருந்தான். இரண்டு பேரையும் ஜோடியாகக் கண்டதும் அப்படியே சீறி விழுந்தான் பூவாயியின் தகப்பன்.

"பூவாயி, பெரிய பெண்ணு லட்சணமா இல்லையே! யாரோ ஒரு வழிப்போக்கனோடே கூடமாடப் பேசிப் பழகினு லேசிலே போகக்கூடிய தகவலா? அப்புறம் ஊர் வாயைத்தான் மூட ஏலுமா? இன்னிக்குச் சொல்றேன், இனி இப்படி அந்தப் பயலோட ஒரு பேச்சுக்கூடப் பேசக்கூடாது. மீறிப் பேசினதைக் கண்டா பெத்த மக ளின்னு பாராமல்கூடக் கொடுவாளாலே உன் தலையைச் சீவிப் போடுவேன்"... என்று எச்சரித்தான். அத்துடன் மாணிக்கத்தை நோக்கி, ஏய் பயலே, ஊருதேட வந்த வன் ஒழுங்கா முறையா இருக்கமாட்டாய் போலத் தோணுதே! ஜாக்கிரதையா இருந்தா இரு. இல்லாட்டி உன் குடிசை பறிபோயிடும். ஆமா, சொல்லிவிட்டேன்" என்று கர்ஜித்தான் அம்பலகாரன்.

அன்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டவர் கள்தாம். அப்புறம் நாளதுவரை வருடங்கள் இரண்டு

ஓடிவிட்டன. மாணிக்கத்தைப்பற்றிய விபரமே தெரியவில்லே.

மறுநாள் தன் மகளே அம்பலம் வாஞ்சையுடன் அழைத்து, “பூவாயி, நேத்து உன்னேக் கோவிச்சதுக்கு மனசு கலங்காதே. உன் நன்மைக்கோசரம் தானே இவ்வளவு பாடாய்ப்படறேன் நான். நம்ப கண்மணி அடுத்த மாசம் பிஞங்குச் சீமையிலேருந்து வரதாகத் தபால் போட்டிருக்கு. அதுக்கு உன்னேப் பரிசம் போட்டிருக்கப்போ அன்னியவங்களோடு சகவாசம் வச்சிருந்தாப் பாக்கிறவுங்க என்னதான் எண்ண மாட்டாங்க...” என்று புத்திபுகட்டிஞன்.

காலம் கரைந்தது. பூவாயினது பூங்கரம் பற்றிஞன் கண்மணி. நல்ல பொருத்தம் என்று பேசிக்கொண்டார்கள் நாட்டுப்புற ஜனங்கள்.

ஊர் என்ருல் சண்டையும் சச்சரவும் ரொம்பவும் சகஜம். என்ருலும் அந்த ஊரில் ஐயஞர் திருவிழாவை ஒட்டிக் கிளம்பின பூசலேப்போல் இதற்கு முன் நிகழ்ந்ததில்லே என்றுதான் சொல்லவேண்டும். நியாயம் தலேமறைவில் ஒதுங்கிக் கிடந்தது.

அந்தக் கிராமத்தில் இரண்டு “கரை”—அதாவது இரண்டு தரப்பு நாட்டாண்மை. ஒன்றிற்கு அதிபன் கண்மணி. எதிர்க்கட்சி வடிவேலுவின் தலேமை. ஒவ்வொரு உற்சவமும் ஆரம்பிப்பதற்கு முன் கோவில் சன்னதியில் எந்தக் கட்சி ‘குதிரை எடுப்பு’ எடுக்க வேண்டுமென்பதை நிர்ணயிக்கும்பொருட்டு சீட்டுக்கள் குலுக்கிப் போடுவார்கள். குலுக்கி எடுக்கப்பட்ட சீட்டின் உத்திரவை தெய்வக் கட்டளேயாக எண்ணி அதன்படி நடப்பார்கள். இதுவே நியதி. அம்மாதிரித்தான்

கண்மணி விழாவிற்கு உரியவன் என்று அன்று கண்டிருந்தது. ஆனால் வடிவேலு இதற்குச் சம்மதிக்க வில்லை. அவன் அந்த வட்டாரத்தில் பழைய பேர்வழி. ஆள்கட்டும் ஜாஸ்தி. இரண்டு வகையிலும் தன் பக்கம் வலு அதிகமாக இருக்கையில் கண்மணியைத் துச்சமாக எண்ணிவிட்டான் வடிவேலு.

"மாமா இந்தச் சங்கதியிலே நாம் தலையிடாமே ஒதுங்கிக்கிட்டா என்ன? வினை செஞ்சவுங்க வினை அனுபவிக்கமாட்டாமல் இருக்கமாட்டாங்க. மானங் கன்னியாக அம்பிட்டுக்கிட்டு அப்புறம்..." என்று எவ்வளவோ நயமாகக் கண்மணியிடம் சொல்லிப் பார்த்தாள் பூவாயி.

"உயிர்போனாலும் சரி, வடிவேலுவை இந்தத் தடவை ஒரு கை பார்த்து முடிச்சாத்தான் மனசு சும்மா கிடக்கும்" என்று சபதம் செய்துகொண்டான் கண்மணி.

பூவாயியின் விழிக்கோணத்தில் நான்கு முத்துக்கள்—கண்ணீர்! கதி கலங்கினாள்.

விடிந்தால் ஐயனார் கோவில் குதிரையெடுப்பு நாள் இரவு ஊரடங்கிய தருணம், புலர்ந்ததும் திருவிழாவைப் பற்றி எப்படிப்பட்ட பூசல்கள் உதயமாகுமோ என்று நினைத்து நெஞ்சுருகிய பூவாயிக்குத் தூக்கமே பிடிக்க வில்லை. "ஐயனாரு தெய்வமே, அத்தானுக்கு உன் கிருபையாலே சங்கடம் எதுவும் வராமல் நீதான் ஒத்தாசை செய்யனும். அது ஒண்டிக்கை மனுசன்" என்று வேண்டிக்கொண்டாள் அவள்.

வாசலில் காற்றுடப் படுத்திருந்தான் கண்மணி. அவன் கண்கள் விழித்திருந்தன. உள்ளமும் விழிப்பில்

ஈடுகொடுத்துச் சுழல்வட்டம் பாய்ந்தது. விடியவும் நடக்கவிருக்கும் சம்பவத்தைப் பற்றிச் சிந்தித்துப் பார்த் தான், யுத்த அரங்கிலே சிந்தனையைச் செலவிடும் தளபதி மாதிரி. அவனுக்கும் கையாட்கள் பலர் இருக் கத்தான் இருந்தனர். நியாயத்திற்குத்தானே மதிப்பு அதிகம் கிடைக்கும்?

'திடுதிப்'பென்று யாரோ மரத்தடியில் மறைந்து வருவது தெரிந்தது. உடனே 'விசுக்,கென்று எழுந் தான் கண்மணி. தன்னைப்பற்றி வேவு பார்க்க யாரை யாகிலும் வடிவேலு அனுப்பியிருப்பான் என்பதை அறிந்ததும் அவன் சந்தேகம் வலுக்க எத்தனித்தது.

"பூவாயி" என்று மெல்லக்குரல் கொடுத்து விட்டுக் கையில் லாந்தர் விளக்குடன் மெல்ல அடியெடுத்து வைத்தான் கண்மணி. நீண்ட சுழல் கழியுடன் ஓடி வந்தாள் பூவாயி. அவள் நீட்டிய கம்பை வாங்கி கண்மணி பதுங்கியிருந்த ஆளை ஒரு முறை உற்றுப் பார்த்து விட்டு, 'கட்டாயம் இந்தப் பயல் எதிரி ஆள் தான்' என்று சம்சயித்தவனாய்க் கம்பை ஓங்கி அந்தப் புதுமனிதன் மீது வீசப்போனான், ஆனால் அந்த ஆளை ஆழ்ந்து நோக்கினாள் பூவாயி.

"ஆ, மாணிக்கமா?" என்ற அவள் ஓலம் ஓசை எழுப்பி எதிரொலித்தது. கண்மணிக்குத் திகைப்பு மேலிட்டது. நல்ல வேளை அவன் ஒதுங்கினான்.

"மாணிக்கம், என்ன இப்படி இந்தக் கும்மிருட்டியே வந்திருக்கீங்க கொஞ்சம் உங்களை கவனிக்காமப் போயிருந்தால் எம்பிட்டு வினையா முடிஞ்சிருக்கும் ?"

"பூவாயி, உனக்கும் உன் புருசனுக்கும் ரகசியம் ஒண்ணுமே தெரியாதாங்காட்டியும். உங்க எதிரிகள்

அல்லாரும் உன் புருசனை அப்படியே அடிச்சுப்போட யோசனை பண்ணி ஆட்களைச் சேர்த்திருக்காங்க. சாயந்திரந்தான் சேதி விழுந்திச்சு. ஓடியாந்தேன், உங்ககிட்ட சொல்றத்துக்கு ஐயனுரு புண்ணியத்துலே நான் தப்பிச்சுட்டேன்........'' என்று இழுத்தான் மாணிக்கம்.

அப்பொழுது கொஞ்சந் தொலைவில் விளக்கு வெளிச்சமும் ஒருசிலர் வருவதும் தெரிந்தது. 'ஒரு வேளை வடிவேலு கோஷ்டியாத்தான் இருக்கும்' என்ற ஐயத்துடன் கண்மணி விரைந்தான் எதிர்நோக்கி, மாணிக்கமும், பூவாயியும் பின் தொடர்ந்தனர்.

''அண்ணுச்சி, உங்களை எங்க ஐயா வடிவேலு அழைச்சுக்கிட்டு வரச்சொன்னுருங்க. என்னமோ சமாச்சாரம் சொல்லணுமாம்'' என்று ஒருவன் ஓடிவந்து கூறினுன்.

''ஏலே, ஒன்னை எனக்குத் தொயுமடா. என்னை வஞ்சகமாகக் கொல்லச் செய்யற சூழ்ச்சியிலே இதுவும் ஒருவழியாக்கும்! யாருகிட்டே கயிறு திரிக்க உத்தேசம்? கண்மணியின் வார்த்தைகளில் கோபம் பொரிந்தது; எரிமலை வெடித்தது. பிரளயம் புரண்டது.

''அண்ணுச்சி, ஐயனுருமேலே ஆணையாச் சொல்லுறேன். நீங்க எதுவும் சந்தேகப் படாதீங்க. வடிவேலு எசமானுக்கு வழியிலே 'தேள்கொட்டி ரொம்ப தடபுடலாயிருக்கு. ஐயனுரு சோதனைதான் இப்படி நேர்ந்திருக்குன்னு பேசிக்கிருங்க.''

கண்மணிக்கு எல்லாம் புதிர்போலத் தோன்றியது. இருந்தும் நடையைக் கட்டினுன் வடிவேலுவிடம்.

அங்கே கண்ட காட்சி அவன் அளவற்ற அனுதாபத்திற் குள்ளாக்கியது. பாவம், துடித்துக்கிடந்தான் வடிவேலு. தன்னை எதிர்க்க அத்தனை ஆள் கட்டுடன் வரும்போது தான் இப்படி அவனுக்குத் தேள் கொட்டியிருக்ற தென்பதை அறிந்ததும் அவனுக்கி ஒருபுறம் வியப் பாகவும் இருந்தது.

"கண்மணி, ஐயனுரு எனக்குக் கண்ணைத்திறந்து விட்டிருச்சு. வழக்கத்தை விடாமல் காலம்பற குதிரை எடுப்புத் தொடங்கி திருநாளை சிறப்பாநடத்த ஏற்பாடு பண்ணு. உன் பொறுமைக்கு ஈடேயில்லே. உனக்குத் தீங்கு பண்ண எண்ணின என்னை சாமி செம்மையா தண்டிச்சுப்பிட்டாரு, ஐயோ; வலி பொறுக்கலேயே...... ....." என்று புலம்பிப் புரண்டான் வடிவேலு.

உடனே கண்மணியின் முயற்சியால் விஷம் லேசாக இறங்கிவந்தது. மறுபிறவி பெற்ற வனைப்போல வடிவேலு களிப்புற்றான்.

உலக ஞாபகம் அப்பொழுதுதான் வரப்பெற்றவர் களைப்போலப் பூவாயியும் மாணிக்கமும் ஒருவரை யொருவர் அதிசயத்துடன் பார்த்துக்கொண்டனர்.

"மாணிக்கம், உங்களுக்கு நானும் அத்தானும் ரொம்ப ரொம்பக் கடமைப்பட்டிருக்கோம். இந்த இரண்டு வருசமா உங்களைக் கண்ணுலே காணக்கூட முடியலேயே. நீங்கமட்டும்தான் வந்தீங்களா? உங்க பெண்டாட்டியையும் கூட்டிவாரதுதானே திருநாளைக்கு" என்று வாத்ஸல்யம் வழிந்தோடச் சிறு குழந்தையைப் போலக் கேட்டாள் பூவாயி.

"பூவாயி, எனக்குப் பெண்டாட்டியா? நிகரற்ற ஏழை அனுதைக்குக் கல்யாணம் ஒன்றுதான்

குறைச்சலா? அதைப்பற்றிய கவலைகூட எனக்குக் கிடையாது. ஆனா இன்னிக்குத்தான் எனக்கு என்னைப் பழைய மாணிக்கமாட்டம் தோணுது. அந்த நாளிலே உன்னோடே பேசிப் பழகியதைத் தப்பா நினைச்சு உன் அப்பா என்னைத் தூஷணையாப் பேசினார். ஆனா இந்த விளக்குப் பொதுவாச் சொல்றேன், உன்னைப்பற்றி எனக்கு எந்தவிதமானகல்மிஷமும் கிடையாதுங்கிறதை நீயாச்சும் உணராமலா இருந்திருப்பாய்? உன்னை என்னைக்கு முதல்முதல் கண்டேனோ அப்பவே எனக்குப் புதுத்தெம்பும் உயிரும் வந்திருச்சு. உன்னைப் பார்த்ததும் காய்ச்சலிலே செத்துப்போன என் தங்கச்சி மறு பிறவியெடுத்து வந்திருப்பது கணக்கா நெனைச்சுட்டேன். என் தங்கச்சி மாதிரியே அசலா இருக்கு உன் முகச்சாயல்'' அவன் கண்களில் கண்ணீர் மிதந்தது.

'தங்கச்சி' என்ற பாசம் நிறைந்த அழைப்பைக் கேட்டதும் 'அண்ணாச்சி' என்று பதில் விடுத்தாள் பூவாயி. புதையல் எடுத்த பொருளைப் போலப் பூவாயியை அழைத்துக் காதோடு காதாக ரகசியம் பேசினான் கண்மணி. அதைக் கேட்டதும் பூவாயிக்கு வாயெல்லாம்பல்லாகப் பரிணமித்து விட்டது. அவளுக்கு உடம்பு புல்லரித்தது!

பூவாயியும் கண்மணியும் பிரமாதமாக அப்படி என்ன ரகசியம் பேசிவிட்டார்கள் என்று தானே எண்ணுகிறீர்கள்? அடுத்த நாள் ஐயனார் கோவில் திருவிழாவிற்கெனக் கண்மணி தன் தங்கச்சியை வரவழைத்தான் அவள் பெயர் அமிர்தம். அழகுப் பாவையான அவளைக் கண்டதும் மாணிக்கம் அப்படியே சொக்கிவிட்டான். தங்களுடன் மாணிக்கம் என்றுமே தங்கவேண்டுமென்பது அவர்களது ஆசை. அதற்கு அமிர்தத்தை

அவனிடம் ஒப்படைக்க முடிவிட்டார்கள் துணைவனும் துணைவியும்.

மாணிக்கம் அண்ணாச்சி ரொம்பப் பாக்கியம் செஞ்சதுதான். இல்லாதபோனா, அந்தக் காலத்திலே தேவர்கள் அசுரர்களோடு சண்டைபோட்டு அமிர்தத்தைக் கடைந்து எடுத்ததாகக் கேள்விப்படறபோது அண்ணனுக்கு அமிர்தம் இவ்வளவு லகுவிலே கிடைச்சது அதிர்ஷ்டம்தானே?'' என்று பொங்கும் புளகிதத்தோடு பூவாயி கேலிசெய்வதைக் கண்ட மாணிக்கத்தின் அப்போதைய நிறைந்த மனத்தின் நிலையை எப்படி வருணிக்கமுடியும்?

# தேடிவந்த தெய்வம்

"அக்கா!" என்று கூப்பிட்டுக்கொண்டு வந்தாள் கமலா. தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டிருந்த நான் மெல்ல ஏறிட்டுப் பார்த்தேன். என் கண்களிலிருந்த நீர்த்திரை மறையவில்லை.

தொடர்ந்த இருமல் வந்து விட்டது, என் மெல்லிய உடலெல்லாம் தாளாத நோவு.

நான் கமலாவுக்குச் சொந்த அக்காளல்ல; ஆனாலும் நாங்கள் இருவரும் பழகிய முறை அப்படிப்பட்ட 'அக்காள்—தங்கை' பாந்தவ்யத்தை எங்களிடையே வித்திட்டிருந்தது. இப்போதைக்கும் கமலாதான் எனக்கு உடன் பிறந்தாளாகவும், படுத்த படுக்கையாகக் கிடந்த கடந்த நாலுமாதமாக என்னுடன் கூடவே இருந்து பணிவிடை புரியும் உயிர்த் தோழியாகவும்-என் பெற்றவளாகவும், உற்றவளாகவும்-ஆக எல்லாமாகவும் நிறைந்திருக்கிருள்!...

இரவு மணி பன்னிரெண்டு. எனக்கு வேளைப் பிரகாரம் கொடுக்க வேண்டிய மருந்தைக் குலுக்கினாள்; எனக்குக் குமட்டியது. அவுன்ஸ்கிளாஸில் விளக்கு வெளிச்சத்தில் கணக்கிட்டு அளவு மருந்தை ஊற்றி என்னிடம் நீட்டினாள். மருந்தைத் தரையில் கொட்டி விட்டு கிளாசை மேஜைமீது 'டங்' கென்று ஆத்திரத் துடன் வைத்தேன். அவள் முகத்தில் என்மீதுகொண்ட கோபத்தின் விளைவு. அவளுக்கு எதற்குமே உரிமை யுண்டு. நான் என்ன செய்யட்டும்? என் நிலை...... இதற்கு விடிவு......!

"அக்கா, என்றுமில்லாமல் ஏன் இப்படி மருந்தைக் கொட்டிவிட்டாய்? மருந்து குடித்து அது உடலில் சார்ந்தால்தானே உன் நோய் ஜல்தியில் குணமாகும்; உடம்பிலும் ரத்தம் ஊறும்..."

"என் சீக்குக் குணப்படவா? ஏன்? யாருக்காக?... ஆமாம்; என் உடம்பு சீக்கிரமே தேற வேண்டுமென்று அல்லும் பகலும் அனவரதமும் கவலைப்பட்டு உருக் குலைந்த, நிலைகுலைந்த, சீர்குலைந்த காலமும் ஒன்று இருந்தது வாஸ்தவம்தான். அது அன்று! என்றோ ஓர் நாள்! ஆனால் இன்றல்ல. இனி என்றுமே இல்லை இனி என் தேகம் சுகமடைய வேண்டவே வேண்டாம். சுகப் பட்டு, என் கண்முன் என் வீட்டில் என்னைக் கைப் பிடித்தவர் இன்னொருத்தியுடன் நடத்தப்போகும் காதல் நாடகத்தை இந்த ஜன்மத்தில் இந்தக் கண்களால் நான் பார்த்துக்கொண்டிருக்கவா?... ஊஹூம்; ஒருக் காலும் மாட்டேன். அதற்குள் என் உயிர் உடலைவிட்டுப் பிரிந்துவிடும். மங்களம்என்று எனக்கு எந்த வேளையில் பெயர் வைத்தார்களோ என் வாழ்வு அமங்களமாக முடியப் போகிறது!" என்று பித்துப் பிடித்தவளைப் போலக் கத்தினேன்.

மறுபடியும் இருமல் வந்து விட்டது. ரத்தமும் சளியுமாகத் தட்டு நிரம்பியது. இருமிய வேதனை கண்ணீருக்கு வழிவகுத்தது. ஐயோ... தலையணையில் சாய்ந்துகொண்டேன். கமலாவைப் பார்த்தேன். அவள் கண்களில் கண்ணீரைக் கண்டேன் "அக்கா" என்று என்னை அப்படியே கட்டிக்கொண்டு என் தலையை மிருதுவாகத் தடவிக்கொடுத்தாள்.

இரவு வளர்ந்தது; பிறை நிலா விண்ணில சிலம்பம் பழகிக்கொண்டிருந்தது மின்னும் நட்சத்திரங்களுடன், ஊதல் காற்று வேறு ..

"கமலம்!"

"அக்கா"

"பார்த்தாயா, இன்னும் 'அவர்' வீட்டுக்கு வரவில்லை. கொண்ட மனைவி குலைஉயிராக காய்ச்சலில் எமனுடன் போராடிக்கொண்டு சாகக் கிடக்கிறாளே என்ற கவலை துளியாவது அவருக்கு இருந்தால் இப்படி அவர் வீட்டை மறந்து என்னையே மறந்து இருப்பாரா!"

"உன் வீட்டுக்காரர் வரமாட்டார் என்றுதான் தோன்றுகிறது, அக்கா!"

"இன்றைக்கா? அல்லது என்றுமேயா?"

"வீணாக ஒன்றை ஒன்பதாகப் பெருக்கி உடலைப் போட்டு அலட்டிக்கொள்ளாதே, அக்கா வேளை கெட்ட வேளையில் இப்படிப்பட்ட மன வேதனை கூடவே கூடாது என்று டாக்டர் சொன்னதை மறந்து விடுகிறாயே...! இன்றுதான் அக்கா, அவர் வரமாட்டார். பட்டணத்துக்குப் புறப்பட்டாராம் உன் கணவர். என் அப்பா பார்த்தாராம்; சொன்னார். நாளை, மறுநாள் வந்துவிடலாம்..."

என் மேனி முழுமையும் மின்னொளி பாய்ந்தது: பதைபதைத்தேன். என் கணவர் பட்டணத்துக்கு என்னிடம் சொல்லாமல் கொள்ளாமல் போனதைப்பற்றிக் கூட மனசை அலட்டிக்கொள்ளவில்லை. ஆனால் இரண்டு நாள் முந்தி அவர் செய்த சபதம்தான் என்னைத் தூண்டிவிட்டு இழுத்து வேதனைப்படுத்தியது. உயிர் விளிம்பில் தொட்டும் தொடாமலும் என் உடம்பு உறவாடிக் கிடந்தது எவ்வளவு அபாக்கியவதி இந்த அபலை...!

மலைக்கோட்டை மணி நடுநிசியில் இரண்டு முறை ஒலித்து முடங்கியது.

'இவர் பட்டணம் போயிருக்கிறார். ஆம்; அவர் சபதத்தை நிறைவேற்றப் பட்டணம் போய்விட்டார். ஆண்பிள்ளை அவர். நானோ பெண்; பேதைப் பெண்...'

என் உள்மனம் நினைவுச் சரத்தைத் தொடுத்துக் கொண்டே போயிற்று. மனதிற்கு ஓய்வு ஏது? ஒழிவு ஏது? சலனம், சலனம்தான் போலும்! சலனம் என்றால் சாந்திக்கு வழி இராதா?

கீறல் பட்ட இசைத்தட்டு ஒலிப்பதிவைத் திரும்பத் திரும்ப ஒப்புவிக்குமல்லவா? அதேபோல் அந்தச் சம்பவம் என் நினைவில் தொப்பென்று குதித்து நின்றது.

'மங்களத்துக்கென்ன, அவளைப் பார்த்துவிட்டால் அவள் அழகில் சொக்கிப் போகாமல் எந்த மாப்பிள்ளையும் தப்ப முடியாது!'

என்றோ ஓர் தினம், என் திருமணத்தின் முன் என் பெற்றோர்கள் எனது கல்யாணம் பற்றி இப்படி விமரிசனம் செய்துகொண்டிருந்தார்கள். அது

நினைவுக்கு வருகிறது. நிஜமாகவே நான் அப்போ தெல்லாம் அழகின் உருவாகத்தான் திகழ்ந்துகொண் டிருந்தேன். அது ஒரு காலம்; இன்பப் பொழுது அது. அப்போதுதான் என்னை சேகரன் வலைவீசிப் பிடித்தார். என் அழகு அவரைக் கொள்ளைகொண்டதாம். எனக்கும் அவரைப் பிடித்துவிட்டது. கண் நிறைந்திருந்தார்; பி. ஏ. நடுத்தரக் குடும்பத்தினர். தேடிப்போன மூலிகை யாக பெண்பார்க்கப்போன பயணத்தில் நான் சிக்கினே னும்; வலை தானுகவே விரிக்கப்பட்டதாம். கண்ணி வைத்து விசிறிப் பிடித்துக்கொண்ட வெற்றியில் எனக்குக்கூடப் பங்கு உண்டாம். ஏனென்ருல் நான் அவரின் மறுபாதியாம்—இதையெல்லாம் நினைத்துக் கொண்டால் இப்போது அழுகை முட்டி வருகிறது. அந்த என் உயிர்த்துணைவர்தாஞ இன்று என்னை இப்படி வெறுத்து ஒதுக்கி விட்டார்...? கால மலரின் இரண்டு இதழ்கள் உதிர்வதற்குள்ளாகவே மலர் வாடி விடுவதா, என்ன?...

என்னவோ தோன்றியது; திரும்பினேன்; பார்த் தேன். வீட்டின் முன்பகுதித் தோட்டத்தில் அப்போது தான் முகையவிழ்ந்திருந்த மலரின் மதுவை உண்டு திளைத்துவிட்டு, மற்ருெரு மலருக்குத் தாவியோடிக் கொண்டிருந்தது வண்டொன்று.

வண்டு! எண்ணினேன். என் பதி தோன்றினூர். முதல் மலரைப்பற்றி நினைத்தேன். என் நிலை நினைவில் கிளைவிட்டது. சந்தர்ப்பங்கள் எப்படி எப்படியெல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் கருக்கொண்டுவிடுகின்றன?

காயும் கையுமாக கமலா என் சமீபம் வந்தாள். நான் அழுதுகொண்டிருந்ததைக்கண்டுவிட்டாள். நான் கண்ணீரைத் துடைத்துக்கொண்டேன். கடவுள்போல

அவள் மட்டும் கடந்த நாலு மாதமாக என்னுடன் இல்லையென்ருல்...! என்ருே பிறந்த நட்பு—அவளுக்குத் தான் நான்என்ருல் எவ்வளவு பிரியம்... என்றென்றும் அவளுக்குக் கடமைப் பட்டவள் நான்.

ஆனல்... என்றென்றும் என்னுடன் உயிருக் குயிராக இருக்க வேண்டிய, இருக்கக் கடமைப்பட்ட, இருப்பதாக அக்கினி சாட்சியாக உறுதி சொல்லி என் கைத்தலம்பற்றிய என் புருஷன்—அவர் நிலே, தற்போ தயப்போக்கு. அவர் ஆசை, முடிவு, எல்லாவற்றையும் விட அன்று என்னிடம் அவர் வீருப்புடன் போட்ட அந்தச் சபதம்.! அம்மம்மா...! ஐயையோ...! பெண்ணுகப் பிறந்தாலே என்ளுளும் துயர்தானே என்பதற்கு நான் ஒருத்திதான் எங்கள் வர்க்கத்தின் ஏகப்பிரதிநிதி யாக இருப்பேனே...? மங்கைராகப் பிறந்திட மாதவம் செய்திட வேண்டுமம்மா என்று எங்கள் பெருமையைப் பாடிய கவிமணியின் திருவாக்குக்கு நானும் பெருமை பூணும் பாக்கியம் பெற்றிருக்கப்படாதா? தெய்வமே!

சபதம்!...

சபதமா அது?

அன்று...உண்டு முடித்துப் படுத்தவள்தான். ஆனல் மறுநாள் உடம்பில் எனக்குக்காய்ச்சல் கண்டது. காய்ச்சலும் சாதாரணக் காய்ச்சலாக இல்லே, 'டபிள் நிமோனியா' வேளேக்கு வேளே மருந்து, மருந்துக்கு மருந்து, ஊசிக்கு ஊசி அவர் பணத்தைத் தண்ணீராகத் தான் செலவழித்தார். ஆபீஸில் கொடுத்த சம்பளப் பணம் டாக்டரிடம் கைமாறியது. வீட்டிலிருந்து தூது சென்ற தந்தியின் பலனுகை அவருக்கு 'பாங்க் டிராப்ட்' ரூபாய் ஐநூறுக்கு வந்தது. பணம் வந்த மாயம் அறிந்து தானே என்னவோ, என் ஜுரமும் விஷமாக ஏறியது.

நாட்கள் மாதங்களாயின. காய்ச்சல் முறைதவருமல் என்னைப் பற்றிக்கொண்டது. ஏறக்குறைய இரண்டா யிரம் ரூபாயையும், என் கணவரின் அயராத உடல் உழைப்பையும், இடைவெளியாக ஓடிச்சென்றுவிட்ட மூன்று மாதங்களையும் விழுங்கிவிட்டு 'ஏனோ தானோ' வென்று என் உயிர்மட்டும் உடலில் ஒட்டிக்கொண்டு இருந்தது.

உலகத்தை அன்று தான் நான் திரும்பிப் பார்த்தேன். பலபல நாட்களுக்குப் பின்—பலபல யுகயுகாந்திரங்களுக்குப் பிறகு, அன்றுதான் முதன் முதலாக பார்ப்பதுபோல என் துணைவரை மலர விழித்துப் பார்த்தேன், ஆசையுடன். ஆசைக் கனவு களுடன் - புனர்வாழ்வுபெற்ற பூரிப்புடன் புதுவெள்ளத் தின் மிதப்புடன். ஆனால்...இத்தனைக்கும் என் உரிமை உரிமையாளர் பதிலுக்கு ஒரு புன்னகை இழையைக்கூட உதிர்க்கவில்லை. அவர் முகம் வெறுப்பின் கோளமாகக் காணப்பட்டது. அந்தக் கோளத்தின் உருண்டை வடிவிலே எதிர்பாராத ஏமாற்றத்தை என்பதியிடம் வெறுப்பு, விரக்தி, ஈடுபாடிழந்த போக்கு, பெரியதொரு துன்பப் பிளவு ஆகியவைகளின் உருவங்களிலே கண்டேன் நான்! உலகம் நிலைபெயர்ந்து அதில் நான் வீழ்ந்தழிந்து விட்டமாதிரி துடித்துப்போனேன். அதுவே தான் என் தாம்பத்தியத்தின் திரும்பு முனையாக அமையுமென்று அன்று நான் என்ன கண்டேன்பேதை?

நான் ஒருத்தி இருப்பதையே அவர் மறந்து விட்டார். அப்படித்தான் சொல்லின அவரது அன்றாட நடவடிக்கைகள். இல்லையென்றால், செத்துப் பிழைத்த மனைவியிடம் ஆசைக்கு, ஆறுதலுக்கு ஒரே ஒரு தேர்தல் வார்த்தைகூடவா அவருக்குப் பஞ்சமாகி விட்டது? என் கணவர் என் முன் புதிராகத்தான் தோன்றினர்.

என் வாழ்வின் உயிர்ப்பே அப்பொழுது புதிராகத்தானே இயங்கியது ? ஆனால் என் விதி...! இல்லை யென்றால் எப்படி அன்றைக்கு நான் அவரிடம் அந்தச் சபதத்தைக் கூறியிருக்க முடியும்...?

ஏதோ ஓர் தெம்பு ஊறியது; வெறிகனன்றது; நான் என் கணவரின் தனியறைக்குப் போனேன். அவர்பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். நான் வந்ததை அவர் அறிவார்; அறிந்தார். என்னை அவர் முகங்கொடுத்துப் பார்க்கக்கூட இல்லை. எனக்கு நா துடித்தது.

"...உங்களை ஒன்று கேட்க வேண்டுமென்று ரொம்ப நாளாக யோசித்துக்கொண்டிருந்தேன். உங்களிடம் ஏதோ ஒரு பெரிய மாறுதலை நான் இப்போதெல்லாம் காணுகிறேன். ஏன் அப்படி? என்றேன் துயரம் சுருதி சேர்ந்த குரலில்.

"...நானும் உன்னிடம் சொல்ல வேண்டுமென்று தான் இருந்தேன். நீ முந்திவிட்டாய் ..நான் விரைவில் வேறொரு கலியாணம் பண்ணிக்கொள்ளப்போகிறேன்" என்று ஒரு பெரிய இடியை என் தலையில் அலக்காகத் தூக்கிப் போட்டார்.

செந்தழலில் நான் வெந்தேன்; இறவாமல் இறந்து கொண்டிருந்தேன்.

"வேறொரு திருமணம் செய்துகொள்ளப் போகிறீர்களா? நான் உயிருடன் இருக்கும்போதா? என் உயிர் உடலில் இருக்குமட்டும் மற்றொருத்திக்கு ஒரு நாளும் இந்த மங்களம் உரிமையை விட்டுக்கொடுக்கமாட்டாள் என்பதை மறவாதீர்கள்..." என்று அலறினேன்.

"உரிமையா? யார் உரிமை அது? யார் கொடுத்த உரிமை...? நீ இனி என்றுமே என் ஆசை மனைவியாகப் பள்ளியறை நாடமுடியாது...உன் கண் முன்னாலேயே அடுத்த மாசம் நான் வேறொரு திருமணம் செய்து கொள்ளுகிறேன். நன்றாகப் பார், என் சபதம் நிறை வேறுவதை...!" என்று வெறியுடன் முழங்கினார் அவர்.

"சபதமா செய்கிறீர்கள்? அப்படி உங்கள் கல்யாணம் நடந்தால், அது என் சாவின் அஸ்திவாரத் தில் தான் நடக்குமென்கிறதை மட்டும் ஞாபகம் வைத் துக்கொள்ளுங்கள் என்று பதில் சுபதம் போட்டுவிட்டு நான் ஓடிவந்து படுக்கையில் விழுந்து இரவெல்லாம் அழுது தீர்த்தேன். இப்படிப்பட்ட இரவுகளுக்கு என் வரை கணக்கேது?

பட்டணத்தில் என் கணவரின் முறைப்பெண் ஒருத்தி இருக்கிறாளாம். ஆரம்பத்தில் அவளைத்தான் மணப்பதாக இருந்ததாம் ஆனால் அந்தப் பெண்ணைவிட என் அழகுதான் அன்று என்னிடம் அவர் அப்படித் தஞ்சமடையச் செய்தது! ஆனால், இன்றோ...

அவர் அந்தப் பட்டணத்துப் பெண்ணைக் குறி வைத்து, மணம் முடிக்கத்தான் நேற்றுப் பட்டணம் போயிருக்கிறார் போலும்! அவர் சபதம்...ஐயோ...! ஆனால் நான்... என் உரிமை...!

"மங்களம், நிஜமாகவே உனக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னை மனைவியாக அடைய நான் பூர்வ ஜென்மத்தில் மிகவும் புண்ணியம் செய் திருக்கவேணும்...!"

ஓர் நாள் உணர்ச்சிக் குமிழ் பறிக்க என் கணவர் கூறிய வார்த்தைகள் இவை என்பதை நான் எப்படி மறப்பேன்?

அன்று என் கணவர் படுத்த படுக்கையாகிப் போனார். மரணப் படுக்கையில் அவரின் உயிர்க்கூடு ஊசலாடியது. அவர் நிலை எனக்குப் பயத்தை ஊட்டியது. அழுதேன் மாளாமல்; புலம்பினேன் விடாமல் அம்பிகையின் முன் என் மாங்கல்யத்தை வைத்துப் பூஜை பண்ணித் தீபங்காட்டினேன். தெய்வத்தை வேண்டிக் கொண்டேன்; காணிக்கைப் பிரார்த்தித்தேன்

இரவு காலங் கடந்துங்கூட, அவரின் தலைமாட்டில் உட்கார்ந்து, அவரது நெற்றியைத் தடவிவிட்டுக் கொண்டிருந்தேன். அவர் அப்பொழுது சற்றே கண்ணயர்ந்தார். எனக்கும் தூக்கம் சொக்கியது. தூங்கிப் போனேன். தூக்கத்தில் நான், "தெய்வமே என் மீது கருணை வை; எனக்குத் தாலி பாக்கியத்தை அருள் செய். என் கணவரின் உடலை சீராக்கு தாயே. இல்லை என்றால்...பூவும் மஞ்சளுமாய் முதலில் என்னை உன்னிடம் கூட்டிக்கொள்...என் புருஷன் இல்லையென்றால் என்வாழ்வும் இல்லை ..கடவுளே ..."என்று பலவாறு அரற்றிக்கொண்டிருந்தேனாம். என்னை எழுப்பிய என்னவர் நான் கூறியதை அப்படியே என்னிடம் ஒப்புவித்ததைக் கேட்கவே, எனக்குப் புல்லரித்தது.

அவர் கண்களில் நீர் வழியே, "மங்களம், நிஜமாக உனக்கு நான் ரொம்பவும் கடமைப்பட்டிருக்கிறேன். உன்னை மனைவியாக அடைய பூர்வ ஜென்மத்தில் நான் மிகவும் புண்ணியம் செய்திருக்க வேண்டும்..." என்றார் என்னை நோக்கிய வண்ணம். அந்த என் அதிபர்தானா

இன்று இப்படி என்னை விலக்கிவைத்து, வாழாவெட்டி யாக்கச் சபதம் போட்டுச் சென்றிருக்கிறார்?

உச்சிப் பொழுது.

கமலா மருந்து கொணர்ந்தாள். கையில் வாங்கி யவள் குடிப்பதற்கு யோசித்தேன். அதே சடுதியில் எதிரே நோக்கினேன் ஆ! என் தலை சுழன்றது; நான் சுழன்றேன். எதிரே நின்ற நிலைக்கண்ணாடியில் பிரதி பலித்த என் உருவத்தைப் பார்த்தேன். ரத்தமே அற்றுப் போய், பார்க்கவும் கூசும் முகத்துடன் குச்சி போன்று வெறும் உயிர்க் கூட்டைத்தான் அப்பொழுது கண்ணாடி யில் கண்டேன். அழுகை வெடித்துக் கிளம்பிற்று. ரோஜாவாக இருந்த நான் எப்படி மாறிப்போய் விட்டிருக்கிறேன்...! நான் உண்மையிலேயே மங்களம் தானா...? மது தீர்ந்து வெறுமையுடன் நிற்கும் மலர், தன்னைத் துறந்து வேறு மலருக்குத் தாவிச் செல்லும் வண்டைக் கண்டு பெருமூச்செறிய, அம்மலரைக்கண்டு நான் மனங் கலங்கியதும் நினைவுக்கு வந்தது. அப் பொழுதுதான் எனக்குப் புரிய ஆரம்பித்தது என் கணவரின் மாற்றத்துக்கு—மாற்றம் போதித்த சபதத் துக்குக் காரணம்! என் கணவர் என்னைச் சீந்தாததன் காரணங்களை அப்போதுதான் என் பெண் நெஞ்சம் உணரத் தொடங்கியது. அனைத்துக்கும் காரணம் எனது அழகு முழுதும் தேய்ந்தழிந்து போனதுதான்..! இதை திரும்பவும் மனசில் நினைக்கும்போதில், என் ஆவி பிரிந்துவிட்டால் போதுமென்றிருக்கிறதே! அந்தோ...!

அந்தக் கதை! கையில் பிரித்து வைத்திருந்த அந்தக் கதை என் நெஞ்சலைகளைப் புரட்டிவிட்டவாறு என் நினைவின் சுருதியாய் இயங்கிக் கிடந்தது.

வாய்த்த கணவனின் கடைசி ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டி, வாய்த்த மனைவியே அவனைத் தான்

விரும்பிய தாசி வீட்டுக்கு இட்டுச் சென்ற நளாயினி கதை அதில் இருந்தது.

கதையை எண்ணினேன்; என் கதையையும் எண்ணினேன்.

அன்று, என் உயிருள்ளமட்டும் என் உரிமையை விட்டுக்கொடுக்க முடியாதென்று அவரிடம் செய்த சபதம் என்னை இப்போது கேலி பண்ணியது. கொண்ட பதியின் இன்பமே தன் இன்பம் என்று கருதிய அந்தப் பெண் தெய்வம் நளாயினியின் கதை என் மனத்தை அரித்தது; சித்திரவதை செய்தது. அந்த நளாயனி மாதிரி நானும் ஓர்பெண் தெய்வமாக ஏன் ஆகக் கூடாது...? மின்னல்; முடிவு! என் மனச்சாட்சியின் வேதனை, என் முடிவில் நிம்மதி கண்டதோ?

"கமலா, கமலா!"

"அக்கா"

"கமலா, இன்றைக்கு ராத்திரி மெயிலுக்கு நான் மெட்ராஸ் போகவேண்டும். என் புருஷனிடம் போய் என் தவறுக்கு மன்னிப்பு வேண்டி, நானே முன் நின்று அவர் விரும்பும் பெண்ணுடன் அவர் கலியாணத்தை முடித்துவைக்கப்போகிறேன். கமலா, ஆச்சரியப்படு கிறாயா? என்னிடம் இனி அவர் என்ன இன்பத்தை எதிர்பார்க்க முடியும் என்று சிந்தித்துப் பார். உனக்கு என் இந்த மாற்றத்தின் காரணம் பதில் கூறும்......" என்றேன்.

'பூம்...பூம்'

வாசலில் டாக்ஸி ஒன்று ஹார்ன் கொடுத்து நின்றது. அடுத்த கணம் நான் என் கண்முன் கண்ட காட்சி...! "ஐயோ!" என்று அலறினேன்.

என் உயிர் துணைவரை தோளுடன் அணைத்துத் தாங்கியவாறு டிரைவர் மெல்லப் படுக்கையில் படுக்க வைத்தார். அவரையே இமைக்காமல் பார்த்துக்கொண்டிருந்த என் இமைகளில் கண்ணீர்க்குளம் சுரந்து வழிந்தது.

அவர் கண்ணைத் திறக்க அரைமணியானது. அப்பொழுதுதான் எனக்கு நல்ல மூச்சு வந்தது; உயிர் மீண்டது. ஓடிப்போய் என் தாலியை விளக்கொளியில் புன்னகைத்த தேவியின் முன் வைத்துக் கும்பிட்டுக் கண்களில் ஒத்திக்கொண்டு, கணவரிடம் ஓடினேன்,

“மங்களம்...!”

“உடம்பை அலட்டிக்கொள்ளாதீர்கள். நான் இன்று கமலாவுடன் உங்களைப் பார்க்கப் பட்டணம் புறப்படவிருந்தேன். நானே இருந்து உங்களுடைய திருமணத்தை நடத்தத்தான் புறப்பட்டேன். ஆனால் இப்படி உங்களை உடம்பெல்லாம் காயக் கட்டுகளுடன் காண்பேன் என்று கனவில்கூட எண்ணவில்லை நான்...” என்று விக்கலுக்கும் விம்மலுக்குமிடையே கூறினேன்.

“மங்களம் நீ என் தேடிவந்த தெய்வம். முன் ஒரு நாள் நான் சாகக் கிடந்தபோது, உன் தாலிப் பலம் தான் என்னைக் காப்பாற்றியது. இன்றும் அப்படித் தான், உன் தாலிதான் என் உயிரை உன்னிடம் மீட்டுச் சேர்த்தது. இல்லை யென்றால் நான் கார் விபத்தில் இந்நேரம் செத்திருப்பேன். விபத்தில் அகப்பட்டு அடிபட்ட என்னை ஆஸ்பத்திரியில் சேர்த்து இரண்டு மணி நேரம் கழிந்துதான் எனக்கு நினைவு வந்தது, அங்குவந்த வயதான கிழவிஒருத்தி என் நிலைக்கு இரங்கி “பாவம் எந்தப் புண்ணியவதியின் தாலி மகிமையோ பையன் இந்தமட்டும் தப்பிச்சிருக்கிறான். தலைக்குவந்தது

தலைப்பாகையோடே போயிட்டுது...'' என்று உணர்ந்து சொன்ன சொற்கள் என் கண்களைத் திறந்துவிட்டன. மங்களம், என் குற்றத்துக்குத் தண்டனை அடைந்து விட்டேன். இல்லையென்றால் பெண் பார்க்கப் போன வழியில் இப்படி விபத்து நேர்ந்திருக்குமா? மங்களம், என்னை மன்னித்துவிடு. கடந்த நாட்கள் கண்ணீருடன் கழியட்டும். அடுத்த வாரம் உன்னைப் பட்டணம் கூட்டிப் போகப் போகிறேன். உன்னைப் பழைய என் மங்களமாக்க, என் டாக்டர் நண்பர் ஒருவர் உறுதிசொல்லி இருக்கிறார்.

அவர்–என் கணவர் என் தலைமயிரை அன்புடன் கோதிவிட்டார். இந்த இன்ப ஸ்பரிசம் என் மீது பட்டு எவ்வளவு யுகங்களாகிவிட்டன! முழு உரிமை பூசி கண்களுடன் என் கணவரை... ஆம்; என் கணவரை ஆனந்தத்துடன் ஆழ்ந்து பார்த்தேன், என் கண்களில் கண்ணீர்; அவர் கண்களில் கண்ணீர். என்னையே நான் மறந்தேன்.

அப்பொழுது 'தபால்' என்ற ஒலி கேட்டது; ஓடினேன். தபால் ஒன்று வந்தது; அது என் துணைவருக்கு. பிரிக்கச் சொன்னார்; படித்தேன்.

''**சேகர் அத்தான் அவர்களுக்கு**

நீங்கள் என்னை இரண்டாந்தாரமாக மணந்து கொள்ள, என் அப்பாவிடம் பெற்றுவிட்ட உரிமையை அறிந்தேன். உங்களை அடைய நாளெல்லாம் கனவு கண்ட சமயம் ஒன்று இருந்தது மெய். ஆனால் அவ்வுரிமை அன்றே மங்களம் அக்காளுக்குச் சார்ந்ததாகி விட்டதே..! ஒரு பெண்ணின் கண்ணீர்த் தளத்தில் வாழ்வைத் தொடங்க எந்த இதயமுள்ள இன்னொரு

பெண் இதயமும் சம்மதிக்காது. இன்னொருத்தியின் கூந்தலிலிருந்த பூவை ஒரு பெண் தன் தலையில் சுமந்து கொள்ள விரும்பமாட்டாள்; அதில் பூர்ண மலர்ச்சியும், மணமும் இராது. அப்பாவின் உரிமை இனி உங்கள் வரை செல்லுபடியாகாது. என்மீது உங்களுக்கு உண்மை அன்பிருந்தால், தயவு செய்து அந்த அன்பு பூராவையும் மங்களம் அக்காளுக்கு அளித்து, அவளுக்கு மறு பிறவி அருளுங்கள். கைப்பிடித்த கணவராகிய உங்கள்கடமை அது. நீங்கள் அவளுக்கு அன்று தெய்வ சாட்சியாகப் பூட்டிய தாலியின் ஆணை அது. அவளது உரிமை அது!

இப்படிக்கு,
லலிதா''

நான் ஏந்தி நின்ற என் தாலியின் மீது எங்கள் இருவரின் ஆனந்தக் கண்ணீரை அன்புக் காணிக்கையாகச் சமர்ப்பித்துக்கொண்டிருந்தோம்!

# கூப்பிட்ட குரல்

மினர்வா தியேட்டரை ஒரு பார்வை பார்த்துக் கொண்டே ஏர்க் காலிலே ஓர் அழுத்தம் கொடுத்துப் பற்றியவாறு, தாதா முத்தியப்பன் தெருவுக்கு மடங்கினான் மணிமுத்தன். குதிகாலில், ரிக்ஷாவின் சக்கரங்கள் பட்டுப்பட்டு விலகின. அந்தி சந்தி வேளை. ஆனாலும், வெய்யிலின் உக்கிரம் தணிந்தால்தானே?

'ஒரு வழிப்பாதை' என்ற சட்டத்திற்குத் திரையிட்ட ஒரு லாரிக்காரன், நல்லவேளை மணிமுத்தன்மீது மோதாமல், சட்டத்தை மோதிய பெருமையுடன் பறந்தான். 'போலீஸ் விஸில்' ஒளியை அவன் செவிமடுக்க, பைத்தியமா, என்ன?

'பிராட்வே' வந்தது. சீனத்துக் கடைத் தெருவை நாடி ஓடினான். 'கிராக்கி' கிடைக்கும்; 'துட்டும்' கிட்டும். நடைபாதைக் குடும்பம் ஒன்று அவன் பார்வைக்குக் குறி வைத்தது. ரிக்ஷாவின் கைப் பிடியை லாகவமாகப் பற்றியவனாக, மூச்சையும் பற்றிப் பிடித்துக்கொண்டு,

அடிப் பாதங்களைத் தார் ரஸ்தாவில் தீர்க்கமாகப் பதித்த வண்ணம் நின்றான். சுடுநீரில் விழுந்த சுண்ணும்புக் கிளிஞ்சல்களென அவன் மனம் பொங்கி எழுந்தது. 'முத்தாயிக்கு உடம்பு சொகமாயிடுமா? பொழுதுக்குள் ளாற நாலு மூணு சம்பாரிச்சு, சுருக்குப் பையிலேயிருக்கிற துட்டையும் சேர்த்தடிச்சு, நல்ல டாக்டர் கிட்ட 'அதை' இட்டுக்கினு போய்க் காட்டி வைத்தியம் வாகனம் செஞ்சாத்தான் முறைக் காச்சல் ஒரு முட்டா நிற்கும்!...கார்ப்பரேஷன் மருந்துக்குத்தான் சீக்குபடிய மாட்டேங்குதே!...ஏழை பாழைங்ககிட்டயிருந்து பணம் காசு விலகியிருக்காப்பிலே, நோய் நொடியும் தள்ளிக் குந்தப்படாதா?...என்று எண்ணி மருகினான் அவன். கலங்கி வந்த கண்களைத் துடைத்துக் கொண்டான் அவன். நாகரீகத்தின் கெடுபிடிக்கு இலக்காகி நடை பயின்ற இளம் தம்பதியை ஒதுக்கியவாறு திரும்பினான். "சவாரி வேணுமா, சாமீ?" என்றான். சுமுகமான பதில் வரவில்லை. அவன் ரிக்ஷாவுடன் ஓடத் தொடங்கினான். ஓடினவன் ஓர் உருவத்தைக் கண்டு மகிழ்ந்தான். உருவத்தின் 'ஸ்லாக்' சட்டையில் தலை காட்டியவாறு இருந்த 'ஸ்டெதஸ் கோப்' கருவி அவனுள் பாலை வார்த்ததோ?

"சாமீ, வண்டி வேணுமா? எங்கே போகணும்?" என்று வினயமாக வினா விடுத்தான் ரிக்ஷாக்கார மணிமுத்தன்.

"தங்கச்சாலைவரை போகணும். ஒரு அவசரமான விஷயம். எனக்காகக் காத்துக் கொண்டிருப்பாங்க. சீக்கிரம் போயாகணும்!"

"ஓ!...ஒரு நிமிட்டிலே ஓட்டமா ஓடிப்புட்றேன், சாமி!"

“ ஓ.கே !”

நெரித்துப் புடைத்த மனித மந்தை, பஸ், கார் வகையருக்களைக் கடந்து ஓடிக்கொண்டிருந்தது ரிக்ஷா. முத்தாயியின் காதலுக்கு வசப்பட்ட இன்பக் கனவின் நிழலாட்டம் திரை ஓவியமாக அந்த ஏழையின் நெஞ்சரங்கில் ஓடிக் கொண்டேயிருந்தது. ஒரு வருஷத்துக்கு முன்.

ஒரு நாள் :

மினர்வாவுக்குச் சவாரி ஏற்றிவந்தான் மணிமுத்தன் கால் சூடு கபாலத்தில் தாக்கியது. ஆதித்த பகவானின் கிரணங்கள். அதுவே அவனுடைய இருள் எனும் கிரணத்தைப் போக்கடிக்கும் கிரணமென்பதை அவன் எப்படி அறிய முடியும்? பசி வயிற்றைக் கிள்ளவே, சாயாக் கடைக்குள் அடி எடுத்து வைக்கப் போனான். அத்தருணத்தில், அருகிலே ‘சோற்றுக்காரி’ ஒருத்தி அம்பிகையாய்த் தோன்றினாள். படியளக்கும் பாவையாகக் காட்சி அளித்தாள். வியர்வையைத் தெருக் குழாயடியில் வழித்துப் போட்டுவிட்டு நடந்தான். ரிக்ஷாவை ஓரமாக நிறுத்தினான். சோறு கேட்டான். கேட்டுக் கொண்டே, பணம் எடுக்க முனைந்தான். ஏமாற்றம் விடுகதை போட்டது. அவனது சின்னஞ்சிறு நாலணா பிளாஸ்டிக் பெட்டகத்தைக் காணவில்லை. என்ன அஜாக்கிரதை! எங்கே விழுந்தது?

“ இன்னா ரோசிக்கிறே?... துட்டு இல்லீயா?...ம், சரி, துன்னு!...” என்று சாப்பாட்டுப் பட்டையை நீட்டி ‘வெஞ்சன’மும் வைத்தாள் அந்தப் பெண்.

மணிமுத்தனுக்கு அவளுடைய அந்த அன்புச் செயலில், பசியெல்லாம் ‘கடலே கதி’யென்று ஓடி விட்டது. அவளுடைய ஆணைப்படி, அவன் உண்டான்.

சோறு, சொர்க்கத்தைக் காட்டாதா?

மணிமுத்தனுக்கு முத்தாயி வாழ்க்கைப்பட்டாள்!

"சாமி, ஏறங்குங்க!" என்றான் மணிமுத்தன்

ரிக்ஷாவினின்றும் இறங்கிய ஸ்லாக் சட்டை இளைஞர் சுற்று முற்றும் பார்வையைத் திரைவிரித்தார். இருள்திரை விலக்கப்பட்டிருந்தது. 'இந்த நடைபாதைக் குடிசைக்கு முன்னாலே என்னை நிறுத்தி விட்டிருக்கிறானே? ஏன்?'

"ஏனப்பா, நான் தங்கசாலைக்குப் போக வேண்டுமென்று சொல்ல வில்லையா?"

"யாரு சாமி இல்லேன்னு சொன்னது?"

"பின்னே...?

"சாமி! சாமி!...எம்பொஞ்சாதிக்கு விஷ சொரமுங்க நாலு நாளாச் சாப்பிட்ட மருந்துங்க ஒரு பலனையும் தரலே. ஒங்களைக் கண்டதும், எனக்குத் தெய்வத்தைக் கண்டாப்பிலே தோணுச்சு, ஒருவாட்டி வந்து பார்த்து மருந்துகுடுங்க. இந்தஏழைகையிலேஇருக்கிறதுட்டைத் தாரேனுங்க, சாமி!... கண்ணு மூடித் திறக்கிறத்துக்குள்ளே உங்களைத் தங்கசாலையிலே சேர்த்துப்புடுறேங்க. பெரிய மனசு பண்ணுங்க, டாக்டர் துரையே!" என்று விம்மினான் ரிக்ஷா ஓட்டி.

அந்த இளைஞனுக்குத் திகைப்பு வளர்ந்தது. "நான் டாக்டர் இல்லேப்பா!"

"ஏஞ்சாமி இப்படிப் பொய் பேசுறீங்க?...இந்த ஏழையைக் கண்டதும் ஒங்க உத்தியோகம்கூட மறந்து போச்சா? ஐயையோ!...முத்தாயி..."

அவன் கேவினான்.

அப்போதுதான் அந்த நபருக்கு விஷயம் புரிந்தது. தன்னைத்தானே ஒரு முறை பார்த்தார் சட்டையில் தான் வைத்திருந்த ஸ்டெதஸ்கோப்பை—நாடிக்குழலைப் பார்த்துக்கொண்டார்.

"இந்தப்பா! நான் டாக்டர் இல்லை; சத்தியம் நம்பு...'

"எம் பொஞ்சாதி சாகப் பிழைக்கக் கிடக்கிரு. ஒனக்கு ஈவிரக்கம் இல்லையா!... நீ பின்னே படிச்ச தெல்லாம் இப்பிடிப் புளுகத்தாளு? தூ!... நீ வெறும் மனுசன்!..." என்று உணர்ச்சி வசப்பட்டுக் கூறியவாறு, அந்த இளைஞனின் கன்னத்தில் அறைந்து விட்டான் ரிக்ஷாக்கார மணிமுத்தன்.

அக்கணத்தில், அங்கே 'டாக்ஸி' ஒன்று வந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய மனிதர், புயலாக மணிமுத்தன் முடியைப் பற்றி, ஏண்டா நாயே" என்று கர்ச்சனை செய்தவாறு கை ஓங்கிய வேளையில் ஸ்லாக் சட்டை இளைஞன் பாய்ந்து தடுத்தான். "அண்ணு! தவறு இந்த ஏழையினுடையதல்ல. என்னுடையது. அவனை ஒன்றும் செய்யாதீர்கள். நேற்றைய நாடகத் திற்காக நான் உங்களுடைய ஸ்டெதஸ்கோப்பை வாங்கி யிருந்தேனல்லவா? அதை. அப்படியே சட்டை யில் வைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். நாடிக்கருவி யைக்கண்டவுடன், என்னை அசல் டாக்டரென்று நம்பிய இந்த ஏழை, நான் சத்தியம் பண்ணியும் நம்ப மறுத்து விட்டான்!... இவன் மனைவி சாகப்பிழைக்கக் கிடக்கின்ற வேதனை தூண்டியவெறியில்தான் என்னை அறைந்தான்! பாவம்!...அண்ணு, எனக்காக ஒரு உபகாரம் செய்யுங் கள். அடுத்த தெரு திருப்பத்தில் உங்கள் காரைமறித்து அரைமணிக்கு முன் இதே ரிக்ஷாக்காரன்தான் கெஞ்சிக் கொண்டிருந்தான். தூரத்தே நின்று திரும்பிய நான்

அக்காட்சியைப் பார்த்தேன். ஆபத்துக்குதவ வேண்டுமென்றுதான் அவன் விம்மி வெடித்திருக்க வேண்டும். உங்களுக்கு ஏதோ அவசரம். காரில் பறந்துவிட்டீர்கள்!... அண்ணு, எனக்காக இப்போது ஓர் உபகாரம் செய்யுங்கள். இந்த ஏழையின் மனைவியைப் பிழைக்கச் செய்யுங்கள், அண்ணு!

இளைஞன் வேதனை விம்ம, கண்ணீர் வெடிக்கப் பேசினுன். ஓலைகள் பிய்ந்து கிடந்த குடிசையில் பெண் உருவம் ஒன்று படுத்துக்கிடந்த காட்சியை அவன் கண்டிருக்க வேண்டும்.

"சரி தம்பி, கடமையிலே மனிதத் தன்மையோடும் ஈவிரக்கம் கூடிய அன்புடனும் நடக்கும் எனக்குக்கூட இப்படிப்பட்ட சோதனைகளை ஆண்டவன் ஏன்தான் உண்டாக்குகிருரோ?.. நீ போ. தம்பி இந்த ரிக்ஷாவாலாவின் பெண்சாதியைப் பிழைக்க வைக்கிறேன்!..."

ரிக்ஷாக்காரன் நீர் சோர நின்றவன், "சாமி முதல்லே ஒங்களைக் கொண்டுபோய்த் தங்கசாலையிலே இறக்கிப்புடுகிறேன் சாமி!" என்றுன் இளைஞனிடம்.

"இருக்கட்டுமப்பா. முதலில் உன் பெண்சாதிக்கு சிகிச்சை செய்து விட்டபிறகு தம்பியை நானே காரில் தங்கசாலையில் கொண்டுபோய் இறக்கிவிட்டுக்கொள்கிறேன்." என்றவாறு அசல் டாக்டர் குடிசைக்குள் நுழைந்தார்.

"மாமோ!.. நம்ப அத்தை கோபிச்சுக்கிணு கண்ணு ரொண்டையும் தொறக்கவே மாட்டேங்குது மாமாவ்!..." என்று ஒரு சிறுமியின் குரல் அவர்களை வரவேற்றது.

பூசாரி வரம் கொடுத்தபோது, தெய்வம் மறுத்து விட்டதோ?...

# சுனை முழக்கம்

'ஆத்தாடி' என்று ஒரு கணம் வள்ளி அப்படியே நின்று விட்டாள். மேனியில் தவழ்ந்த ஈரப் புடவையும், இடுப்பிலிருந்த நிறைகுடமும்கூட அவளுக்கு அந்நேரம் வரைத் தன் நினைவைக் கொடுக்கவில்லை. சிமிழ் உதட் டோரத்தில் காந்தன் விரலொன்றை வைத்து ஆச்சரியப் பட்டுப் போனாள் அந்த வள்ளி.

ஆனந்த நடராஜர் கோவில் மணி 'டாண்-டாண்' என்று முழங்கியது. கொட்டு மேளமும் நாதசுரமும் சோபனம் கொட்டி முழங்கின. கோவில் திமிலோகப் பட்டது. மார்கழி மாதத் திருவாதிரைத் திருநாள் அன்றுதான் தொடக்கம்; அதிலும் 'சுனை முழக்கம்' திருவிழா என்றால் இந்தப் பத்து நாளும் பூவைமாநகரம் இந்திரலோகம்தான் இனி...

"இன்னிக்கு சாமிக்குக் காப்புக் கட்டுருங்க போலே. அதுக்குள்ளாற ஒருவருசம் மின்னல்கணக்கிலே மறைஞ் சிருச்சே. நேத்துத்தான் சுனையிலே சாமி அம்பு போட்

டது கணக்கிலே கண்ணுக்குள்ளே நிற்குது. ஊம் ” என்று மனதிற்குள் சொல்லிக்கொண்டாள் வள்ளி. அப்பொழுது அவளுக்கு நல்ல வேளையாக சுயநினைவும் வந்து குதித்தது. அவள் நடந்தாள்; கால் சதங்கைகள் சிருங்காரப் பண் பாடின.

காதி வஸ்திராலயத்தின் கட்டிடத்தைத் தாண்டி விட்டால் முனங்கில் இருப்பதுதான் வள்ளியின் வீடு. முனை திரும்பினாள். அவளைச் சுற்றி வளைத்து விடுவது போல 'பாண்டு' முழங்க வண்டியொன்று வந்தது. நோட்டீஸ் பல காற்றில்பறந்தன. வண்டியை ஒருமுறை நோட்டம் விட்டு பிறகு பற்றிய காகிதத் துண்டில் பார்வையைப் பரப்பினாள். புள்ளி விபரங்கள் கிடைத்தன நாடகக் கம்பெனியாரது நாடகம் நடராஜர் கோவில் கடைசித் திருவிழாவில் நடப்பதற்குரிய அறிவிப்பு இருந்தது நோட்டீஸில்.

“சபாசு...! வள்ளி திருமணமாமில்லே .. ஷோக்காத் தான் இருக்கும்... அதுவும் ராஜபார்ட் சுகுமாரன் வேலன், வேடன், விருத்தனாக வேஷம் கட்டி நடிக்கிற துன்னா ஒண்டக்கூட பொட்டு இடம் லேசிலே அம்பி டாதே... அடுத்த வீட்டு கோவிந்தம்மாவையும் துணை சேர்த்துக்கிட்டு மூச்சுக் காட்டாமல் நாடகத்துக்குப் போயிட்டு வரவேண்டியதுதான். மில்லுப் பொட்டலிலே தான் கூத்து. பார்த்த சுவடு அப்பாவுக்குத் தெரியாமல் வந்துடலாம்... ஆமா, அதுதான் சரி...”

நாடகப் பத்திரிகையில் இருந்த ராஜபார்ட் சுகுமாரனின் அழகு சொட்டும் உருவத்தை ஒரு தவனை நிமிர்ந்து உன்னிப்பாக உற்சாகம் குமிழியிடப் பார்த்தாள்; அதை அப்படியே கைக்குள் அடக்கிக் கொண்

டாள். அடுத்த விநாடி, அவள் கால்கள் இரண்டும் பின் வாங்கின. அவள் தகப்பன் மாசிமலைத் தேவரின் வார்த்தைகள் காதுகளில் முழங்கின; "அஞ்சலை, உன் பொண்ணுக்கிட்டே சொல்லிப்போடு. இனியும் அது பேச்சுக்கு 'உம்' கொட்டி சும்மா குந்தியிருக்க ஏலாது; வயசுப் பொண்ணை காலா காலத்திலே ஒரு ஆண் பிள்ளைகிட்டே ஒப்படைச்சாத்தானே நமக்கு மனசு நிம்மதிப்படும் .. பூவத்தக்குடியிலே உள்ள சின்னையாத் தேவர் மகன் சிங்காரம்தான் நமக்கு மருமகப் பையன்... தை பிறந்ததும் நாள் பார்த்துப் 'பரிசம்' போட்டுக் கண்ணாலம் செஞ்சிட வேண்டியதுதான்.. !"

குளித்து முழுகி வந்தவளுக்கு மாற்றுப் புடவை கட்டிக் கொள்ளும் நினைவு மறந்து தன் நிலை மறந்து பதுமையென எவ்வளவு நேரந்தான் வள்ளி நின்றிருந் தாளோ...? நீர் மண்டியிருந்த விழி வட்டங்களில் நாடக நோட்டீஸில் கண்ட அந்த ராஜபார்ட் சுகுமாரனின் உருவம் நிழலாடிக் கொண்டிருந்தது.

நகரத்தார் புதுமடத்தின் முகப்பில் கையில் தாங்கிய கன்னத்துடன் சுவருடன் சுவராகச் சாய்ந்த வண்ணம் நின்றுகொண்டிருந்தாள் வள்ளி. அவள் நெஞ்சில் புயல் வீசியது; புயல் அவளது அழகு கொழிக்கும் முகத்தை அலைக்கழித்துவிட்டிருந்தது.

அன்று இரண்டாம் திருவிழா. பிட்டுக்கு மண் சுமந்தவரின் கொண்டாட்டம். கோவில் கோலாகல மாகக் காட்சி தந்துகொண்டிருந்தது.

வள்ளிக்கு எதிலும்சிந்தையில்லை. அவள் சஞ்சரித்த உலகம் தனி, விந்தை உலகம் அது. அதில் அன்று நாடக நோட்டீஸில் காட்சியளித்த ராஜபார்ட்காரன்

புன்முறுவல்கோலத்துடன் 'ஜம்'மென்று தோன்றினான். வள்ளியும் நாணம் கதை சொல்ல கால் பெருவிரல் பூமியில் புள்ளிக் கோலம் போட ஒயிலுடன் நின்றாள். இவர்களிருவரையும் இணைக்கும் பாலமாகக் காட்சியளித்தது. அப்பொழுது அவனுடைய பிஞ்சுவிரலில் கொஞ்சிக் கிடந்த அழகிய மோதிரம் ஒன்று.

போன ஆண்டு நடந்த கதை அது. எண்ண ஆரம்பித்தாள். வள்ளிக்கு இன்பம் பாதியும் அச்சம் பாதியுமாக இருந்தது. இரண்டுக்கும் காரணம் இருந்தது. அதுதானே கதை!

கடந்த ஆண்டில் சுனை முழக்கம் விழா அமர்க்களப்பட்டது. கோவிலை அடுத்திருந்த சுனையின் பெருமை தலைமுறை தலைமுறையான விஷயம். நடராஜர் திருவிழாவின் கடைசி நாளில் சுனையினின்றும் பலதரப்பட்ட வாத்தியங்களின் நாதமுழக்கம் அந்தக் காலத்தில் கேட்டதாம். தேவர்கள் ஒன்றுகூடி சுனை முழக்கம் செய்ததாகப் பெரியவர்கள் ஐதீகம் சொன்னார்கள். அன்று தொட்டு சுனை முழக்கம் என்று தனி விழாவே கொண்டாடத் தொடங்கினார்கள். அன்றையச் சுனை முழக்கத் திருவிழாவுக்கு, இதே ராஜபார்ட் சுகுமாரன் கோஷ்டிதான் நாடகம் போட்டார்கள். கோவலன் நாடகத்தை வள்ளி ரசித்தது இம்மட்டு அம்மட்டல்ல. கோவலன் வேஷம் தாங்கியவன் இதே ராஜபார்ட் சுகுமாரன்தான். அவனது கொள்ளை எழில் அவள் நெஞ்சைக் கொள்ளை கொண்டது. அவள் தன்னுள் புது உணர்வு கிளுகிளுப்பதை உணர்ந்தாள்.

மறுநாள் பொழுது விடிய, சர்க்கார் பள்ளிக்கூடக் கிணற்றுக்குத் தண்ணீர் கொணரச் சென்றாள் வள்ளி,

தண்ணீருடன் திரும்புகையில் புளிய மரத்தடியில் சற்று நேரம் காலார நின்ருள். அவள் நின்றதற்குப் புதுக் காரணமும் இல்லாமல் போய்விடவில்லை. அந்த வழியே ராஜபார்ட்காரன் ஒயில் நடை போட்டுக்கொண்டு வந்தான். மூக்கில் விரலைவைத்து கண் மூடித் திறக்கும் நேரம் பலமாக யோசனை பண்ணிஞள். அந்த நாடகக் காரனுடன் எப்படியும் ஒரேஒரு வார்த்தையாகிலும் பேச வேண்டும் போலிருந்தது. மறு நிமிஷம் பலே என்று சூள் கொட்டிஞள். கைக்குள் அடங்கிக் கிடந்த அந்தச் சங்கிலியைக் கீழே நழுவ விட்டாள். அப்புறம் அவள் தலையை நிமிர்த்திஞள். அங்கு அந்த நாடகக்காரன் நின்றுகொண்டிருந்தான்.

'கொஞ்சம் தண்ணி வேணும். ரொம்பத் தாகமா யிருக்கிறது'.

இந்தாங்க, அப்படியே ஒருமுட்டாக் குடத்தோடே வேணுமானுலும் குடியுங்க. எனக்கு அட்டியில்லே...'

'நாடகத்திலே நான் கடோத்கஜன்வேஷம் கட்டிஞ லாச்சும் முடியுமான்னு ஒரு கை பார்ப்பேன். அம்மாடி யோ... எனக்கு இப்போது தேவை ஒரு மடக்குத் தண்ணிதாஞக்கும் . !

அவன் வாய்விட்டுச் சிரித்தான். தண்ணீரைக் குடித் தான். அது அமிர்தமாக இனித்திருக்க வேண்டும். உதடுகளில் நுனி நாக்கு இழைந்தது. ஆகா என்ருன்.

அவள் இதழ் நுனியில் புன்சிரிப்புக் குலுங்கியது. மச்சான் என்று உறவுச் சொல் கேள்விமுறையில்லாமல் அவள் உதட்டினின்றும் உதிர்ந்தது. கணத்தில் தன் நிலை அவளுக்குப் பாடம் சொல்லிவிட்டது.

'ஐயா... ஐயா. இங்கே பாருங்க தங்கச் சங்கிலி ஒண்ணு வழி தப்பிக் கிடக்குது. இப்போ இதை என்ன செய்யுறது... சங்கிலிக்குச் சொந்தக்காரங்க யாருன்னு தெரிஞ்சாலாச்சும் கூப்பிட்டுக் கொடுக்கலாம். பாவம், யாரு சங்கிலியோ இது...' என்ருள் வள்ளி. அவள் பேச்சில் ஏன் இத்தனை பதட்டமும் பயமுமோ?

'நீ நீங்க எதுக்கு வீண அலட்டிக்கிறீங்க? இப்போ நம் கண்ணிலே பட்டவரைக்கும் இது நம்ப சொத்துத் தான். ஊஹூம். இது உங்களுக்குச் சேரவேண்டியது தான்...'

அப்படியில்லே. நான் தான் கண்டேன்னலும் இப்போ நீங்களும் தானே இருக்கீங்க. இது நம்ப ரெண்டு பேருக்கும் சொந்தம்போலத்தான்...'

'எனக்கு ஒரு யோசனை தோணுது. இந்தச் சங்கிலி என்னேடே இருக்கட்டும். அதுக்குப் பதிலாக என்னுடைய பத்துக்கல் பவுன் மோதிரத்தை உங்ககிட்டே தந்திடுறேன். என்ன, சரிதான? என்ருன் ராஜபார்ட் காரன்.

வள்ளி ஊம் சொன்னுள். அவள் எதிர்பார்த்தது நடந்துவிட்டது என்பதற்கு அடையாளம் இருந்தது அவளுடைய அந்த ஊம் உச்சரிப்பிலே. அவன் நீட்டிய மோதிரத்தை அவள் வாங்கிக்கொண்டபோது அவள் நெஞ்சில் இன்ப உணர்வு பிரவகித்தது.

சங்கிலியைப் பெற்றுக்கொண்டு விடைபெற்றுச் சென்றுவிட்டான். நாடகக்காரன்.

வள்ளி கைகொட்டிச் சிரித்தாள்: நாடகக்காரர் எங்கிட்டே ஏமாந்துட்டார். நான் வேணுமின்னே கீழே

வீசிப்போட்ட செப்புச் சங்கிலியைத் தங்கமின்னு நம்பி, அதுக்குப் பதிலாக ஒசத்தியான, ரொம்பப் பெறுமதி கொண்ட பவுன் மோதிரத்தை எங்கிட்டே கொடுத்துட்டுப் போயிட்டாரே... நல்ல ஆண்பிள்ளை இது...!'

ஆனல் அதே சிரிப்பு பிறகு அழுகையாக மாற அப்புறம் அரைக் கணம்கூட ஆகவில்லை! "ஐயையோ' நாடகக்காரருக்கு நிஜம் தெரிஞ்சு அது வெறும் செப்புச் சங்கிலி என்கிற சேதியும் புரிஞ்சிட்டுதானு, அப்பாலே விசயம் அப்பா காதுக்கு எட்டும்; அப்பன் அரிவாளைத் தூக்கிகிட்டு வந்திடுமே எங்கிட்டே 'மூணும் மனுசங்கிட்டே என்ன சொல்லனுமின்னு..." என்று மனம் மருகினுள் பேதை வள்ளி.

மூன்ரும்பேருக்கு இந்தச் சம்பவம்பற்றி மூச்சுக் காட்டாமல் காதும் காதும் வைத்த மாதிரி அந்த மோதிரத்தை எடுத்து சேலை முந்தானையில் முடிந்துகொண்டு 'கமுக்க'மாக நாடகக் கொட்டகையை நாடிச் சென்ருள். ராஜபார்ட்காரனிடம் மோதிரத்தைக் கொடுத்து மன்னிப்புக் கேட்டால்தான் அவளுக்கு நல்ல மூச்சு வரும் என்று சொன்னது அவள் உள் மனம். ஆனல் ராஜபார்ட்காரன் அவசரத் தந்தி வந்ததன் பேரில் ஊருக்குப் போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது அவளுக்கு. கல்லாய்ச் சமைந்து போனுள் காரிகை. பவுன் மோதிரம் பத்துக் கற்கள் புடைசூழ எங்கோ இருட்டறையில் அடுக்கு மிளகாய்ப் பானையினடியில் அஞ்ஞாத வாசம் புரிந்தது வள்ளியின் பாராவின் கீழ்.

நாடகக்காரனின் ஆசைமுகம் காணக் கொடுத்து வைத்த 'சுனை முழக்கம்' விழாவை வாழ்த்திய வள்ளி இப்போது அதன்மீது ஆத்திரப்பட்டாள். ஊரும் ஊரார்

களும் சுனை முழக்கக் கொண்டாட்டத்திலே கூத்தும் கொம்மாளமுமாக இருக்க, பாவம் வள்ளி மட்டும் சதா சர்வகாலமும் பவுன் மோதிரத்தையும் அதற்குரிய நாடகக்காரனையுமே ஆலவட்டம் சுற்றிக் கொண்டிருந் தாள்! நாடகக்கார இளைஞனின் புன்னகை முகமும், மோகனக் கண்களும், கள்ள விழிப்பார்வையும் கபடமற்ற போதைச் சிரிப்பும் அவள் இதயத் திரையில் புனையா ஓவியமாக அழகு செய்து தோன்றும் போது 'பாவம்! முன்னே பின்னே தெரியாத ஆண் பிள்ளையை இப்படி ஏறும் ஏமாற்றி விளையாட்டுக் காட்ட இந்தப் பொண்ணுக்கு அசட்டு ரோசனை ஓடுச்சோ மனசிலே...! என்ற அனுதாபம் பிறந்தது. அவள் துடித்தாள்; மனச் சாட்சிக்கு மட்டும் என்னவோ அவளால் 'ஜவாப்' சொல்ல முடியவில்லை.

'நடராச தெய்வமே, என் பிசகைப் பொறுத்துக்க. தமாஷ் பண்ண வேண்டித்தான் அந்த மச்சானை-அந்த டிராமாக்காரரை அப்படி ஏமாத்தினேன்......மேலைக்கு நாடகம் நடக்கிறப்போ அவருகிட்டே அவருடைய பொன் மோதிரத்தைக் கொடுத்து, நான் மன்னிப்பு வேண்டிக்கிறேன்...அது வரைக்கும் இந்தச் சங்கதி அப்பா காதுக்கு எட்டாமச் செய்...சாமி!' என்று அவள் வேண்டிக்கொண்டாள்.

தெய்வம் சிரித்தது.

அவள் வேண்டுதல் பலித்தது; அவள்கூத்தாடினாள்

காலையில் டிராமா நோட்டீசைப் பார்த்தாள். சென்ற வருஷம் ஆடிய அதே இளைஞன்தான் இப்போது நாடக மாடப்போகிறான்...! 'இந்த வாட்டி அந்த ஐயாகிட்டே அவருடைய மோதிரத்தைக் கொடுத்துட்டாத்தான் எனக்கு நல்ல தூக்கம் வரும். ஆமா. இன்னும்

நாலஞ்சு ராவுக்கு பொழுது ஒரே கூத்தாத்தான் இருக்கும். ஆயாகூடவே நலியாம நாடகத்துக்குப் போயிட வேணும்' என்று மனக்கோட்டை கட்டினுள் வள்ளி.

அதே தருணம், மத்தியானம் தன் கல்யாணப் பரிசம் பற்றிச் சொன்ன வார்த்தைகளை நினைத்துக் கொண்டாள் அவள்! "பரிசமாமே, பரிசம்...எனக்கா? ஏதுக்கு? முன்னே பின்னே தெரியாத பூவத்தகுடி மாப்பிள்ளைக்கு நான் வாழ்க்கைப்பட வேணுமாம்...சிங்காரமாமே...சிங்காரம்! பேரு தான் சிங்காரமாயிருக்குது இது தானுங்காட்டியும் என் ஆசை மச்சானுகி வந்து மஞ்சள் கயிற்றை என் கழுத்திலே மூணு கடுத்தம் முடியப் போவுது. ஆனு என் கனவை யாரு அறிவாங்க? அந்த நாடகக்கார சுகுமாரன் மட்டும் அறிஞ்சிட்டாப் போதுமே. அப்பாலே என் கனு பலிச்சிடுமே. அவர் எனக்குக் கிடைப்பாரா? முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட கதையாகிப் போயிடாதே...தெய்வமே... என்கனு பலிக்குமா?" என்று வள்ளி தனக்குள் புலம்பிக் கொண்டிருந்தாள்!

பட்டிக்காட்டுப் பூவை பூலோக ரம்பையாக நின்ருள் சீவி முடித்திருந்தாள். அதில் ஒற்றை ரோஜாப்பு மின்னியது; முகத்தில் மஞ்சள் பூசி 'மா' இட்டிருந்தாள். அதில் புன்னகையும் போதையும் ஒளிவிட்டது; அவள் வள்ளி!

'வள்ளி திருமணம்' டிராமா பார்க்கப் புறப்பட்டாள் வள்ளி. அவளுக்குப் பாங்கிமார்கள் பவனம்பாள், கோவிந்தம்மா, ராஜாத்தி, பூவாயி. 'தாயைத் தன்னக் கட்டி' நாடகத்துக்குப் போய்வர அனுமதி பெற்ருள். அப்பனின் கண்ணில் மண்ணைத் தூவினுள் மகள்.

'ஏலே, வள்ளி'

அவள் திரும்பினாள். ஏமாற்ற நினைத்தவள் ஏமாறிப் போனாள். அவள் அப்பன் மாசிமலைத்தேவர் அங்கு நின்றுகொண்டிருந்தார்.

'எனக்குத் தெரியுமே: பூனைபோல் நலியாமல் கொள்ளாமல் நீ நாடகத்துக்குப் படை சேர்த்துக்கிட்டு போயிடுவேன்னு தெரிஞ்சுதானே கைவேலையைக்கூடப் போட்டது போட்டபடி போட்டுப்பிட்டு பரிஞ்சு ஓடியாறேன்... நீ நாடகத்துக்கு போகப்படாது வள்ளி. ஆமாம், சொல்லிப் போட்டேன்.. அப்பாலே உன் வாடை மில்லுப் பொட்டல்கிட்டே அடிச்சதாக் கேள்விப் பட்டேனோ, எனக்குக் கெட்டகோபம் வந்துவிடும். ஓடு வீட்டுக்கு' என்று '144' போட்டார்.

கோடை இடி விழுமென்று வள்ளி எப்படிக் கண்டாள்? இடி விழுந்த நாகமாக அவள் மனம் இடிந்து விட்டாள். மனக்கோட்டை பொடியானது, அவளுக்கு அழுகை தாதியாக நின்றது. முந்தானையில் முடிந்து வைத்திருந்த மோதிரம் அவள் அழுகைக்குத் தூபம் போட்டது. ராஜபார்ட் சுகுமாரனிடம் அதைச் சேர்ப் பிக்கத்தானே இந்த நாடகமெல்லாம் போட்டாள் வள்ளி கொண்டிருந்த, ஆசைக் கணவை நினைத்தாள்; கணவரின் நிழலாக நாடகக்காரன் சிரித்துக்கொண்டு இருந்தான். ஆனால் வள்ளி அப்பொழுது சிரிக்கும் நிலையிலா இருந்தாள் பாவம்!

தலைகனத்து; குடத்தை எடுத்து இடுப்பில் வைத் துக்கொண்டு மடத்துக் குளத்தை நாடிப்புறப்பட்டாள்.

தண்ணீர் மொள்ள, குளத்தில் காலடி எடுத்து வைத்தவளுக்குத் தலை கிறுகிறுத்தது. இடுப்பைவிட்டுக்

குடம் பிரிந்தது. அவள் மயக்கம் வளர்ந்தது. அப்பொழுது வள்ளி என்று ஒரு குரல் கேட்டது.

"பாவம், நீ தரையிலே அடிசாஞ்ச மரம் கணக்கிலே சாஞ்சிடப் போறியேன்னு ஓடியாந்தேன் ஒத்தாசைக்கு...' என்றான் அந்த ஆள்.

வள்ளி அவனை ஏற இறங்கப் பார்த்தாள். பயங்கரமான ராவணன் மீசையும், உப்பிய கன்னமும், உருட்டு விழிகளும் அவளை என்னவோ செய்தன. 'ஊம்...... அப்பாலே போங்க ஐயா. வயசுப் பொண்ணுகிட்ட ஒத்தாசைக்கு வர ஒங்களுக்கு எம்பிட்டு துணிச்சல் இருக்கனும்...வந்த வழியைப் பார்த்துக்கிட்டு நடங்க, ஐயா.. ம்..." என்று வள்ளி கூச்சல் போட்டாள்.

வந்தவன் கம்பீரமாக முறுக்கு மீசையை ஒதுக்கிவிட்ட வண்ணம். 'ஏலே வள்ளி, என்னை ஒனக்குத் தெரியலையா? நான்தான் பூவத்தகுடி மாப்பிள்ளை சிங்காரம். என்னைத் தெரியாதா ஒனக்கு? பிறக்கிற மாசம் நம்பரெண்டு பேருக்கும் தாலுக்கும் கொட்டு மேளத்தோட கண்ணாலம். இப்போ புரிஞ்சுதா, இந்த ஆண்பிள்ளை வலிய ஒனக்கு உதவ வந்ததுக்குக் காரணம்...? நாடகத்துக்கு வந்தேன். நேரம் கிடக்குதேன்னு இப்பிடி வந்து மேடையிலே குந்தினப்போதான் நீ என் கண்ணிலே தட்டுப்பட்டே...தேடிப்போன தெய்வம் தேடி வந்தது கணக்கில்லையா ..? என்று அவன் நாடகம் பாணியில் நடித்து பேசிய போக்கு வள்ளிக்கு எரிச்சலை உண்டுபண்ணியது.

அவளுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அன்றைக்கு திருமணம் பற்றித் தன் தந்தை சொன்ன வார்த்தைகளையும் அருகருகாக எண்ணிப்பார்த்தாள்.

இந்தப் பயங்கரமான ராவணன் மீசைக்காரனுக்குத் தானு நான் வாழ்க்கைப்பட வேணும்? பயமாயிருக்குதே தெய்வமே, என்னைக் காப்பாத்து...! ஆனு எனக்கு மட்டும் அந்த நாடகக்கார மன்மத ராஜா கிடைச்சிட்டா அவருகூட எங்க இனமின்னுதானே காலம்பற கோவிந் தம்மா சொன்னு! சுகுமாரன் கிடைப்பாரா எனக்கு? என் நெஞ்சை யாருகிட்டே எப்படித் திறந்துகாட்ட முடியு மோ?...சாமி சுகுமாரனை என் நேசமச்சானுக்குவியா?...' என்று வள்ளியின் இன்பக் கனவு ஓர் இன்பலோகமாகப் பரிணமித்தது. அவள் மனசில் நாடகக்கார வாலிபன் கோவலனுகவும், அர்ஜுனனுகவும், வேல்தாங்கும் முருகனுகவும் அழகு காட்டித் திகழ்ந்து கொண்டிருந் தான்...!

'வள்ளி, உன்னை இப்பக் கண்டது எனக்கு எம்மாம் சந்தோஷமா இருக்கு தெரியுமா? சமீபத்திலேதான் நாம் ரெண்டு பேரும் ஒண்ணுகூடப் போருேமே... நாடகம் ஆரம்பிச்சிருவாங்க: ராஜபார்ட் சுகுமாரன் என் சேக்காளி. நான் பக்கத்திலே இல்லாப்போனு அப்புறம் அவனுக்கு பவுடர் போடவே கை ஓடாது... நான் போயிட்டு வாறேன்.'

மீசைக்காரனை கோபம் கனல் கக்கப் பார்த்தாள் வள்ளி. ஏனே அப்படியே சிலையாகிப் போனுள். அவள் முகத்தில் நாணம் ரேகைவிட்டது—'ஆ!'

'எனக்கு ஒரு சின்ன ஒத்தாசை செய்யுறீங்களா? அந்த நாடகக்கார ஐயாகிட்டே இந்த பவுன் மோதி ரத்தை நீட்டிப்பிடுங்க, இது அவருடையது. ரொம்ப அவசரமுங்க. மறந்துவிடமாட்டீங்களே......' என்று சொல்லி, வள்ளி அந்த மோதிரத்தை அந்த ஆளிடம் நீட்டினுள். 'விசுக்கென்று' மோதிரத்தைப் பெற்றுக்

கொண்ட அவன் ஓட்டமாக ஓடினுன். வள்ளி மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆனந்த நடனமாடிக்கொண்டிருந்தாள்.

கோயில் மடத்திலிருந்து புறப்பட்டுப் பவனி வந்த வெள்ளி ரதத்தில் அம்பலவாணர் ஆனந்த நடனமாடிக் கொண்டிருந்தார்.

மாசிமலைத் தேவர் வீட்டில் பெரிய மனிதர்களில் சிதம்பரத் தேவர், மணியக்காரர் மாணிக்க அம்பலம், பஞ்சாயத்துப் போர்டு தலைவர் சுப்பையா செட்டியார், ஜில்லா போர்டு டாக்டர் பக்கிரிசாமி முதலியவர்கள் சந்தனம் பூசிக்கொண்டும், வெற்றிலை போட்டுக் கொண்டும் இருந்தார்கள். மேளமும் நாதஸ்வரமும் முழங்கியது.

'பரிசம்' போடப்பார்க்கிருர்கள்; வள்ளிக்கும் அந்த பூவத்தகுடி மாப்பிள்ளை சிங்காரத்துக்கும் கல்யாணம் அல்லவா?

மாப்பிள்ளை வீட்டார்கள் தங்கள் பிள்ளையைத் தேடினுர்கள். தாம்பூலம் மாற்ற.

மாசிமலைத் தேவர் தன் மகள் வள்ளியைத் தேடிக் கொண்டு கொல்லைத் தோட்டத்துக்கு வந்தார்.

என்ன அதிசயம் இது! அங்கு வள்ளியும் அந்த ராஜபார்ட் சுகுமாரனும் அல்லவா குலாவிக் குலாவிக் குஷாலாகப் பேசிக்கொண்டிருக்கிருர்கள்!

வள்ளி போன வருஷம் நாடகம் போடறதுக்கு வந்தப்போவே என்னைக் கண்டு விசாரிச்சு உங்கப்பா நம்பரெண்டு பேருக்கும் கண்ணுலம் கட்டிப்பிட வேணு மின்னு உறுதி சொன்னுர். நாடகத்துக்கு ஒண்டிதான்.

நான் சுகுமாரன்! மற்றபடி எனக்கு சிங்காரமின்னுதான் பேர். போன வருஷம் நீ என்னைக் கலாட்டா பண்ணத் தானே அப்படிச்செப்புச்சங்கிலியை தங்கச் சங்கிலின்னு ஏமாற்றினே... நானும் தெரிஞ்சுதானே உன் ஞாபகத் துக்கு அந்தச் சங்கிலியை வச்சுக்கிட்டு, என் ஞாபகத் துக்கு உங்கிட்டே என் அசல் பவுன் மோதிரத்தைத் தந்தேன். அதைத்தான் போன கிழமை நேருக்கு நேராக உன் கையாலேயே நானே வாங்கிக்கிட்டேனே! என்ன வள்ளி, அப்படியே சிலையாச் சமைஞ்சிட்டியே... ஓஹோ! ராவணன் மீசைக்காரன் கிட்டே கொடுத் தாச்சே மோதிரம், இவன் நேருக்கு நேராக வாங்கிக் கிட்டதாகப் புளுகிறானேன்னுதானே யோசிக்கறே? அதுதான் ரகசியம்! உன்னை இப்படி மலைக்கச் செய்ய வேண்டியேதான், அன்னிக்கு மீசைக்காரனுட்டம் இந்தச் சிங்கம்தான் வந்தான்! உன் ஆசை முகத்தை நாளெல்லாம் பார்த்தாலும்தான் எனக்கு ஆசை தீராதே, வள்ளி! எம் பேரிலே உனக்குள்ள ஆசையை கதை கதையாச் சொல்லுவாள் உன் தோழி கோவிந்தம்மா. ஆனால் இந்த முறுக்கு மீசைக்காரன் வேஷத்தை மட்டும் நீ ஒருநாளும் மறக்கமாட்டே யில்லையா? என்றான் மாப்பிள்ளைப் பையன்.

'மச்சான், உங்க நாடகத்துக்கு என்னதும் ஒண்ணும் சளைச்சதில்லே. நீங்கதான் அப்படி உருட்டு விழியோட உப்பின கன்னத்தோட, ராவணன் முறுக்கு மீசையோட வந்த துப்பை பாவம், உங்க மூஞ்சியிலேருந்துவிழுந்த இந்த ஒட்டு மீசை காட்டிக் கொடுத்துப்பிடுச்சு! மீசை உங்களை ஏமாத்தினதை நீங்க எங்கே கவனிச்சிருக்கப் போறீங்க? நீங்கதான்னு உண்மை புரிஞ்சதும்தானே, நானும் உடமைக்காரங்ககிட்டேயே பவுன்மோதிரத்தை தைரியமாகத் தந்துபுட்டேன். உங்களையே என் ஆசை

மச்சானுக்கிக்கிடுறதுக்கு நான்கண்ட கனு பலிச்சிட்டுது. இப்பத்தான் எனக்கு நல்ல மூச்சுவருது. கோவிந்தம்மாவும் என்னைப்பத்தி உங்ககிட்டச் சொன்னுச்சா...? நிஜமாவே நான் கொடுத்துவச்சவள்தான்!' என்று புன்னகையுடன் சொல்லிய வள்ளி, ராவணன் முறுக்கு மீசையை ராஜபார்ட்காரனிடம் சமர்ப்பித்தாள்.

மாசிமலைத்தேவர் கனைத்துக்கொண்டே தோன்றினார். 'பொண்ணு மாப்பிள்ளை நாடகங்களெல்லாம் ஒரே கூத்தால்லேயிருக்குது. மாப்பிள்ளைக்குத்தான் முந்தியே எங்கவள்ளியை தெரியும்போலே. ஆனா எங்க வள்ளிக்கு மாப்பிள்ளையை தெரியாதுபோல. மாப்பிள்ளையைத் தெரியுமின்னுதானே அன்னிக்கு வள்ளியை நாடகத்துக்குக்கூடப் போகப்படாதுன்னு கண்டிப்புப் படுத்தினேன். நாலு பேர் மத்தியிலே வயசுப் பொண்ணு வந்து நின்னதைப் பார்த்தா, நீங்க என்னதான் நினைச்சுப்பீங்களோன்னுதான் அப்படிச்சொன்னேன்... மகளுக்குக்கூட எம்பேரிலே வருத்தம்...சரி, மாப்பிள்ளையும் பொண்ணும் வாங்க.

...நல்ல நேரம் வந்துடுச்சு. பரிசம்போடவேணும். உங்க ரெண்டு தரப்பு காதல் பரீட்சைக்கும் ஒரு முடிவு வேணுமில்லையா.........ம்! என்றார் தேவர் விஷமப் புன்சிரிப்புடன்.

அந்த வருஷம் சுனை முழக்கம் திருநாளில் வள்ளி—ராஜபார்ட் சுகுமாரன் ஜோடியைக் கண்கொட்டாமல் பார்த்துத் தீர்த்ததைப்பற்றிக் கதைகதையாகப் பேச ஆரம்பித்து விட்டார்களாம். அவ்வூர் கிணற்றடி மகாநாட்டுப் பெண்டிர் குழாம்!

* * *

# வலைச் சிலந்தி

துப்பாக்கிக் கட்டையின் கைபிடியை கைபிடித் துணியினால் துடைத்து முடித்தபின் மேஜை இழுப் பினின்றும் கிடைத்த துப்பாக்கி ரவைகளை ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணி, தனித்திருந்த தகரக் குழாயில் போட்டுக்கொண்டிருந்தான் சுசீந்தர். எஞ்சிக் கிடந்த ரவையைப் போடுவதற்குள் சுருளலை முடி அழும்பு பண்ணியது. அதை ஒரு பொருட்டாக ஏற்று மதிக்காதவன் போன்று தன் பணியினை முடித்தான் அவன் "நிலந்தெளிவதற்குள் நீயும் நானும் இங் கிருந்து புறப்பட்டாகவேணும். இன்றைக்கு மதியத் திலே உனக்கு ஒரு பரிசு கொடுக்கப்போகிறேன்!" என்று உரைத்த பாசத்தின் குரல் அவனது உந்திக் கமலத்தை விட்டுப் புறப்பட்டது. புறப்பட்ட தொனி மணம் பரப்பியது; அந்த இனிய நல்வாடை பொறி யுணர்வுகள் அனைத்திலும் ஒன்றில் ஒன்றாகப்பிணைந்து, அவனுக்குப் பெருமிதம் ஈந்தது. பேருவகை அடைந் தான். மகிழ்வின் சிற்றலைகள் இதழ்க் கங்கில் ஒதுங்கி நின்ற காட்சியைப் பிரதிபலித்துக்காட்டியது கண்ணாடி.

அவன் தனக்குத்தானே பூரிப்படைந்தான். முரண்டு பிடித்த சுருட்டை முடி கண்ணைக்குத்தியது. வெளிப் படையாகச் சிரித்தவாறே அதை எடுத்து இணைத்தான். தூண்டிவிடப் பட்டிருந்த 'ஹரிக்கேன்' விளக்குப் பக்க மாக இருந்த 'அலாரம்' ஓசை கொடுத்தது. ஒழுங்கு மாருமல், கடமைதனை இயற்றுவதில்தான் இந்த யந்திரத்திற்கு எத்துணை பொறுப்பு! 'இத்தனை மணிக்கு எழுப்பவேண்டும்' என்று குறிப்புக் காட்டியதற்கு அணு பிசகாமல், அது தன் கடனை இயற்றி விட்டது. ஆனால் அதற்கும் ஒருபடி மேலாக நின்று விட்டான் சுசீந்தர்.

வெளியூர் செல்ல வேண்டுமென்ற திட்டத்தை முன்னே வைத்தார் பெரியவர். சுசீந்தர், எவ்வளவு சீக்கிரமாகத் துயில் கலைந்து எழுந்துவிட்டான்! அவன் பார்வை ஜன்னலை ஊடுருவியது. விழித்திருந்த அறை இழைந்திருந்த ஒளிக்கதிர்களின் வெளிச்சம். உறங்கிக் கிடந்த அடுத்த அறையிலும் லேசாக விழுந்திருந்தது. காஷ்மீரச்சால்வையை இழுத்துப் போர்த்துக்கொண்டு புரண்டார் அவர். 'இன்னும் அரைமணி தேசகாலம் சென்ற பிறகு அப்பாவை எழுப்பலாம். அது சரி. எனக்கு ஒரு பரிசு கொடுக்கப்போவதாக ஜாடை காட்டினரே அது என்ன பரிசு?

ஐயத்தின் பிறப்போடு ஆர்வத் துடிப்பும் உடன் பிறந்தது. விளைபலன்: வெய்துயிர்ப்பு!

சிணுக்கல் குரலொன்று கேட்டது.

கைவிளக்கைப் பொருத்தினன் சுசீந்தர். ஒளிப் புனலில் பிணையின் உருவம் தெரிந்தது. சிந்தனைப் பொறி தட்டியது. கால்களை உலுக்கி தலையை திசைக்குத்

திசைமாற்றி அசைத்த அந்த 'முறுக்கு நிலே' அவனுக்கு ஒரு நினைவை உண்டுபண்ணியிருக்கவேண்டும். ஒரு வேளை பிணைக்கு ஒரு கலையைப் பரிசாகத் தரப் போகின்றாரோ அப்பா?'

ஒரு கேள்விக் குறியை மையமாக்கிக்கொண்டு ஒன்பது கேள்விகளின் நிழல் படர்ந்தது. தன்னையும் அறியாமல்' தான் இன்னதென்று இனம் காண இயலாத வகையில் ஒரு வகைப்பட்ட உள்ளுணர்வு தழைத்து அதன் தடத்தில் மேனி பூத்து நிற்பதுபோல் அவன் உணரலானான். முகம் பார்க்கும் கண்ணாடியை அண்டினான். முகம் கண்டானா? அல்லது அகம் காட்டி யதா? அப்பா வாங்கிவந்து கொடுத்த புத்தகங்களில் ஓடியிருந்த பாடல் வரிகள் நெஞ்சடியில் ஓடினவோ? மனத்தை ஒளித்து ஒரு வஞ்சனை இல்லை என்பார்கள். அவனோ உள்ளத்துக்குத் தெரியாமல் கள்ள நகை உதிர்த்தான்.

சுசீந்தர் நடந்தான். வெளிப்புறத் தாழ்வாரத்தின் ஜன்னல் கதவைத் தாழ்விலக்கித் திறந்தான். பயம் மண்டிய பனியும் ஊசியாய்க் குத்திய வாடையும் அவனை அணைந்தன போலும்! நடுக்கம் கிளர்ந்தது. மேல் அங்கியை இழுத்துவிட்டுக்கொண்டான். நேர்நின்ற திசைக்குத் தாவின விழிகள்! எருசசிக்காடு வட்டத் திலே 'கொக்ரக்கோ' சொல்ல யாருக்கும் துணிவு இல்லையோ என்னவோ?

அங்கியைக் கழற்றி வீசினான் அவன். உடலுறுப்புக் களை இயக்கிப் பயிற்சி தந்தான். நெற்றிப்பச்சை நரம் புகள் புடைத்தன. கண்கள் ரத்தச் சிவப்பாக மாறின. பிறகு அந்தப் பெரியவரின் படுக்கையை நோக்கிச் சென்றான் அவன். 'பரிசு' பற்றிய ஞாபகம் தீக்குச்சி

யாகி நெஞ்சமெனும் மருந்துப்பெட்டித் தலைப்பில் உரசியது. ஆர்வம் எரி தீ ஆனது, "அப்பா!...... அப்பா! ..

சுசீந்தரனையே உன்னிப்புக் கெடாமல் நோக்கி விழித்தார் பெரியவர்; போர்வை ஒதுங்கியது. ஏதோ ஓர் உந்துதலின் பிடியில் அகப்பட்டவரையொப்ப, விசுக்கென்று எழுந்து நிற்கப்போன வேளையில் சுசீந்தர் அந்த இடத்திற்கு ஓடி வந்து சேர்ந்தான்.

ஸ்ரீமான் ரமேஷதாஸ் தம்முடைய உடுப்புக்களைச் செம்மைப்படுத்திக்கொண்டார். முகம் துலாம்பரமாக இருந்தது. காலம் முத்திரை அமைத்த சுருக்கங்களையும் துல்லிதமாகப் போக்கடித்துக்கொள்ளக் கூடாதல்லவா? 'ஈஸ்வரா!' என்று தமக்குள்ளாக முணுமுணுத்தபடி நகர்ந்தார். இடது கைத்தாங்கலில் இருந்த அந்தத் தேக்குமரத் தடியும் நகர்ந்தது. எடுபிடி ஓடிவந்து கோப்பைக் காப்பியை நீட்டினன். "தம்பிக்கு...?" என்று கேட்டார். 'ஓ!' என்று முன்மொழிந்த குரலுக்கு இணைப்பாக ஆடிய தலையசைவு அவனது நிறைவேற்றப்பட்ட பணிக்கு வழிமொழிந்தது.

"அப்பா!" என்று விளித்தபடி வந்தான் சுசீந்தர். ஆஹா! அவன் எவ்வளவு எழிலுடன் விளங்குகிருன்!

'அப்பா' என்ற குரல் செவிகளில் விழுந்ததுதான் தாமதம். பெரியவர் துணுக்குற்றவர் போலத் தடுமாறி நிமிர்ந்தார். எதையோ சொல்ல விழைந்தவராக யோசனையில் ஆழ்ந்தார். பிறகு பெருமூச்செறிந்தவாறு அடங்கினர் ஏதும் உதிர்க்கவில்லை.

"புறப்படலாமா அப்பா?"

"புறப்பட வேண்டியதுதான். நீ வாசலுக்குப்போய் பெட்டி வண்டியை ரெடிபண்ணு தம்பி. நான் கைச் செலவுக்குப் பணம் எடுத்துக்கிட்டு உன் பின்னடி வருகிறேன்!"

"நல்லதுங்க!"

சுசீந்தரின் தலை மறைந்த சடுதியில் ரமேஷ்தாஸ் உள்ளே சென்றார். சேவற்கோழியின் கடமைக் குரல் அவர் நெஞ்சத்தில் எதிரொலித்தது. திரும்பித் திரும்பிப் பார்த்தவண்ணம் ஓர் இருட்டறைக்குள் நுழைந்தார்; சுவரொட்டி விளக்கைப் பெரிது பண்ணினர். கன்னிப் பெட்டியின் முன்னே பதமாகக் குந்தினர். இப்போதும் அந்த ஊன்றுகோல் அவருக்கு கைகொடுக்கத் தவற வில்லை. துரு ஏறியிருந்த பூட்டைத் திறக்க கொஞ்சம் நாழிபிடித்தது. ஓர் உறையை எடுத்து அதை இடுப்பில் சொருகிக்கொண்டு மேல் சட்டையை இழுத்துவிட்டுக் கொண்டார் அவர்.

"அப்பா!"

"இதோ வந்தாச்சு சுசீந்தர்!" என்று அவருடைய சொற்களில் ஒலித்த நடுக்கம், அவரது மேனியிலும் ஊடாடியது.

சுசீந்தர், பெரியவரை நோக்கி விழித்தான். உள்ளே தெளிந்த ஒளியையும் பார்த்தான். 'இந்தப் பழைய பெட்டகத்தை அப்பா திறந்து நான் இதுவரை பார்த்ததே இல்லையே?... ஒரு வேளை எனக்கு என்னமோ பரிசு தரப் போவதாகச் சொன்னரே அதுவாக இருந்தாலும் இருக்கும். அப்பாவாக வாய்திறந்து பேச்செடுக்கும் பரியந்தம் நான் பேச்சைத் தொடுக்கவே கூடாது!"

தத்தித் தத்தி நடந்த முதியவரை கைத்தாங்கலாகப் பற்றி நடந்தான் இளைஞன்.

உதயராகத்தில் திளைக்கத் தொடங்கியது. அந்த ஒற்றைத் தனிக்குடில்!

"அன்புக்குச் சாதி, மதம், இனம் என்கிற வேறுபாடு எதுவுமே கிடையாது! இல்லையா?"

"ஆமாம், அப்பா!"

சுசீந்தரின் ஒப்புதல் மொழி கைகோர்த்துத் தொடர்ந்த அந்தக் கடைசிச் சொல்லில் வழிந்த பாச வெள்ளத்தில் ரமேஷ்தாஸ் முக்குளித்து எழுந்தார். மேனிக் குளிர்ச்சியின் சிலிர்ப்பு அவரை ஒரு கணம் மெய்மறக்கச் செய்தது. மேலண்ணத்தில் ஒட்டிக் கிடந்த நாக்கைக் கடித்துக்கொண்டார் அவர். ஏன் அவர் அப்படித் தடுமாற வேண்டும்? முகம் வேர்வையால் நனைந்தது; கண்களின் இமை மயிர்ச் செறிவுக் கோடுகளில் சுடுநீர் கோடு கிறுக்கியது. சமாளித்துக் கொண்டார்.

"சுசீந்தர் சற்றுமுன்பு நான் சொன்னேனே ஒரு வாசகம்... அதை யார் சொன்னார்கள்?"

"தெரியுமே!...அண்ணல் காந்தி அடிகள்?"

"அச்சா!...சரி, பெருங்கோபத்தைப்பற்றி வள்ளுவர் பெருமான் சொல்லிய ஒரு தத்துவத்தை நான் உனக்கு அடிக்கடி ஞாபகப்படுத்துவேனல்லவா?"

"ஆமாம்!"

"அது என்னவாம்?"

"பெருங்கோபம் கொள்பவன் இறந்தவர்க்கு இணை என்று குறள் சொல்லியிருக்கிறது. அப்பா!" என்று சொன்னான் சுசீந்தர்.

சுசீந்தரின் கெட்டிக்காரத்தனத்தை அவர் உள்ளுக்குள்ளேயே புகழ்ந்துகொண்டார். கசக்கும் உண்மையைப் போன்று, மகிழ்ச்சித் துளிகளின் நுனியில் கண்ணீர் சொட்டியது. இப்படிப்பட்ட நூதன அனுபவ முத்திரைகள் புதிதல்ல என்ற பாங்கிலே, அவர் க்ஷணப் பொழுது சலனமடைந்து, பிறகு மறுக்ஷணத்திற்குள்ளாகவே சலனத் தெளிவு அடைந்தார். கண்ணாடித் துண்டங்களில் கருமணிகளை ஒட்டி உறவாடிய வேளையில், எருச்சிக்காட்டைத் துண்டித்து, உறவை முறித்துக் கொள்ளப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்த பெட்டி வண்டியின் நினைவு கூர் தீட்டியது. கனவுகளாய் முளைத்து, ஆசைகளாகத் தழைத்து நின்ற இறந்த காலத்தை எண்ணிக் கொண்டார். புள்ளிபோட்டுப் பார்க்கவில்லை புடம்போட்டுப் பார்த்தார். 'ம்...எல்லாமே விநோதம்தான்!...எல்லாம் உணர்ந்த எல்லாச் சூட்சுமமும் அறிந்த—எல்லா நடப்புக்களையும் எடைபோட்டுத் தீர்ப்பு வழங்கத் தெரிந்த ஆண்டவனின் கைப்பிடியால் இந்த மனிதன் வாஸ்தவமாகவே ஒரு தாலாட்டுப் பொம்மையேதான்!...சிலந்திவலைமின்னுகிறது. ஈக்களை பிடித்துக் கபளீகரம் பண்ணவேண்டுமென்பது அதன் உட்கருத்து. ஆனால் நியதியின் விசித்திரச் சங்கமச் சுழலில், வினைவின்வழி தடம்புரண்டுபோவதில்லையா?... தான் பின்னியவலையிலே தானேசிக்கித் திக்குமுக்காடிப் போவதும் உண்டுதானே?"

மனித மனம் குறித்த ஓர் எல்லைக்குத்தான் எண்ணங்களை வரம்புக் கட்டித் தாங்கும் சுமைதாங்கியாக இயங்க ஒப்பும்.

ரமேஷ்தாஸ் தலையைப் பற்றிக்கொண்டார். தலைச் சுமையைத் தாளமுடியவில்லைபோலும்! கண்களை இறுக மூடிக்கொண்டு தீவிரச் சிந்தனையின் வசப்பட்டவரானார்.

படித்துக்கொண்டிருந்த புத்தகத்தின் ஏட்டை இடது கைச் சுட்டுவிரலால் அடையாளம் அமைத்த வாறு, சுசீந்தர் பக்கவாட்டில் திரும்பி விழித்த வேளை யில், கண்மூடிய ரமேஷ்தாஸின் மோனத்தவநிலை அவனைப் பற்றி ஈர்த்தது. காம்பு கிள்ளி எடுக்கப்பட்ட தாமரை இலையில் தேங்கித் தத்தளிக்கும் நீர்த்திவலைக ளென இரண்டொரு துளிகள் அவர் கண்களில் ஊசலாடியதைக் காணக் காண, அவனது உள்ளமும் உயிரும் ஊசலாடுவதைப் போன்றே ஓர் உணர்வு எழுந்தது. எதையோ கேட்கவேண்டும் போலிருந்தது. எதையும் கேட்கக்கூடாது என்றும் தோன்றிற்று. பேசாமல்கொள்ளாமல் மீண்டும் 'புத்தகப்பூச்சி' ஆனான்!

பூரணிக் காளை கொம்புகளைச் சிலுப்பிக்கொண்டு, கழுத்துச் சதங்கைகள் 'ஜல்,ஜல்' என்று ஒலி கூட்ட, கருமமே கண்ணானது.

பாதை வளர்ந்தது.

ரமேஷதாஸ் வெளிப்புறம் தலையை நீட்டி நீட்டிப் பார்வையைத் துப்பரவு செய்துகொண்டார். பொருமை சூழ்ந்த வஞ்சக நெஞ்சம் மாதிரி இருட்செறிவும், மரச் செறிவும் திகழ விளங்கிய காட்டு வழியை விட்டு மடங்கித்திரும்பியது வண்டி. அப்போதுதான் அவருக்கு நல்ல மூச்சு வந்தது.

"தம்பி!"

"என்னுங்க அப்பா!"

"ஊஹ¬ம், ஒன்றுமில்லே நீ படி!"

"என்னமோ சொல்லவந்தீர்களே?"

"ஒன்றுமில்லே. எனக்கு வயசு ரொம்பத்தான் ஆகிட்டுது!"

"ஆ௵, என்னப்பா?"

"அதுக்கு இல்லே, சுசீந்தர்!... நான் இனி உயிரோடிருக்கப்போவது..."

"அப்பா...அப்பா! உங்களுக்கு ஆயுசு கெட்டி, நீங்க தங்க மானவங்க. யாருக்கும் எந்தத் தீங்கும் மனசாலே கூட நினைக்க ஒப்பார்தவுங்க கடவுள் உங்களுக்கு வயசை அதிகமாக எழுதிப் போட்டிருப்பார்!... உங்களைத் தவிர எனக்கு இந்த உலகத்திலே வேரே யார் சதம்?... பெற்ற தெய்வத்தின் முகத்தைக்கூட நான் அறிஞ்சவன் இல்லையே?... என்னை வளர்த்து ஆளாக்கிய உங்களுக்குச் செய்யவேண்டிய கடமைகள் எவ்வளவோ மிச்சம் இருக்கிறதே, அப்பா...!"

"உன் அன்பு பெரிசு தம்பி!"

"இல்லீங் அப்பா! உங்கமனதுதான் மிகவும்பெருசு!"

"அப்படியே இருக்கட்டும். உன்எண்ணத்தை நான் ஏன் கெடுக்க வேணும்? அதுசரி. குற்றங்கள் செஞ்ச ஒருவன் உன் கையில் ஒப்படைக்கப்பட்டால், நீ என்ன செய்வாய்?"

"ஏன்?"

"கேட்கிறேன், சொல் தம்பி!"

"கெட்டவனைத் திருத்தும் அளவுக்கு அந்தக் குற்றங்கள் அவன் மனசை மாசு விலக்கிப் பக்குவமாக்கி, மனச்சாட்சியை விழிப்படையச்செய்து, அவனைப் புத்தம் புதிய மனிதனுக உருமாற—உள்ளம் மாறச் செய்து விடும் பட்சத்தில் அவன் புரிந்த தவறுகளை மன்னித்து, அந்தக் குற்றவாளியை நல்லவனுக ஏற்றுக் கையெடுத்துக் கும்பிடவும் செய்வேன்! ஆனல் குற்றவாளி நிரந்தரக் குற்றவாளியாகவே காட்சி தருவானேயானல், அவன் உயிரை இந்தத் துப்பாக்கி முனைக்குப் பலியாக்கி விடுவேன்!"

வீறு கொண்டு முழங்கினன் அவன். அவன் கை துப்பாக்கியை லாகவமாகப் பற்றியிருந்தது. தட்சணமே விசையை இயக்கி முடுக்கிவிடுபவனுகத் தோன்றினன். வளர்த்த தெய்வமணிக்கரம் அவனுக்குச் சுய உணர்வைச் சொடுக்கி விட்டது.

"அப்பா!"

"சுசீந்தர்!"

"என்பதில் சரிவரப் பொருந்தவில்லையா?"

"நன்ருகச் சொன்னுயே!... உன் பதில் வெகு அற்புதம், போ! உன் மனத்தைப் படித்துக்கொள்ளத் தான் இப்படி ஒரு புதிரை உன் முன்னே வைத்தேன். வழிப் பயணத்துக்குப் பேச்சுத்துணை வேண்டாமா? அதற்குத்தான் என்னமோ கேட்டு வைத்தேன். அவ்வளவே தான்!" என்று அவர் சொன்னுர்.

சுசீந்தருக்கு இப்போது சிரிப்பு வெடித்தது.

நன்றியறிவு மிக்கவனின் உதட்டுச் சிரிப்புப்போல, கதிரவனின் ஒளி முகம் மெருகு ஏறி வளர்ந்தது.

'நொடி'களிலே வண்டி குலுங்கிக் குலுங்கி விழுந்து எழுந்தது. மனித வாடையின் குமைச்சல் தாளாமல், மூக்கணாங்கயிற்றைப் போட்டு உலுக்கித் தொலைத்தது காளை.

ஆயிற்று; அதோ, ஆலங்குடி துரோபதை அம்மன் கோயில்!

இயற்கைத் தாயின் தலைச்சன் குழந்தைக்கு இணையாகப் பெருமை பூத்து, பெருமிதம் போர்த்து விளங்கியது அந்தத் தோட்டம். நவநவமான பூஞ்செடிகள் அழகழகான வண்ணங்கள் ஏந்தி முகப்பில் நின்று வரவேற்புரை வாசித்தன. புறம் எரித்த வெய்யிலை அண்டவிடலாகாது என்கிற சங்கற்பம் கொண்டிருப்பவைபோல அவை அவ்வளவு நெருக்கமாகக் காணப்பட்டன. தருக்கள் செருக்குடன் திகழ்ந்தன; தளிர்கள் குளிர் பரப்பின; மலர்கள் அலர்ந்திருந்தன; மணம் குணம் நல்கியது.

ஒற்றைத் தனிக்குடில் அது!

கைப்பிடிக்கட்டை ரமேஷ்தாஸ் அவர்களுக்குத் துணையாக அமைய, பெரியவர் சின்னவனுக்குத் துணையாக அமைந்து, வழி மிதித்து, வழி காட்டி, வழி தொடர்ந்தார். அவரது நடையில் ஒரு துள்ளலும், தன்னையே திரும்பித் திரும்பிப் பார்த்த பார்வையில் ஒரு தெம்பும் இழையோடிக் கிடந்ததை அவன் 'துலக்கமாக' உணர்ந்தான். அவ்வுணர்ச்சி தன்னுடைய இதய வீணையைமீட்டிட, தான் நூதனமானதோர் உலகத்தின்

தலைவாயிலிலே அடி எடுத்து வைத்திருப்பதைப் போல வும் ஒரு சிந்தனை நரம்பு 'லயம்' தப்பாமல் பேசத் தொடங்கியிருப்பதையும் அவன் ரசித்துக் கணிக்க மறக்கவில்லை!

"சுசீ...!" என்ற குறள் விளைந்த சடுதியில் அவன், "இதோ!" என்று குரல் கொடுத்தான்.

அதே வேளையில், மற்ரொரு புதிய ஒலி, "இதோ!" என்று சத்தம் காட்டியது.

சுசீந்தரின் கூர்த்தமதியில், முதியமாது ஒருத்தியின் உருவம் தென்பட்டது. "யார் இந்த ஸ்திரீ?"

நடை பயின்ற கேள்வியுடன் கேள்வியாக, சசீந் தரும் நடந்தான். குடிலின் நிலைப்படியில் வந்து நின்ருன். "அப்பா, இருங்க், நானே உங்களை சரியாக உட்காரவைக்க வேணும்." என்று பாசமொழி பிரித் தான். நார்க்கட்டில்மீது ஒரு காலை மடக்கி வைத்துக் கொண்டு, இன்னொரு காலை தரையில்தொடும் விதத்தில் நீட்டியிருந்தார். அது இடது கால்; ஆடியது. இடது தோள்பட்டைக்கு 'முட்டு' கொடுத்து உதவிய அந்தத் தடி. ஆற்ருமை கொண்டு விளங்குவதைக் காட்டும் பாவனையில், அவரது காலடியிலேயே கிடந்தது.

பெரியவரை ஒருமுறை ஏறிட்டுப்பார்த்தான் அவன். 'அப்பா! உங்களை இந்தக் கோலத்துக்கு ஆளாக்கின பழிகாரன் யாரப்பா?' என்று பலபல சந்தர்ப்பங்களிலே ஆத்திரம் பொங்கக் கேள்விக்குறியீடுகளைப் போட்டுக் காட்டியபோதெல்லாம், அவர் "தம்பி, அன்புக்குக் கிடைத்த பரிசில்தான் எனது இந்நிலை! வேறென்ன நான் சொல்லுவேன்? சரி, வேறு பேச்சை எடு,"

என்று தன் வாயைக் கட்டிவிட்டு, தன் கண்களின் வாயைக் கட்டமுடியாமல் தவித்த--தடுமாறிய நாட்கள் ஒன்றிரண்டல்லவே?

"சுசீ!"

இளைஞன் குரல் கொடுத்த சுவட்டிலேயே முதியவளும் குரல் கொடுத்தாள்.

"தம்பி, நான் இந்த அம்மாவைத்தான் அழைத்தேன்," என்று புன்சிரிப்பில் பதிலைத் தூவினார் ரமேஷ்தாஸ்.

சுசீந்தர் ஓர் அரைக்கணம் நிலைதடுமாறிப்போனான்; அந்த அம்மணியை இமைக்காமல் பார்த்தான். மஞ்சளும் திலகமும் நிறக்க நின்றாள் அவள். தள்ளாமையின் முத்திரை ஆழப் பதிந்துவிட்டிருந்தது.

"சுசீ!"

அவன் சும்மாயிருந்தான். அவள் 'என்னாங்க?' என்றாள்.

"நான் இப்போது கூப்பிட்டது தம்பியையாக்கும்!" என்று அவர்சிரித்தார். மூக்குக்கண்ணாடியைச் செம்மைப் படுத்திக்கொண்டார். சுசீந்தரைப் பார்த்தார்.

"அப்பா!"

அவனை அவர் நோக்கினார். அப்போது கலைமான் ஒன்று ஓட்டமாக ஓடி வந்து அவரிடம் அண்டியது.

"அப்பா எனக்கு ஒரு பரிசு தருவதாகக் குறிப்பிட்டீர்களே? இதுதானா? நம் வீட்டுப் பிணைக்கு இணையான கலை இதுவோ?"

"சுசி! உனக்குப் பரிசு கொடுக்கப் போவதாக நான் சொன்னேன் அல்லவா? அந்தப்பரிசுக்கு மூலாதாரமாக இருந்தவர்—இருப்பவர் இந்த அம்மாவேதான்!" என்றார் ரமேஷ்தாஸ். குரலில் கனிவு சொட்டியது.

சுசீந்தர் இன்பம் கொண்டான். அந்த அம்மாளின் காலில் விழுந்து கைதொழ வேண்டும்போலிருந்தது. 'அப்பா, நான் பி. ஏ. பட்டம் பெற்ற இந்த மகிழ்ச்சியில் உங்களுடன் பகிர்ந்துகொள்ள என் தாயரும் இருந்திருந்தால், எவ்வளவு பெருமிதம் உண்டாகியிருக்கும்? அன்னைத் தெய்வத்தின் முக தரிசனம் கிடைக்கக்கூட கொடுத்து வைக்காத பாவி ஆனேனே நான்? பிறந்தவுடனேயே, பெற்றவளை விழுங்கி விட்டேனே?'—பழைய நிகழ்ச்சியின் 'வாடை' தட்டியது. உண்மைப் பழ வினையின் நிழலா?

"சுசீ! தம்பி உன்னை இல்லே! இந்த அம்மணிக்கும் சுசீ என்றுதான் பேர். சுசீலா! ஆமாம், சுசீலா! நீ இரு! சுசீ! எங்கே கலா?"

"இதோ!" என்று பதில் மிதந்து வந்தது.

"ஓ! வாம்மா!"

"எழிலுக்கு நானே இலக்கணம்!" என்று சொல்லாமல் சொல்லி நின்றாள் அந்தக்கன்னி!

"நேசமுள்ள வான்சுடரே! நின்னழகை எதுரைப்பேன்?

கண்ணம்மாவைக் காதலியாகக் கொலுவைத்துப் போற்றிப் புகழ்ந்து அவள்பால் உள்ளம் வைத்துப் பாடிய ஓர் உள்ளத்தின் பாங்குரைக்கும் இவ்வரிகளை சுசீந்தர் ஆயிரம் முறை நினைத்தான்; மனத்துக்குள்

ளாகவே பாடினான் சுசீந்தர்; இதய ஒலியை கலாவல்லி யும் கேட்டுணர்ந்தனளோ?

“எல்லாம் கலாவின் கைப்பாடம்!” என்று முன் னுரை சொல்லி விருந்து படைத்தாள் அந்த அம்மணி சுசீலா.

துப்புப் புரிந்ததாலோ, என்னவோ, சுசீந்தர் நாலு பிடி கூடுதலாகவே உணவு கொண்டான். அவனுடைய ருசிப்புத் தன்மையை ஓரக்கண் நீட்டி அனுபவித்த பெரியவர், அக் காட்சியை சுசீலாவுக்கும் ஜாடையாகக் காட்டி ‘சைகை’ செய்தார். முதியவளின் கண்களில் நீர்ப்பெருக்கின் நிறைவு இருந்தது.

‘இவள் தான் கலா’ என்று அறிமுகம் செய்து வைத்த தந்தையின் பாசத்தை உணர்ந்ததும், சுசீந்தரின் உடம்பில் புளகம் போர்த்தது. அவன் கைகழுவ வெளித் தாழ்வாரம் நோக்கி வந்தான். முற்றத்தைக்காட்டி, அவனது எச்சில் கையில் தண்ணீர்ச் செம்பையும் கவிழ்த்து வைத்தாள் குமரிப்பெண். அவன் சிரிப்பை இதழ்களில் ஏந்தி, தலை நிமிர்த்தி, கண்களை சம அளவில் பாய்ச்சி, ஏந்திழை கலாவை ஏற இறங்க நோக்க லுற்றான்.

“உன் அழகை வர்ணிக்க எனக்கு ஏது சக்தி?” என்று தன்னை மறந்து பேசினான்.

அவளுக்கு அதிசயமாகப் போய்விட்டது.

“நான் அத்துணை அழகாகவா காணப்படுகிறேன்?” என்று கேட்டாள்.

“பின்னே?”

இப்போது அவனிடமிருந்து துள்ளி வந்த பதில் அவனது உள்ளத்தின் அனுமதி பெற்றுத்தான் ஒலி காட்டியது. அவன் அவளேயே இமை கூட்டாமல், ஆனுல் இன்பம் கூட்டிப் பார்வை செலுத்திஞன்.

பட்டுத்தளிர் மேனி. அதற்குப் பொருந்திய பட்டுச் சோளி, கனவுகள் விளையாடிய நீலக்கருவிழிக் கணேகள், அவற்றின் ஒப்பில்லா அழகை இன்னும் கூடுதலாக்கிக் காட்டவல்ல வானவில் தாவணி, பருவம் சீதனம் அளித் திருந்த நாணம், நாணம் 'மொய்'எழுதிய உடற்கவர்ச்சி. காலச் சிற்பியின் கனவுப் பதுமையா அவள்?

உதறிய விழிவிரிப்பைச் சுருட்ட மறந்தான் வாலிபக் காளே அவன்.

அவளோ நாணம் மிகக் கொண்டவள் போன்று, "தாம்பூலம் தரியுங்கள்!" என்று அவனுக்கு நினேவு ஈந்தாள்.

அவனும் சிரிக்க மறக்கவில்லே. ஒரு சமயம், தன் னுடன் வாசித்த மதுரைக் கல்லூரிமாணவரின் திருமண வைபவத்துக்குப் போயிருந்தான் அவன். விருந்து முடிந்தவுடன், வெற்றிலே பாக்குத் தட்டு வந்தது. அவன் மட்டும் தாம்பூலம் போட்டுக்கொள்ளவில்லே. மணமகன் வந்து, 'உனக்கும் என் மாதிரியாகக் கலியா ணம் நடந்தால், இதன் அருமை பெருமை தெரியும்' என்று சொல்லி, 'பீடா' ஒன்றைத் தயாரித்து அவனிடம் நீட்டிஞன். அவனுல் மறுப்புக்கூற இயலவில்லே. அந் நிகழ்ச்சி இப்போது நெளியவே, இளஞ்சிரிப்பும் நெளிந் தது. மறுவார்த்தை ஆடாமல், தாம்பூலம் போட்டுக் கொண்டான் சுசீந்தர். "தம்பி, உன் இஷ்டப்பிரகாரம் ஹாஸ்டலுக்கும் காலேஜுக்கும் உன் கைச்செலவுக்கு

மாக பணம் ரூபாய் இருநூறு இன்று அனுப்பியிருக்கிறேன். நீ பட்டம் பெற்றதும், உனக்குத் திருமணமும் செய்து வைத்துவிட்டால், என் கடமை முடிந்துவிடும்!'' என்று வந்த கடிதமும் சட்டை உரித்துக்கொண்டது. 'அப்பா எனக்குப் பரிசு கொடுப்பதாகச் சொன்னார்களே அந்தப் பரிசு ஒருவேளை... கலாவாக இருக்கக்கூடுமோ? அப்படியே இருந்துவிட்டால், எவ்வளவு அற்புதமாக இருக்கும்!' என்று அவன் சிந்தனை ஓடியது.

ரமேஷ்தாஸும் சுசீலாவும் அவ்விடம் திரும்பிய தருணத்தில் சுசீந்தர் இதழ்சிவக்க நின்றான்; கலாவல்லி கன்னம் சிவக்கக் காணப்பட்டாள்! இருவருக்கும் வெட்கமா?

''சுசீந்தர், சற்றுநேரம் என்னுடன் தனியாக வருகிறாயா?'' என்றார் அவர்.

அவன் அவரைத்தொடர்ந்தான். பயிர்த் தொழிலுக்காக கட்டப்பட்டிருந்த நீர்த்தேக்கத் தொட்டிலின் விளிம்பில் அவருடன் அவனும் அமர்ந்தான். சூடு தணிந்த கதிர்க் கற்றைகள் தண்ணீர்த் துளிகளுடன் அணைந்து விலகி மகிழ்ந்திருந்தன.

''தம்பி! சுசீலா தன் உயிரைப்போல வளர்த்தபெண் கலா. திருச்சியில் ஹோலிக்ராஸில் படித்தவள். இண்டர் படிப்பு போதாதா? உனக்கு ஏற்ற அழகி கலா. குணக்குன்று கலா. நான் உனக்குக் கொடுப்பதாகச் சொன்ன பரிசு கலாதான்! உங்கள் திருமணம் முடிந்துவிட்டால், அப்பால் என் மனம் சாந்தி பெற்றுவிடும். உங்கள் இன்பச் சுழலிலே பிணையும் கலையும் ஓடியாடித் திரிந்து குதூகலம் அடையவும் ஆரம்பித்துவிடும்!'' என்றார் அவர். இமைகளின் வரம்புகளில் நீர்ச்சரம் தொடுத்திருந்தது.

"உங்கள் விருப்பம் எதுவோ அதுவேதான் என் கடமை!" என்று குனிந்ததலை நிமிராமல் பதிலிறுத்தான் சுசீந்தர்.

முதியவர் ஆனந்தக் கண்ணீர் பெருக்கினார்.

இரவு தாழ்வாரத்தில் படுத்துக்கொள்ள வந்த சுசீந்தர், பையிலிருந்த துப்பட்டியை எடுத்தபோது, பழைய கிழிசல் காகிதம் ஒன்று வந்து விழுந்தது. விளக்கைத் தூண்டினான்; அதன் தலைப் பகுதி தீயிக்குப் பதில் சொல்லியிருந்தது. தெரிந்த வாசகம் இது: "இல்லையென்றாலோ, உன்னைச் சந்திக்கு இழுத்து வைத்து, ஆட்டிப் படைத்து விடுவேன். விதி என் ருபத்தில் உன் வாழ்க்கையிலே விளையாடிவிடும்! உஷார்! உன் எதிரி." அவ்வளவுதான்!

சுசீந்தர் இரவு பூராவும் ரத்தக்கண்ணீர் வடித்தான்!

விண்ணும் மண்ணும் நிறைந்து விளங்கிய தெய்வங்கள் குடியேறியிருந்த அந்தச் சித்திரங்களின் திருச்சந்நிதானத்திலே, சுசீந்தரும் கலாவல்லியும் தம்பதி ஆயினர். மணமாலைகள் கோலமிட, கோல நகை தாங்கி நின்றனர். மெய்பதித்து வணங்கி மீண்டனர்.

நமஸ்காரம் செய்த இருவரையும் நெஞ்சு நிறைய வாழ்த்தினார்கள் ரமேஷ் தாஸூம், சுசீலாவும். அட்சதை மணிகள் தூவி, திருநீறு பூசினர். இதயக் கனிவுடன் வாழ்த்தினார்கள்!

கலாவல்லி மஞ்சள் தாலியைத் தொட்டுத் தொழுதாள். விழிகளில் இன்பக் கண்ணீர்.

சலனம்கண்டிருந்த உள்ளத்தைக்காட்ட விரும்பாதவனைப் போன்று, கலை சேர்த்துத் திகழ்ந்தான் சுசீந்தர். இருந்தாலும், அவன் கண்ணோட்டம் பெரியவர் மீதே ஆரோகணித்திருந்தது! அதைத் திருப்ப முடியவில்லை!

சுசீலா பரிமாற, தம்பதியுடன் அமர்ந்து ரமேஷ் தாஸும் கல்யாணச் சாப்பாட்டை முடித்தார். பிறகு, சற்று நேரம் ஓய்வு எடுப்பதாகச் சொல்லிச் சென்றார்.

புது மனைவி ஆசையுடன் பேச விழைந்து நெருங்கி வந்தும்கூட, எதையோ நினைத்துக்கொண்டவனாக, விரைந்து பிரிந்தான் அவன்.

அப்போது:

கோப்பையை இதழ் ஓரத்தே கொண்டு சென்றார் ரமேஷ் தாஸ். அதைத் தடுத்துத் தள்ளிவிட்டான் சுசீந்தர். பின்னர் சாவதானமாகச் சொன்னான்; "உங்களை நான் நேற்றிரவே இனம் கண்டுவிட்டேன். எங்கள் மணவினைக்கு முன்னதாக, உங்கள் இதயத்தை எடுத்துரைத்த இந்தக் கடிதத்தையும் உங்கள் ரகசியப் பையினின்றும் பிரித்தெடுத்துப் பார்த்தேன். எப்போதுமே என் பார்வையில் பூட்டப்பட்டே காணப்பட்ட பெட்டகமும் நேற்றிரவு உடைபட்டது. உங்களது இனிய நல் வாழ்க்கையிலே வெறியாட்டம் நடத்திய ஒரு மனிதப்பேயின் பயங்கர உருவத்தையும் அப்போது நான் கண்டேன்!"

இன்னும் என்னென்ன சொல்ல வேண்டுமென்று துடித்தானோ, சுசீந்தர்? உடல் நடுக்கம் நாவைத் தடுத்தது. மறைத்து வைத்திருந்த அக்கடிதம் வெளிச்சத்திற்கு வந்தது. அது பேசவும் தொடங்கியது:

"உயிருக்குயிரான சுசீந்தர்!"

இன்று உனக்கு ஒரு சுப நாள்.

இன்று எனக்கும் ஒரு நல்ல தினம்.

மனம் திருந்திய அல்லது மனச்சாட்சி திருந்திய என்னுடைய இந்தப் பொய்யான உருவத்தின் பின்னே மறைந்திருக்கிற உண்மையை நீயும் அறிந்துகொள்ளக் கூடிய வேளை இன்றுதான் வாய்த்திருக்கிறது.

சில உண்மைகளை இப்போது நான் உனக்குத் தெரியப்படுத்தியாகவேண்டும்.

சுசீலா இருக்கிருளே, அவள் யார் தெரியுமா?

அவள் என் ஆருயிர்த் துணைவி!

அவளை நான் காதலித்தேன். செல்வர் வீட்டுச் சீமானின் அருமைப் புதல்வனை என்னையும் அவள் நேசித்தாள். இதற்கிடையில், எங்கள் கல்யாணத்துக் கான ஏற்பாடுகள் நடந்தன. அப்போது ஓர் உன்மத்தன் உருவத்திலே 'விதி' தாறுமாருக விளையாடியது. கொண்ட மனைவி கைக் குழந்தையுடன் இருக்கின்ற நேரத்திலே, அந்த வெறியனுக்கு சுசீலாபேரில் மையல் ஏற்படவே, வண்ணாத்திப் பூச்சியைப் பிடிக்க வலை பின்னும் சிலந்தியானுன் அவன். அவன்தான் ஆண்டி யப்பன். முகூர்த்த நாளுக்கு முன்னே சுசீலாவை கடத் திச் செல்ல ஆட்களை ஏவினுன். துப்பறிந்த நான் என் உயிரையே பணயம் வைத்து என் சுசீலாவின் மானத் தையும் உடலையும் காத்துக்கொண்டேன். திருமணத் தன்றைக்கும் கலாட்டா செய்தான். அவன் கொடுத்த பரிசுதான் என்னுடைய இந்த ஊனம்!

ஆனுல், அன்றிரவு நான் அவனுக்குக் கொடுத்த 'கழி வீச்சு' அவனுடைய உயிரைப் பறித்துக்கொண்டு விட்டது! நான் செய்த பாவம் எனக்குத் தோன்ருமல், நான் சுசீலாவுக்கு அருளிய தாலிதான் பெரிதாகத் தோன்றியது. சுசீலாவின் கண்ணீர் என்னைக் கோழை யாக்கியது. அவள் மீதிருந்த காதல் வெறி என்னைப் பயந்தாங்கொள்ளியாக்கியது. ஆகவே மூன்ரும் பேருக் குத் தெரியாமல் நடந்த இந்த நடப்பை அம்பலப்படுத்தி விடாதிருக்கச்செய்யும்படி ஆண்டியப்பனின் மனையாட்டி யிடம் கெஞ்சினேன், அவள் தெய்வம்! ஒப்புக்கொண் டாள்! அடுத்த நாள் அவள் தன் சிசுவை என் வீட்டில் போட்டுவிட்டு, கணவனின் வழியே சென்று மறைந் திட்டாள்! அந்தத் தெய்வத்தை எப்படி உன்னிடம் இனங்காட்ட முடியும்?

அந்தப் பெண்தான் உன்னை ஈன்ற தெய்வம்! என் மானத்தைக் காத்த தெய்வம்!

கலா என் மகள்!

என் மனச்சாட்சியின் துன்புறுத்தல்காரணமாகவே, சுசீலாவும் நானும் இதுநாள்வரை பிரிந்திருக்கின்ருேம்! ஊர்ப் பயமுறுத்தல்களுக்குப் பயந்து, அச்சுறுத்தும் அனுமதேயக் கடிதங்கட்கு அஞ்சி, செங்கற்பட்டுப் பகுதியைவிட்டுப் பிரிந்து வந்த நான், என் மனச்சாட் சிக்குப் பயந்து எங்கே ஒளிவேன்?

அதற்கு ஒரு திட்டம் வகுத்திருந்தேன். அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தவே, உன்னிடம் என் மகள் கலாவை ஒப்படைக்கத் துடித்தேன். அந்தக் கனவும் பலித்துவிட்டது. இனியும் நான் என் வேஷத்தை உன் முன் கலைத்துக் கொள்ளாமல் இருக்க என் மனம்

என்னை அனுமதிக்கவில்லை. நான் கொலைகாரன்! நான் பாவி!

என் கறையை மன்னித்துவிடுவாய் நீ. நான் அறிவேன்!

ஆனால், என் குற்றத்தை ஆண்டவன் மன்னிக்க மாட்டானே?

இன்று தினம், நீதியின் தீர்ப்பு நாள்!

இனி நான் நிம்மதியாகக் கண்களை மூடிவிடுவேன். சுசீலாவிடமிருந்து உனக்கு 'உயில்' கிடைக்கும். உன் அன்பு என் மீது துளியளவாவது எஞ்சி இருக்குமானால் அந்தத் துளியைக் கலாவுக்கு உரிமையாக்கு; உடைமை யாக்கு! இதை நீ செய்வாயல்லவா?

ஆண்டவன் என்னும் நீதிதேவன் பின்னிவரும் விதி என்கிற வலையினுள் இதோ, வீழவிருக்கும் சிலந்தி நான்!

உன் தந்தையைக் காண வேண்டுமானால், எப் போதுமே பூட்டப்பட்டிருக்கும் நம் வீட்டுப் பெட்டகத் தைத் திறந்து பார்!

என்னை மன்னித்துவிடு, தம்பி!

இப்படிக்கு, ரமேஷ் தாஸ்!"

"அப்...மா...மா!" என்று அலறித் திரும்பினான் சுசீந்தர்.

மறு கணம், "ஐயையோ!" என்று கூக்குரல் பரப்பினான் அவன்.

துப்பாக்கி வெடிச் சத்தத்தில் சுசீலாவின் நெற்றிப் பொட்டு அழிந்தது!

"ஐயையோ! உங்களுடைய உயிரைக் கட்டிக்காக்க வேண்டுமென்று என்னவெல்லாமோ பிரயத்தனப் பட்டேனே? துப்பாக்கி ரவைகளையும் உங்கள் பார்வைக்குத் தட்டுப்படாமல் நானே பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டேனே? என் முடிவுக்கும் மிஞ்சிவிட்டதே உங்கள் முடிவு? இந்த ஒரு முடிவை ஏற்படுத்திக் கொள்ளத்தான் இந்த இருபதுவருஷ காலமாக நீங்கள் தவம் இருந்தீர்களா?"

பச்சைப் பாலகனைப் போல அவன் புரண்டு புலம்பினான்; மண்டையில் அடித்துக்கொண்டு கதறியழுதான்!

உதிர்ந்து விழுந்து ஓடிக்கொண்டிருந்த துப்பாக்கித் தோட்டாக்கள், வழிந்தோடிக்கொண்டேயிருந்த விழிநீர் வெள்ளத்திலே அழுந்திப 'புனிதம்' அடைந்தன!

# தங்கத் தாலி

'குறி' போடப்பட்ட அழுக்குத் துணிகள் கும்பல் சேர்ந்திருந்தன. அவற்றை ஓர் ஓரமாகத் தள்ளிவிட்டு உட்கார்ந்தான் கருப்பன். 'புகையிலே மட்டை'த் துண்டு ஒன்று அவன் வாயில் ஊறியது; எச்சில் ஊறிக்கொண்டிருந்தது. இரு உதடுகளுக்கும் மத்தியில் இடது கை விரல்கள் இரண்டை வைத்து, அவற்றினூடே ஊற்றெடுத்த எச்சில் துளிகளை வாசலுக்கு வேகமாக அனுப்பினான் அவன். 'கொக் கொக்' என்று சிணுங்கல் இருமல் புறப்பட்டது.

"ஏ, அப்பா! வெளுத்ததுக்கு அல்லாத்துக்கும் பொட்டி போட்டாச்சு; எனக்குப் பதினஞ்சு காசு கொடு; கடைப்பக்கம் போயி இடியாப்பம் சாப்பிட்டுவிட்டு ஓட்டமாக வரேன். துறைக்குப் போறதுக்கு, அப்பாலேதான் தெம்பு வருமாக்கும்!''

பேசியது இளவட்டம்; ஆனால் சிரித்தது பழுத்த பழம்.

“நல்ல...பய மவண்டா இவன்!...ஏலே, சொக்கப்பா! உள் வீட்டு மாடத்திலே ஒரு சுருக்குப்பை இருக்கு; அதைப் பிரிச்சு நீ கேட்டதை மட்டும் எடுத்துக்கோ, சொச்சம் எனக்குப் பசியாற வேணும்! சொக்கப்பா! சொக்கப்பா! அடுப்படியிலேயிருந்து ஒரு குவளை நீராகாரம் ஊத்தியாந்து கொடுத்துட்டுப் போ. வெறும் வயித்துக்கு இப்ப அதை ஊத்தி வைச்சால் தான் மூச்சுவிடாமல் கெடக்கும்” என்று சொல்லிக் கொண்டே, குறி போடப்பட்ட துணிமணிகளை ஒவ்வொன்ருகப் பிரித்து உதறலானுன் கருப்பன். ரத்தம் சுண்டின கைகளில் வலி எடுத்தது.

இன்னும் சரிபாதி மிஞ்சிக் கிடந்தது. மகன் கொண்டுவந்த நீராகாரம் கும்பியை நனைத்துப் பதப் படுத்தியது. சொக்கப்பன் சென்ற வழியே சென்று மீண்டன கருப்பனின் விழிகள். மறுவிநாடியில், சன்னமான இனிய குரலொன்று கேட்டது. கடலைக் கொல்லையை அடுத்திருந்த குடிசைக்கு முன்பு நின்ற பெண் அவனது பார்வையில் தட்டுப்பட்டாள். பெயர் பொன்னம்மா. கருப்பன் எண்ணமிட்டான். ‘என்னமோ இந்தக் கட்டையை அலஞ்சிருங் காட்டுச் சுடலையிலே போடறதுக்குள்ளாற, பயலுக்கு இந்தக் குட்டியைக் கட்டிப் போட்டுப்பிட்டா எம்பிட்டோ நிம்மதியாகிப் போகும்! ம்! நூறு, ஐம்பது பணம் எங்கேயிருந்துதான் வந்து கொட்டப் போகுதோ? அந்த அங்காளம்மனுக்குத்தான் தெரியும்!’

எஞ்சியிருந்த அழுக்குத் துணிகளில் அவன் நோக்கு தஞ்சமடைந்தது. சட்டை, வேஷ்டி, ரவிக்கை, புடவை, கோட்டு:இப்படி ஒவ்வொன்றையும் உதறினுன் கருப்பன். பொத்தான்கள் மூன்று கிடைத்தன. ஒரு

சட்டையில் ஒரு காசு இருந்தது; எல்லாவற்றையும் எடுத்துத் தட்டுப் பலகையில் வைத்தான். கடைசியாகக் கிடந்த புத்தம் புதிய பழுப்பு நிறக் கால்சட்டையை உதறிவிட்டு, சட்டைப் பைகளைப் பிரித்தான்; இரட்டை வடத் தங்கச் சங்கிலியில் இணைக்கப்பட்டிருந்த தங்கத் தாலி ஒன்று தரையில் விழுந்தது! நட்ட மரம்போன்று அப்படியே நின்றுவிட்ட அவன் சுய நினைவு பெற இரண்டு விநாடிகள் தேவைப்பட்டன. கால்சட்டையின் இடுப்புப் பட்டையைப் புரட்டி, குறி என்ன போட்டிருக்கிறது என்று தேடினான். குறியைக் கொண்டுதானே அது யாருக்குச் சொந்தமானது என்பதை அறிந்து கொள்ள முடியும்? குறி ஏதும் காணப்படவில்லை. தரையில் தனித்திருந்த தங்க நகையின் பேரில் ஒற்றைக் கண்ணை நாட்டியவாறு, நரை திரண்டதலைக் குடுமிக் கேசத்தை ஒரு தட்டுத்தட்டி முடிந்தான் அவன். 'குறி போட மறந்துபூடிச்சு போலே!' என்று முடிவு செய்து. குறிபோடும் மைச் சீசாவை எடுத்து, மூன்று புள்ளிகள் வைத்துவிட்டு, கால்சராயைத் துணியுடன் துணியாக வீசினான். 'செட்டித் தெருப் பள்ளிக்கூடத்துக்குப் புதிசா மாத்தி வந்திருக்கிற வாத்தியார் ஐயாவோடது இந்தக் கால்சராய்!' மகன் சொன்ன அடையாளம் இது!

கருப்பனின் மனம் அந்தத் திருமங்கல்யத்துடன் பிணைந்து, கடந்த காலப் பனிமூட்டத்தைத் துண்டாடிப் பிளந்து பாய்ந்தபோது, அவனுடைய விழிகளிலிருந்து நீர்த்துளிகள் ஒவ்வொன்றாகச் சிதறித் தெறித்து, விழுந்துகொண்டிருந்தன.

கத்தரிக்காடு என்று அந்த ஊருக்குப் பெயர். குக்கிராமம். அதன் வடக்குக் கோடியில்தான் சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் இருந்தன. அவற்றில் கருப்

பனின் குடும்பமும் ஒன்று. அவன், அவனை நம்பி யிருந்த அவனுடைய நித்திய வியாதிக் காரியான மனைவி ராக்காயி, அவன் மகன் சொக்கப்பன் ஆகிய மூவருக்கும் தலைமுறை தத்துவமாகக் கைக்கொண்டிருந்த 'வெளுப்பு வேலை' படியளக்கவில்லை. ஆகவே, அவன் திக்குமுக் காடிப் போனான்.

கிடைத்து வந்த வரும்படி வாய்க்கும் கைக்குமே பற்றும் பற்றாததாக இருந்தது.

இப்படியிருக்கும்பொழுதுதான் ஒரு நாள் அடம் பிடிக்கும் பணக்காரக் குழந்தையைப்போல் மழை நின்று நின்று பெய்தது. பின்னங்கால்கள் இரண்டும் கட்டப் பட்டு வாசலில் நின்ற கழுதையைப் பிடித்து வந்து வாசல் தாழ்வாரத்தில் கட்டுவதற்குள் வியாதிக்காரி யான ராக்காயிக்கு மேல்மூச்சு கீழ் மூச்சு வாங்கியது. மழையில் வேறு நனைந்து விட்டாள். அதைச் சாக்காகக் கொண்டு குளிர்க் காய்ச்சல் வந்துவிட்டது அவளுக்கு. வெளுப்பதற்கு வந்திருந்த புடவைகள் அத்தனையையும் அவள்மேல் போர்த்தியுங்கூட, அவள் உடம்பு நடுங்கிக் கொண்டேயிருந்தது. இக் காட்சியைக் கண்டதும், கருப்பன் பதறித் துடித்தான். ஓடிப்போய் உண்டியற் கலயத்தைக் கையில் எடுத்துச் சில்லறைக் காசுகளைச் சேர்த்தான். அரை ரூபாய் சேர்ந்திருந்தது. எடுத்து முடிந்துகொண்டு, நாட்டு வைத்தியர் வீட்டுக்கு ஓட்ட மாக ஓடினான்.

வந்த வைத்தியர் நாடிப் பரிசோதனை செய்தார். இது கபவாத ஜுரம். செட்டித் தெருவிலே இருக்கும் புது டாக்டர் ஐயாவைக் கூட்டியாந்து பாரு, கருப்பா! ஆனால் அவர் ரொம்பக் கரூர் ஆசாமியாம். பத்து அஞ்சு பணத்தைக் கொடுத்துக் கையோடு அழைத்து வந்து

காட்டு. மூன்று நாலு ஊசி ஏற்றினல் எல்லாம் வசத்துக்கு வந்துவிடும்!'' என்ருர் நாட்டு வைத்தியர்.

மண்ணுல் செய்யப்பட்ட ஐயஞர்போல் கருப்பன் மருண்டுபோய் நின்றுவிட்டான். ராக்காயிக்குச் சீக்கு ரொம்ப மிதமிஞ்சிப் போச்சுப்போலே. இல்லாட்டி, தனக்கு வருகிற வரும்படியை விட்டுப் போட்டு, டாக்டர் ஐயாவை எதற்குக் கைகாட்டிப் போகணும்?...டாக்டர் பணத்திலே குறிகாரர்னு முந்தாநாள்கூட யாரோ பேசிக்கிட்டாங்க. அவருக்குப் பத்து அஞ்சு கொடுக்கிற துக்கு இப்ப நான் எங்கே போவேன்?'' என்று நெஞ்சம் நெக்குருகிஞன் கருப்பன்.

தெரிந்த 'எசமானர்களிடம் பல்லேக் காட்டி, வழி மறித்திருக்கும் தலைவிதியை எடுத்துக்காட்டி, பணம் கடன் கேட்டான். தவணை வைத்து 'வட்டிக் காசையும், தந்திடறேனுங்க; காசு பணம் ஏதும் வாங்காமல் உங்கள் துணிமணிகளை யெல்லாம் சலவை செஞ்சு தாரேனுங்க!'' என்று என்னவெல்லாமோ சொல்லிப்பார்த்தான். எந்தக் கணையும் அவனுக்கு நல்ல பதில் கூறவில்லை. கடைசியில் ஏமாற்றமே உயிராகக் குடிசையின் உள் வீட்டறைக்கு நடந்தான். கள்ளிப்பெட்டியைத் துழாவிஞன்; செப்புத் திருகாணி கூடக் கைக்குள் சிக்கக் காணும். மிளகாய்ப் பானைக் குள் கையை நுழைத்தெடுத்தான். ஏதோ ஒரு பொருள் பார்த்தான். திடுக்கிட்டான். தாலி! தங்கத் தாலி! ராக்காயின் கழுத்தில் இருபத்தொன்பது வருஷங் களுக்கு முன் பூட்டிய மங்கலச்சின்னம் அது. நினைவுகள் தறிகெட்டுச் சுற்றின; அவன் பம்பரமாகச் சுழன்ருன். மூன்ரும் மாசம் ராக்காயி குளித்துக்கொண்டிருக்கையில் தங்கத்தாலியின் பின்பக்க இணைப்பில் பிளவு கண்டிருப்

பதை உணர்ந்தாள்; மஞ்சள் ஒன்றை வீட்டுக்கு வந்து எடுத்துக் குலதெய்வத்தை நேர்ந்துகொண்டு மஞ்சள் தடவின கயிற்றில் முடிந்து கழுத்தில் அணிந்து கொண்டாள். "ஆசாரியிடம் பத்தவைச்சுத் தந்திடு றேன்!" என்று மனைவியிடம் அளித்த உறுதியைச் செயற்படுத்துவதற்கு அவனுக்கு ஓய்வு இடங்கொடுத் தால்தானே?

ராக்காயியின் உயிரையும் தன் உள்ளத்தையும் அடைத்து வைத்திருந்த அந்தத் தாலியையே இமை மூடாமல் பார்த்தவாறு இருந்த கருப்பனுக்கு ஏதேதோ பயங்கரமான எண்ணங்கள் படமெடுக்கும் பாம்புகளாக உருமாறிச் சீறத் தொடங்கின.

*"அய்ய...ஆத்தா...சாமி!"*

உயிர்ப் பாகத்தில் இவ் வார்த்தைகள் எதிரொலித் தன. ஒரு கணம் சிந்தித்தான்; அவன் கைகள் கூம்பின; கண்ணீரை வழித்தெறிந்துவிட்டு, கைக்குள் அடங்கி யிருந்த தாலியுடன் டாக்டரை நாடிப் பறந்தான், செட்டித் தெருவில் கும்மிருட்டு அப்பிக் கிடந்தது. கீழத் தெருவிலிருந்து ஊளையிட்ட நாயின் அவல ஓலம் அவனை அச்சுறுத்தியது. கைக்கழியைக் கீழே போட்டு விட்டு, "டாக்டர் ஐயா!" என்று குரல் கொடுத்தான்.

தூக்கம் கலைக்கப்பட்ட டாக்டருடன், தூண்டிவிடப் பட்ட கோபமும் வந்தது.

மென்று விழுங்கிக்கொண்டே விஷயத்தை வெளி யிட்ட ஏழை, அவர் வாய் திறந்து பணத்தைப் பற்றிக் கேட்பதற்கு முன்பாகவே தான் கொணர்ந்த தாலியை

அவர் காலடியில் வைத்து விம்மியவாறே, "இதை நம்பிக்கைக்கு வைச்சுக்கிடுங்க, எசமான்! அடுத்த கிழமை பீசுப் பணம் பூராத்தையும் கட்டிப்பிட்டு, இதை மீட்டுக்கிட்டுப் போகிறேன். இது என்னுடைய சம்சாரத்தினுடையது. அந்தப் பொம்பளைக்குத்தான் இப்ப சீக்கு அதிகமாயிருக்கு. நீங்கதான் எனக்குத் தெய்வம் கணக்கிலே! அட்டி சொல்லாமல் வந்து பாருங்க!" என்றான்.

டாக்டர் நாகசுந்தரத்தின் வீட்டுப் பெட்டியில் அந்தத் 'தாலி' அடங்கியது.

"சரி வண்டி கொண்டு வரலையா?"

"இல்லீங்க!"

"இப்போ காட்டிலேயும் மேட்டிலேயும் அந்தக் கும்மிருட்டிலே எப்படி நான் நடந்து வர்றது?" என்று கேட்டார் டாக்டர்.

"இருங்க, இந்தா கொண்டு வாரேன்!" என்று திரும்பிய கறுப்பன் மொட்டை வண்டியுடன் வந்து டாக்டரை ஏற்றிச் சென்றான்.

மூன்று நாட்கள் ராக்காயிக்குச் சுயநினைவு திரும்பவில்லை. ஊசி மருந்து டப்பாக்கள் செலவழிந்தன; மருந்துக் கலவைகள் உடலுக்குள் முடங்கின. ஆனால் நான்காவது நாள் டாக்டரை அழைத்துவர இரவல் மாட்டு வண்டியைத் தேடிச் செல்லவேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

ஏறு முகத்தில் இருந்தான் செஞ்சுடர்ச் செல்வன்.

இரட்டைவடச் சங்கிலி அறிமுகப்படுத்திக்கொண்டிருந்த தங்கத்தாலி கருப்பனின் உள்ளங்கையில் நெல்லிக்கனியாகக் காட்சியளித்தது. அதிகமானுக்குக் கிடைத்த நெல்லிக்கனி ஔவைப் பிராட்டிக்கு உதவ முனைந்தாற்போல, ஒருவேளை, இந்தத் தாலி இவனுக்கு கை கொடுக்கப் போகிறதோ... அவரைக் கருப்பன் பார்த்தது இல்லையே?... சொக்கப்பனல்லவா அவரிடமிருந்து 'அழுக்கு' எடுத்துவந்தான்...?

மூன்று மாதங்களுக்கு முந்தைய நிகழ்ச்சிக்குள் ஞாபகத்தை பதித்துவிட்டான் அவன். 'ராக்காயியின் நினைப்புக்கு அவள் தாலியாச்சும் இந்தக் குடிசையிலே இருந்தால் மனசுக்கு எம்பிட்டோ ஆறுதலாயிருக்குமே! அதற்குக்கூட வழிவைக்காமல், அந்தஈவில்லாத டாக்டர் மாற்றலாகிப் போகும்பொழுது, சொல்லாமல் கொள்ளாமல் தன்னோடேயே ராக்காயியின் தாலியையும் எடுத்துக்கிட்டுப் போய்விட்டாரே...!' என்ற எண்ணங்கள் தலையெடுத்தன. அவன் பற்களைக் கடித்துக் கொண்டான்.

இப்போது கருப்பனின் மனத்தில் புதிதாக ஓர் ஆலோசனை பளிச்சிட்டது. அந்த ஆலோசனையின் பிற்புலத்திலே பொன்னம்மாவும் சொக்கப்பனும் ஆலவட்டம் சுற்றினர். இந்தத் தாலியையும் சங்கிலியையும் ஒளிச்சுவச்சு, புதுக்கோட்டைப் பக்கம் நாடிப்போய் விற்றுப் பணமாக்கினால், எப்படியும் நூறு, இருநூறு ரூபாய் தேறும். காதும் காதும் வைச்சாப்பிலே, பொன்னம்மாவுக்கும் சொக்கப்பனுக்கும் கண்ணாலம் கட்டிப்பிட வேண்டியதுதான்!... டாக்டர் எனக்கு உண்டாக்கின நஷ்டத்துக்கு ஈடு கட்டத்தான் சாமி இந்தத் தங்க நகையை என் கண் முன்னால் காட்டியிருக்

குது போல! ஆமாம், அப்படித்தான் இருக்கும்!' என்று முடிவு செய்தான் அவன்.

ராஜேந்திரபுரத்துப் பாலத்தடியிலிருந்து திரும்பிய கருப்பன் உலர்ந்த துணி மூட்டையை இறக்கிக் கீழே தள்ளிவிட்டது தான் தாமதம்: கழுதை பிடித்தது ஓட்டம் சொக்கப்பன் ஓடிவந்து மூட்டையைக் குடிசைக்குள் தூக்கிச் சென்றான்.

"அப்பா! வாங்க முதல்லே சோறு சாப்பிடலாம். அப்பாலே மற்ற வேலையைப் பாருங்க!" என்றான் மகன்.

"நீ ஆக்கினியா...—?

"இல்லே. வந்து...நம்ப பொன்னம்மா சமைச்சுத் தந்துச்சு...?"

"அப்படியா?......இரு, மூஞ்சியைக் களுவிக்கிட்டு வாரேன்!.."

காலையில் அவன் முடிவு கட்டுயிருந்த தீர்மானம் மீண்டும் நினைவில் எழுந்தது. 'இனிமேல் சாப்பாடு தயார் பண்ணுகிற சோலி விட்டுச்சு. சொக்கப்பனும் சுறுசுறுப்பாக வேலே வெட்டியைக் கவனிச்சுக்குவான்... என்னமோ மருமகப் பொன்னு பொன்னம்மா வீடு மிதிக்கிற வேலே கூடிவர வேணும்.

சாப்பாட்டு ஏப்பம் ஒய்வு கண்டவுடன், ...தம்பி. இத்தனே நாளேக்கப்பறம் இன்றைக்குத்தான் வாய்க்கு ருசியாகச் சாப்பிட்டேன்; இனிமேல் இதுமாதிரியே சாப்பிடலாம் நீயும் நானும், வருகிற மாசத்திலிருந்து ...பொறக்கற மாசம் ஒனக்குக் கண்ணுலமாக்கும்...... ஆமாம்; பொண்ணு பொன்னம்மாவே தான்!... என்று விளக்கம் தந்தான் கருப்பன்,

புதுக்கோட்டைக்குப் புறப்பட எண்ணினான் கருப்பன். ஏழுநாழிகைப் பொழுது இருக்கும்போதே எழுந்துவிட வேண்டும் என்பது அவன் திட்டம். கட்டுச் சோறு தயாரானது. சிம்ணி விளக்கை எடுத்துக்கொண்டு சென்று மிளகாய்ப் பானைக்குள் கையை விட்டான். தேடிவந்த தங்கத் தாலியையும் எடுக்க வேண்டாமா? மறுவினாடி, தேள் கொட்டினாற் போலத் துடித்துப்போனான். தேள் அதனுள் இருந்தால்தானே? பாவம். அவன் பத்திரப் படுத்திவைத்திருந்த தாலியும் சங்கிலியும் அங்கே இருக்க வேண்டாமோ?... எங்கே மறைந்ததோ?

சொக்கப்பன் குறட்டை ஒலி பரப்பிக் கண் வளர்ந்து கொண்டிருந்தான்.

...ஏலே, சொக்கப்பா! மிளகாய்ப் பானையிலே போட்டிருந்த தங்கத் தாலியும் சங்கிலியும் காணாமல் போயிருக்கே? நீ எடுத்தியாடா?''

கண்களைத் துடைத்தபடி ஒருமுறை தந்தையை ஏற இறங்கப் பார்த்தான் மகன்.

"ஆமாம், நான்தான் எடுத்தேன். புதுசா மாத்தி வந்திருக்கிற வாத்தியார் ஐயா வீட்டுது அது. உடைமைக் காரங்ககிட்டே மத்தியானம் சேர்த்துப்புட்டேன்! ...நம்ப பொருளே நமக்குத் தங்கவில்லை!.. அயலவங்க சொத்து தங்குமா? இல்லை, நம்ப அதுக்கு ஆசைப் படறதுதான் நியாயமா? "

அந்தஅடி நெற்றிப்பொட்டில் மாத்திரம் விழவில்லை உள்ளத்தில் விழுந்தது. ஆகவே, கருப்பனின் கிழடு தட்டிய உடல் துடித்தது.

"அப்பா!..."

" சொக்கப்பா! அந்த நகையைப் பற்றி உங்கிட்டே கேட்டு, அதை உடையவங்ககிட்டே சேர்ப்பிக்கத்தான் விசாரிச்சேன்!" என்றான் கருப்பன். அவனுடைய மனச் சாட்சி சிரித்த சிரிப்பிலே, அவன் தன்னை மறந்ததோடு சற்றுமுன் மனச்சாட்சி தந்த வேதனையையும் மறக்க முயன்றான்!

விடிந்தது.

கருப்பனின் விழிகள் சிவந்திருந்தன.

"அப்பா ராத்திரிமுச்சூடும் தூங்கலையா?"

"ஏன், தூங்கினேனே?"

"ம்!... பொன்னம்மா கொஞ்ச நேர முந்திவந்து அஞ்சு ரூபாய் கொடுத்துட்டுப்போச்சு!"

"ஏன்?"

"நீங்க புதுக்கோட்டைக்குப் போகணுமின்னீங் களே? அதுக்குக் கைச்செலவுக்கு!"

"பொன்னம்மா!" என்றதும், முன்பு கட்டிய கோட்டை தகர்ந்த சம்பவத்தை நினைத்தான் கருப்பன். 'இனி என் மவனுக்கு எப்படிக் கண்ணாலம் கட்டிவைக்கப் போறேன்?'

"கண்கள் கலங்கின: "சொக்கப்பா! நான் புதுக் கோட்டைக்குப் போகலை!" என்றான்.

அப்பொழுது—

"இந்தாங்கப்பா!" என்று சொல்லி ஏதோ ஒன்றை நீட்டினான் மகன், தந்தையிடம்.

கருப்பனுக்கு தன் கண்களையே நம்ப முடியவில்லை. இரட்டை வடச் சங்கிலியில் பிணைக்கப்பட்ட அந்தத் திருமங்கல்யம் பளபளத்தது!

"ஏது தம்பி இது?"

"புது வாத்தியாரு தந்தாரு? பழைய டாக்டர் ஐயா இந்த வாத்தியார் ஐயவோட ஊர்தானும். கொடுத்தனுப்பி யிருக்காங்க!"

"நம்முடையது இல்லையே இது? நான் முந்திக் கொடுத்தது வெறும் தாலிப் பொட்டு மட்டுந்தானே?"

"அப்பா என்னை மன்னிச்சிடுங்க. முதலிலே நான் சொன்னது பொய். இருங்க டாக்டர் ஐயா கொடுத்து அனுப்பியிருக்கிறு! கடுதாசியைப் படிச்சுக் காட்டுகிறேன்!"

சொக்கப்பன் படிக்கத் தொடங்கினுன்:
"ஏகாலி கருப்பனுக்கு,

டாக்டர் நாகசுந்தரம் எழுதியது.

முதலில் நீ என்னை மன்னித்துக்கொள். என் இதயத்தை எங்கோ அடகுவைத்துவிட்டு, உன்னுடைய மனைவியின் தாலியை அடகாக ஏற்று, நான் உன் பெண்சாதிக்கு வைத்தியம் பார்க்கவந்து அரைகுறையாக விட்டுச் சென்ற அந்தக் குற்றம் என்னைப் பல நாட்களாக வாட்டியது. அங்கிருந்து மாற்றலாகி வந்ததும், என் மனைவிக்குத் திடுதிப்பென்று விஷக் காய்ச்சல் வந்தது. அவளுடைய கழுத்தில் நான் கட்டிய தாலி என்னைநோக்கி எக்காளமிட்டுச் சிரித்தது. நான் உன்னிடம் இதயமின்றி நடந்த தவறுதலுக்கு எங்கே தெய்வம் என் தாலியை என் மனைவிக்கு நான் பூட்டிய

மாங்கல்யத்தை என்னிடமே சேர்ப்பித்து என் அன்பு மனையாட்டியைப் பிரித்து விடுமோ என்று அஞ்சி அழுதேன். அப்போதுதான் என் குற்றத்தையும் உணரலானேன். என் மனைவி பிழைத்து எழவேண்டு மென்றும், உடனேயே உன்னிடம் காட்டியஈவிரக்கமற்ற தன்மைக்குப் பரிகாரம் செய்வதாகவும் ஆண்டவனிடம் பிரார்த்தித்தேன். என் மனைவி பிழைத்தாள்! அன்றைக்கு என்னிடம் நீ தந்த தாலியைக் கொண்டே அதைக் கொஞ்சம் அழகுபடச் செய்திருக்கிறேன்; தாலியுடன் இணைத்திருக்கிற இரட்டைவடச் சங்கிலிதான் என்னுடைய பரிகாரப் பொருள்! உன் மனைவி குண மடைந்திருப்பாளென்று நம்புகிறேன். அடுத்தவாரம் உன் பெயருக்கு ஐம்பது ரூபாய் பணமும் அனுப்பி வைக்கிறேன்

கருப்பன் கண்ணீர் பெருக்கினான்; மானசீகமாகத் தோன்றிய டாக்டரைக் கைதொழுதான். அவன் வாய், "ராக்காயி! ராக்காயி!" என்று புலம்பியது.

"அப்பா!"

"ஒண்ணுமில்லே சொக்கப்பா! பொன்னம்மாகிட்டே சொல்லி அதோட அப்பனைவரச் சொல்லு!" என்றான் கருப்பன்.

# மொய்ப் பணம்

“பூரணி!” “என்று”கூப்பிட்டுக் கொண்டு வந்த மாணிக்கம், தோள்மீது கிடந்த ஏர்க் கலப்பையைக் கீழே இறக்கி கைப்பிடிப்பிலிருந்த செவலைக் காளைகள் இரண்டையும் தொழுவத்தில் கட்டினான். வேலையெல்லாம் முடிந்தமாதிரி ஒரு வகை நிம்மதி கனிந்த மனசுடன், தொட்டியில் கழுநீர் ஊற்றி, அத்துடன் புண்ணாக்கையும் போட்டு‘ பிறகு மாடுகளுக்குத் தண்ணீர் காட்டினான்.

“மச்சான், கை காலை அலம்பிக்கிட்டு வாங்க சுடு கஞ்சி குடிக்க அப்பாலே அது ஆறிப்போயிடப் போவுது பச்சைத் தண்ணியாட்டம்......” என்று அழைத்தாள் கொண்டவள்.

ஏலே பூரணி, பார்த்தியா மறந்துப்பிட்டேன். அடுத்தவாரம் ஆடிப் பதினெட்டில்லையா, அதுக்கு என் தங்கச்சி பூவம்மாவையும் அது புருசன் செல்லையாவை யும் பதினெட்டாம்பெருக்குக்கு நம்ப வீட்டுக்கு அழைக்க

வேணும். நேத்துச் சந்தையிலே காய்கறி வியாபாரத் திலே கிடைச்ச லாபப் பணம் இருபதையும் பத்திரமா வச்சிருக்கேன், விருந்தாளிங்க ரெண்டுபேருக்கும் விருந்து வைக்கிறதுக்கு, தங்கச்சியும் அது மச்சானும் வந்துட்டா அப்புறம் வீடே ஒரே குஷாலாகத் திமிலோகப் பட்டுப் போயிடும்...'' என்று நிறைவுப் பெருக்குடன் சொல்லிக்கொண்டு வந்த மாணிக்கம்' தலையை நிமிர்த்திப் பூரணியைப் பார்த்தான். கணப் பொழுது அவன் திகைத்துப் போனான்.

''மச்சான் .....'' என்று ஏதோ பதில் சொல்ல வாயெடுத்த அவள் மீண்டும் பேசாமடந்தையானாள். அவள் கண்களின் விளிம்பில் பனித் திரை லேசாகப் படர்ந்தது.

''பூரணி, எதுக்கு இந்த நீலி வேஷமெல்லாம்?'' என்று கர்ஜித்தான் மாணிக்கம், மனைவியின் மௌனத் திற்கு அவன் தப்பான அர்த்தத்தை மனசில் கொண்டு விட்டான். அதாவது தன் மனைவி தன் தங்கை மச்சான் இருவரையும் ஆடிப்பெருக்கிற்கு அழைப்பதற்கு இணங்கவில்லை என்று.

''மச்சான் என்னைப்பத்தி ஏதாவது தப்பா எண்ணிப் பிட்டிங்களா? உங்க தங்கச்சியையும் அது புருஷனையும் ஆசையோடே வரவேற்கிறதிலே உங்களை விட எனக் குத்தான் ரொம்பவும் சந்தோசம். ஆனா நம்ப ஆசை எண்ணம் ஈடேறத்தான் வழிகிடைக்கல்லே, உங்க தங்கச்சியை அது புருஷன் நேத்தி இரவு அடிச்சுப் போட்டு வீட்டை விட்டுத் துரத்திப்பிடுச்சாம். நீங்க காலம்பெற வீட்டை விட்டு வயல் கரைக்குப் போனதும் பூவம்மா இங்கே வந்துச்சு கண்ணீரும் கம்பலையுமாக, வயலிலேயிருந்து களைச்சுப்போய் வந்ததும் வராதது

மாக இந்த சங்கதியை உங்ககிட்டேச் சொன்ஞ அப்புறம் சோறுகூடக் குடிக்க மாட்டீங்களென்னு இப்பத்தான் காதிலே போடச் சொன்னது நம்ப பூவம்மா. அதை எப்படி சொல்லுறதுன்னு புரியாமத் தான் நான் முழிச்சுக்கிட்டு நின்னேன்......மச்சான்...'' என்று கலக்கத்தோடு கூறினுள் பூரணி.

நின்ற இடம் நிலே பெயர்ந்து விட்டாற்போல நடுங்கிப்போனுன் மாணிக்கம். "ஆசையோடே தங்கச் சியை அழைத்துவரத் திட்டம் போட்ட எனக்கு இதுவும் ஒரு சோதனை போலே, தெய்வமே...''என்று மனம் நொந்தான்.

"பூவம்மா'' என்று அலறிக் கொண்டு உள்ளே ஓடினுன் மாணிக்கம். அடித்து வைத்த தங்கச் சிலேயாக அவன் தங்கை பூவம்மா கன்னங்களில் பூங்கரம் புதைத் தவளாக அமர்ந்திருந்தாள்.

',தங்கச்சி!''

''அண்ணுச்சி!''

"பூவம்மா, ஏதுக்கு உன்னைத் துரத்திப்பிட்டான் மச்சான்' நீ ஏதாச்சும் தப்புத் தண்டாவாப் பேசினியா மச்சான்கிட்டே?'' என்ருன் மாணிக்கம்.

"அண்ணுச்சி, நம்ப குலதெய்வத்துமேலே ஆணே வச்சுச் சொல்லுகிறேன். நான் கடுகத்தனே தப்புகூடச் செய்யல்லே' மச்சான்தான் இருந்திருந்தாப்பிலே ஒண்ணுரெண்டுன்னு ரூபா சதா வந்து கேட்கும். நானும் மறு பேச்சுப் பேசாமல் கையிலேமடியிலே வச்சிருக் கிறதை மறைக்காமக் கொடுத்துப்பிடுவேன். இப்படித் தினமும் அதுக்கு பணம் தேவைப்படுகிறது. எதுக்

குன்னு யோசிச்சுக்கிட்டிருக்கிறதப்போ தான் எனக்கு துப்பு துலங்குச்சு, மச்சான் சோடா கம்பெனியில் பார்க்கிற வேலையையும் வுட்டுப்பிட்டுஊர்க் கோடி அரசமரத் தடியிலே சீட்டுப் போடுதாமிங்கிற ரகசியத்தையும் ஒருத்தி மூலம் அறிஞ்சேன். நேத்திக்குப் பொழுது சாய்ந்ததும் வந்து "பூவம்மா, அவசரமா பணம் கொஞ்சம் தேவைப்படுகிறது. உன் கழுத்துச் சங்கிலியைக் கொஞ்சம் கொடு. அடகு வச்சுப் பணம் வாங்கிக்கிறேன், மறுபடியும் சங்கிலியைப் பிறக்கிற மாசத்துக்குள்ளாற மீட்டுப்பிடறேன்" என்று தாஜாப் பண்ணுச்சு. நான் மாட்டேன்னேன், அவ்வளவுதான்!" என்று விக்கலுக்கும் விம்மலுக்கும் மத்தியில் ஒருவாறு தன் கதை'யைக் கூறி நிறுத்தினுள் பூவம்மா.

"பூவம்மா, கண்கலங்காதே. இந்த மாணிக்கமும் என் காணி நிலமும் இருக்கிறமட்டும் உனக்குக் கவலையே வேண்டாம். இங்கேயே இருந்துடு. அந்தப் பயல் செல்லையா வந்து உன்னைத் திரும்ப அழைச்சுக்கிட்டுப் போக வந்தாலொழிய நீ உன் மச்சானைப்பத்திக் கனவிலே கூட எண்ணுதே" என்று வாய்விட்டு உறுமினுன் மாணிக்கம்.

பூவம்மா வாய் திறவாமல் ஏனே அப்படியே ஸ்தம்பித்து நின்ருள்.

மாங்குடியிலிருந்து அழகான கூட்டு வண்டி ஒன்று 'ஜல் ஜல்' என்று சதங்கைப் பண்பாட பூவத்தகுடு ராக்காச்சி கோவில் பொட்டலை அடைந்தது. பொட்டல் அப்பொழுது மக்கள் திரளில் கலகலத்தது. ராக்காச்சி அம்மன் கோவிலுக்கு முன் கூட்டு வண்டி நின்றது; அதிலிருந்து மாணிக்கம், அவன் மனைவி பூரணி, அவன் சகோதரி பூவம்மா மூவரும் இறங்கினுர்கள்.

இளஞ் சூரியன் இளமை மாறிக் கொண்டிருந்தான். அம்மனைத் தரிசித்தார்கள். அர்ச்சனையும் நடந்தது. கட்டுச் 'சோற்றை' 'மூவருமாக ஒரு கை, பார்த்தார்கள். "'உன் மச்சானும் இந்தத் திருநாளைக்கு நம்பளோடே இருந்திருந்தா எம்மாம் சந்தோசமா இருக்கும், பூவம்மா என்றாள் பூரணி. பூவம்மாவும் அதைப் பற்றித்தானே நினைத்து மனம் புழுங்கிக் கொண்டிருந்தாள் எந்நேரம் பார்த்தாலும்!

வானதிர வெடித்த ஜனங்களின் ஆரவாரக் கூச்சல் கேட்டது. பூவம்மா திரும்பினாள். எதிரே பார்த்தாள். கொஞ்ச தூரத்தில் கூட்டம் நெரிசல் பட்டது. அங்கு சிலம்பம் விளையாட்டுப்போட்டி நடந்துகொண்டிருந்தது.

பூவம்மா அங்கு நடந்துகொண்டிருக்கும் சிலம்ப ஆட்டத்தில் நாட்டம் காட்டவில்லை. அவள் நினைவு முன்பு என்றைக்கோ நடந்த சிலம்ப விளையாட்டில் கட்டுண்டிருந்தது. ஆம்; அதுதான் அவளை அவள் மச்சான் செல்லையாவிடம் பிணைத்துவிட்ட சம்பவங்கூட!

இதே போல, திருவிழாவில்தான் அன்றைக்கு மாணிக்கமும் செல்லையாவும் சந்தித்தார்கள், கைகளில் தாங்கிய நீண்ட மூங்கில் கழிகளுடன், அங்கு பூவம் மாவும் இருந்தாள். காளைகள் இருவருக்கும் பந்தயம் முளைத்தது. ஆட்டம் துவங்கியது. செல்லையாவுக்கு ஏற்கனவே பூவம்மாவைத் தெரியும். அவனுக்கு அவள் பேரில் காதல் கண்உண்டு. அவர்களிருவருக்குள் நடந்த போட்டிப் பந்தயம் தன் காதலை நிர்ணயிக்கும் ஒரு பரீட்சையாக வாய்க்குமென்ற உண்மையை அப் பொழுது செல்லையா அறியவே இல்லை, சிலம்பம் முழங் கியது. இருஜோடிக் கம்புகளும் சந்தித்தன; பிரிந்தன; பின் கூடின. கூட்டத்தில் கைதட்டல் கடைசியில்

வெற்றிக்கு முடிவு கூறியது. மாணிக்கம் வெற்றி பெற்ருன். வெற்றி பெற்றவன், தோற்ற செல்லேயா வைத் தோளில் அலாக்காகத் தூக்கி வைத்துக்கொண்டு கூத்தாடினன்.

''செல்லேயா மச்சான்' நான் இன்னிக்கு கெலிச் சதே உன்ருலேதான். என் தங்கக்சி உன்னேயே விழுங் கிடருப்பிலே பார்க்கப் போக, நீயும் பொம்பளேக் குட்டிக்கு இந்த ஆண்பிள்ளே சளேக்கலாமாங்கிற பவி சிலே அதையே வச்ச கண் எடுக்காமப் பார்க்கப் போய்த் தானே ஐயா செயிச்சாரு! நியாயமாப் பார்த்தாக்க நான் உனக்கும் தங்கச்சி பூவம்மாவுக்கும் ரொம்பவும் கடமைப் பட்டவன், இல்லேயா மச்சான்......'' என்று வெகு நாள் தோளோடு தோள் பழகியவன் போலப் பேசித் 'தமாஷ்' பண்ணினன் மாணிக்கம் பூவம்மாவும் செல்லேயாவும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள்.

அன்றைக்குச் சந்தித்த பூவம்மா—செல்லேயா இரு வரையும் திரும்பவும் மணவறையில் கொட்டுமேளம் முளங்கக் கோலாகலமாகச் சந்திக்கச் செய்த பெருமை மாணிக்கத்தைத்தான் முழுக்க முழுக்கச் சேர்ந்தது. அழகும் அழகும் சேர்ந்தது; இதயமும் இதயமும் சேர்ந்தது.

''தங்கச்சி!'' என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான் மாணிக்கம். தலேமீது வைத் திருந்த மூட்டையைக் கீழேவைத்து அதைப் பிரித்தான். அதற்குள் அவன் மனேவி பூரணி அங்கு தோன்றி அவ னுக்கு ஒத்தாசை பண்ணினள்.

''தங்கக்சி.........!'' என்று அழைக்கத் துவங்கிய மாணிக்கம் மறு கணம் என்னவோ நினேத்துக்கொண்ட வன் மாதிரி சலனமற்று அப்படியே நின்ருன்.

"பூவம்மா ஒனக்குச் சேதி தெரியுமா? உன் புருசன் காலம்பெற சந்தையிலே கண்டு உன்னை அங்கே கூட்டி வந்து விடுறியா இல்லையான்னு சவடால் பண்ணினான். அவன் திமிருப் பேச்சுக்கு இந்த மாணிக்கமா மசிஞ்சு கொடுப்பான்! ஆத்திரம் கொண்ட மட்டும் பேசித் தீர்த்தேன். அவனும் பேசினான். கடைசியாக எங்களுக்குள்ளே பேச்சு முத்திக் கைகலப்பு ஏற்பட்டுச்சு செல்லையாப் பயலுக்குச் செம்மையான அடி. மூச்சுப் பேச்சில்லை. பாவம், யாரோ அவனுக்குத் தெரிஞ்சவங்க வண்டியிலே வச்சு ஜில்லாப் போர்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிப் போயிருக்காங்க. உன் மச்சானுக்கு இப்பவாவது புத்தி வந்திருக்கும், என்ன தங்கச்சி, உன்னை அன்னிக்கு அவன் கைநீட்டி அடிச்சு வீட்டை விட்டுத் துரத்தினதுக்கு, இப்போ அவனுக்கு நல்ல பாடம் வந்திருக்கும், ஊம்......" என்று சொல்லி வீறுப்புடன் அட்டகாசச் சிரிப்பொன்று சிரித்தான் மாணிக்கம்.

"ஐயோ!" என்று அலறியவாறு அடிசாய்ந்த மரமாக மூர்ச்சித்து விழுந்தாள் பூவம்மா.

"தங்கச்சி!" என்று ஓடிய மாணிக்கம் அவளைத் தாங்கிக் கொண்டான் கைபிடிப்பாக. கட்டிலில் அவளைப் படுக்க வைத்தான். மூடிய கண்கள் மூடியவாறிருந்தன; அவளுக்குப் பேச்சு மூச்சில்லை; நினைவு திரும்பவில்லை.

மாணிக்கத்துக்குக் கண்களில் கண்ணீர் முட்டி நின்றது. "பூரணி, தங்கச்சியை ஜாக்கிரதையாப் பார்த்துக்க. நொடியிலே ஓடிப்போய் வைத்தியரைக் கையோடே கூட்டியாந்திடுறேன்" என்று சொல்லி விட்டு, ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினான் மாணிக்கம்.

"பூவம்மா! பூவம்மா!"

பூரணி அழகான அவள் முகத்தை வருடிக்கொண்டே மெல்ல அழைத்தாள்.

"அண்ணி!" என்று அழைத்துக் கொண்டே மெல்ல படுக்கையில் எழுந்து உட்கார்ந்தாள் பூவம்மா. "அண்ணி அண்ணாச்சி எங்கே காணோம்!" என்று மறுபடியும் வினவினாள். பூரணி விவரத்தைச் சொன்னாள்.

"அண்ணி, எனக்கு நீங்க ஒருஉதவி செய்வீங்களா? என்ன இருந்தாலும், என்னதான் என்னை அநியாயமா அடிச்சு வீட்டை விட்டுத்தான் துரத்திப்பிட்டாலுங்கூட என் மச்சான் என் புருஷன்தானே? கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருசன்னு சொல்லுவாங்களே தெரிஞ்சவங்க! அன்னிக்கு என் மச்சான் என் சங்கிலியைக் கேட்டதுக்கு அப்பவே அதைக் கழற்றிக் கொடுத்திருந்தா ஏன் இம்மாதிரி தொந்தரவு வரப்போகுது என் கழுத்துச் சங்கிலி இதோ இருக்குது. இதை அடகு வச்சுப் பணத்துக்கு ஏற்பாடு பண்ணுங்க. மச்சான் என்ன பாடுபடுமோ ஒண்டியாக. அதுக்குச் சமயத்துக்கு பிரயோசனப்படாத என் சங்கிலி எதுக்கு என் கிட்டே இருக்க வேணும்? இப்பவே என் ஆசை மச்சானைப் பார்த்தாத்தான் என் உசிர் என் மேனியிலே தங்கும் அண்ணி!" என்று ஒரே மூச்சில் சொன்னாள் பூவம்மா

பூரணி மின்வெட்டுப்போல ஏதோ யோசித்துவிட்டு அவளை ஊன்றிப் பார்த்தபடி, "பூவம்மா! உடம்பை அலட்டிக்காதே, அம்மா! உன்சங்கிலியை எடுத்துக்கிட்டு இப்பவே பணம் வாங்கி வருகிறேன். பேசாமத் தூங்கு! விடிஞ்சதும் 'அவர்' வந்ததும் ஒன்னைக் கொண்டுபோய் உன் புருசன் கிட்டே விடச் சொல்லுறேன். கூட்டு வண்டியிலே வைத்தியர் குரல் மாதிரி கேட்குதே !" என்று சொல்லித் தன் பேச்சுக்கு முற்றுப்புள்ளியிட்டாள்.

அங்கு வந்த வைத்தியர், ஹரிகேன் விளக்கைத் திண்ணையில் வைத்துவிட்டு, பூவம்மாவை நாடி பிடித்து பார்த்தார்; ஏதோ ஒன்றைச் சொன்னார் ரகசியமாகப் பூரணியிடம். அவள் புன்னகை பூத்தாள்.

"பூரணி, சொல்ல மறந்துப்பிட்டேன். உன் புருசன் அவசரமா அசல் ஊருக்குப் போறானும். பூவம்மாவைப் பத்திரமாகக் கவனிச்சுக்கச் சொன்னான், படிச்சுப் படிச்சு. பூவம்மா, போயிட்டு நாளைக்கு வருறேன் அம்மா... இனி ஒனக்கு நல்ல வேளைதான்... சிரிச்சுக்கிட்டு இரு!" என்று சொல்லிச் சென்றார் வைத்தியர். அவர் காதுடன் காதாகத் தன்னிடம் சொன்ன ஒரு சொல் அவளை இன்பலோகத்திற்குப் புஷ்பக விமானத்தில் வைத்துத் தூக்கிச் சென்றது.

"அண்ணி, இந்தாங்க சங்கிலி... போய்வாங்க" என்று தன் கழுத்துச் சங்கிலியைக் கழற்றி அவளிடம் கொடுத்தாள் பூவம்மா.

விடிந்தது பொழுது; உதய ஒளியின் முதற் கதிர் கோலம் பரப்பி யிருந்தது கண்ட இடமெங்கும்.

பூவம்மா வாசலிலேயே உட்கார்ந்துவிட்டாள். கூடப் பூரணியும் இருந்தாள். தன் கணவன் இரவு முழுதும் வீடு திரும்பாதது புதிராகத்தான் தோன்றியது பூரணிக்கு.

அன்றுதானே பதினெட்டாம்பெருக்கு! எட்டிப் பிடிக்கும் தொலையில் ஓடிக்கொண்டிருந்த காவிரியில் குளித்து முழுகிக் கும்பிட்டுத் திரும்பிக்கொண்டிருந்தார்கள் பெண்கள். மற்றப் பண்டிகைகள் மாதிரி அன்றும் ஒரு சுபதினம்! விருந்துக்கும் வேடிக்கைக்கும் அன்று பஞ்சமிராது.